பக்கங்கள்: 24
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 30 | ஞாயிற்றுக்கிழமை 14.01.2018 | கதிர் 68

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

## பொறுப்புக் கூறலில் தொடர் தாமதம்;
# ஜெனீவாவில் இலங்கைக்கு காத்திருக்கிறது கடும் சிக்கல்!

### தயவு தாட்சணியம் காண்பிக்கமாட்டார் ஐ.நா. ஆணையாளர் அல் ஹுசைன்



ஜெனிவா, ஜனவரி 14

**பொறுப்புக் கூறலில் இலங்கை அரசு தொடர்ந்து தாமதம் காட்டி வருவதால் அடுத்த மாதம் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37 ஆவது கூட்டத்தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் தனது கடுமையான அதிருப்தியை - கண்டனத்தை - வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

பக்கம் 22 >>>

பொங்கல் வாழ்த்துக்கள்
வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்கள், முகவர்கள் அனைவருக்கும் காலைக்கதிரின் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
உரித்தாகுக!

## 2021 வரை மைத்திரி பதவியில் நீடிக்கலாம்

### சுதந்திரக் கட்சியும் அறிவிப்பு



கொழும்பு, ஜன. 14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்பதவிக்காலம்தொடர்பாக தென்னிலங்கையில்கருத்து முரண்பாடுகள் நிலவிவரும் நிலையில், எதிர்வரும் 2021ஆம்

பக்கம் 22 >>>

## மேல் மாகாண முதல்வரை எச்சரிக்கிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜன .14

பொய்யான கருத்துக்களைப் பரப்புவதை மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப் பிரிய நிறுத்திக் கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இல்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செய லாளர் கோட்டாபய

பக்கம் 22 >>>

## இது ரகசியம் அல்ல!

இந்தத் தேர்தலை ஒட்டி, அச்சக நண்பர் ஒருவர் தெரிவித்த கருத்து இது. அவரது அச்சகத்தில் மிக விரைவாகப் பல்வேறு

பக்கம் 03 >>>

## ஆபத்தான போதைப்பொருளுடன் கொழும்பில் மாட்டினார் இந்தியர்

கொழும்பு, ஜன. 14

கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு தொகைப் போதைப் பொருள் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்படும்விஷத் தன்மைகொண்டபோதைப் பொருள் ஒன்றே இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

பக்கம் 22 >>>

## இந்தியாவுடன் கூட்டுவைத்து புலிகளைத் தோற்கடித்தோம்!

### மனம் திறக்கிறார் கோட்டாபய

கொழும்பு, ஜன. 14

புலிகளுடனானபோரை நிறைவுக்குக் கொண்டு வருவதில், இந்தியாவுக்கு இருந்த முக்கியத்துவத்தை நாம் நன்றாக அறிந்து வைத்திருந்தோம். அதன்படி இந்தியாவுடன் இணைந்து போர் வெற்றிக்கான இராணுவத் தந்திரோபாயங்களையும் மூலோபாயங்களையும் வகுத்துப் புலிகளைத் தோற்கடித்துப் போர் வெற்றியையும் பெற்றோம்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ.

பக்கம் 22 >>>

## கிளிநொச்சியில் 11 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன. 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள்தொடர்பில் இதுவரை

பக்கம் 22 >>>

## நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் தடுத்துவைப்பு!

### கட்டுநாயக்கா ஊடாகக் கொழும்பு வந்தவேளை

கொழும்பு, ஜன. 14

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் ஒருவர், இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, நாடு கடத்தப்படுவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் இலங்கை அதிகாரிகளை மேற்கோள் காட்டி, ஆங்கில நாளிதழ் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், சுரேஷ்நாத் இரத்தின

பக்கம் 22 >>>

## கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

### வவுனியாவில் நேற்றுத் திரண்டனர் காணாமற்போனோரின் உறவினர்கள்



வவுனியா, ஜன. 14

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமற்போனோர் விடயத்தில் தமிழ்த்

பக்கம் 22 >>>

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
உங்கள் நாவிற்கு இனிய ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழ நாடுங்கள்
லிங்கன் கிறீம் ஹவுஸ்
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7327
இல.526, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4945
இல.213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 221 6660
No.6055 Steeles Ave E, Toronto, ONT, MIX OA7, Canada. T.P: 001416292546
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைச் சீனாவிடம் செல்ல அனுமதிக்கலாகாது

## கூறுகிறார் இந்தியப் படைத் தளபதி

கொழும்பு, ஜன.14

இலங்கை போன்ற நாடுகள் சீனாவை நோக்கிச் செல்வதை அனுமதிக்கக் கூடாது என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவ நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் தெரிவித்துள்ளவை வருமாறு:

சீனா வலிமையான நாடாக இருக்கலாம். ஆனால், இந்தியா பலவீனமான நாடு அல்ல. பாகிஸ்தான் எல்லையின் மீதுள்ள கவனத்தை இந்தியா சீனாவின் பக்கமும் திருப்ப வேண்டிய தேவை உள்ளது.

எமது அயல்நாடுகள் சீனாவை நோக்கி நகர்வதை அனுமதிக்கக் கூடாது. அயலவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கையை இந்திய அரசு காத்திரமாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

சீனாவைக் கையாளுவதற்கான பரந்துபட்ட மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, நேபாளம், பூட்டான், மியன்மார், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளை, இந்தியா தன் பக்கம்



தக்கவைத்துக் கொள்ளவேண்டும்.

இந்த நாடுகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதற்கு இந்தியா முழுமையான முயற்சிகளை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# கொழும்பில் 18 மின்சார பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் இ.போ.ச.

கொழும்பு, ஜன.14

கொழும்பு நகரின் பயணிகள் போக்குவரத்துக்காக 18 மின்சார பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த இலங்கைப் போக்குவரத்துச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை 50 மின்சார பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 கோடி ரூபாவைத் திறைசேரியிடமிருந்து பெற்றுள்ளது.

இதனைப் பயன்படுத்தி முதற்கட்டமாக 18 பஸ்களைக் கொள்வனவு செய்யவிருப்பதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமல் சிறிவர்த்தன தெரிவித்தார் எனத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மின்சார பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கபட்டது. (ஐ)

# மைத்திரியின் முடிவால் ஐ.தே.க. கடும் அதிருப்தி

கொழும்பு, ஜன.14

தமது பதவிக்காலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கம் கோரியமை, அவரை ஆட்சியில் அமர்த்திய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிவில் சமூகத்துக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல –

தமது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது என்று உயர்நீதிமன்றத்திடம் ஜனாதிபதி விளக்கம் கோருவதற்கு முன்னர், அரசின் பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தால் நல்லது. இது அரசின் பங்காளிகளிடையே அதிருப்திகளை ஏற்படுத்தியுள்ளது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஆறு ஆண்டுகள் என்று வந்தாலும் கூட, 5 ஆண்டுகளின் பின்னர், ஜனாதிபதி முன் கூட்டியே தேர்தலை அறிவிக்கும் வாய்ப்பு உள்ளது – என்றார். (ஐ)

# மைத்திரிபால, ரணிலின் படங்களையும் அகற்றுக

## பிரசன்ன ரணதுங்க கோரிக்கை



கொழும்பு, ஜன.14

நாடுமுழுவதும்உள்ள ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் படங்கள் அடங்கிய சகல காட்சிப் படுத்தல்களையும் உடன் அகற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு உத்தரவிடுமாறு கூட்டு எதிரணியின் ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரைக் கோரியுள்ளார்.

எதிரணியின் படங்களைக் காட்சிப்படுத்தும்போது மட்டும் தேர்தல் சட்டங்களை ஞாபகப்படுத்தும் பொலிஸாருக்கு, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் படங்களையும், நாடாளுமன்றத்திலுள்ள அரச சார்பு உறுப்பினர்களின் படங்களையும் காட்சிப்படுத்தும்போது மட்டும் தேர்தல் சட்டங்கள் ஏன் நினைவுக்கு வருவதில்லையெனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

# தேர்தலுக்குப் பொலிஸாரை தயார்ப்படுத்துகின்றார் பூஜித

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பக்கச்சார்பின்றிக் கடமையாற்றவும், தேர்தல் சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவும் சகல பொலிஸ் உத்தியோகத்தர்களையும் அறிவூட்டும் நிகழ்வுகளை மாகாண மட்டத்தில் முன்னெடுப்பதற்குப் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேல் மற்றும் வட மத்திய மாகாணப் பொலிஸாருக்கான செயலமர்வுகள் தற்போது நடைபெற்று முடிந்துள்ளன எனவும் ஏனைய மாகாணங்களுக்கு செயலமர்வுகள் விரைவில் நடைபெறவுள்ளன என்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (ஐ)

# கருஜயசூரியவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, ஜன.14

சபாநாயகர் கருஜயசூரியவின் நடவடிக்கைக்கு எதிராகக் கூட்டு எதிரணியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைக்க தயாராகிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட பதற்ற நிலைமைக்குச் சபாநாயகரின் நடவடிக்கையே காரணம் எனக் கூட்டு எதிரணி சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன என அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உடன்படும் சில விடயங்களைக் கூட, நாடாளுமன்ற அவர்வுகளில் சபாநாயகர் மாற்றுகிறார் எனவும் மஹிந்த குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

சபாநாயகர் சபையில் சகல கட்சிகளுக்கும் பொதுவாகச் செயற்பட வேண்டியவராக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் கூட்டு எதிரணி குற்றஞ்சாட்டியுள்ளது.

கூட்டு எதிரணி கொண்டுவரவுள்ள சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு மக்கள் விடுதலை முன்னணி உட்பட அரசிலுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஆதரவு வழங்கவுள்ளனர் எனவும் கூட்டு எதிரணி வட்டாரங்கள் குறிப்பிட்டன. (ஐ)

# கல்வி அடைவு மட்டத்தில் முதலிடம் பிடித்த வடக்கு

## மாகாணக் கல்வி அமைச்சர் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன.14

கல்வி அடைவு மட்டத்தில் 9ஆவது இடத்தில் இருந்த வடக்கு மாகாணம் தற்போது முதலாவது இடத்தைப் பிடித்திருக்கின்றது. வடக்கு மாகாண மாணவர்கள் வெவ்வேறு துறை ரீதியாக முதல் 10 இடங்களைப் பிடித்திருக்கின்றார்கள். கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது, வடமாகாணத்தின் கல்வித்துறையில் முன்னேற்றம் உள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாணக்கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணக் கல்வியின் அடைவு மட்டம் தொடர்பாகத் தற்போது சில முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. அந்தவகையில், எமது மாணவர்கள் பல்வேறு துறைகளிலும், சர்வதேச ரீதியில் பல பதக்கங்களையும் பெற்று, மாகாணத்தின் கல்விச் செயற்பாட்டை முன்னேற்றியுள்ளார்கள்.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியாக முதலாம் இடம் மற்றும் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலான முன்னேற்றத்தை வடக்கு மாகாணம் கண்டுள்ளது.

வடக்க மாகாணம் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருப்பதாக யாராலும் கூற முடியாத முன்னேற்றத்தைப் பெறவேண்டும். கடந்த வருடம் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த கல்வித்திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

– என்றார். (ஐ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கள் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில் -**

வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

கணேசபுரம் கிராமம் ஆகிய பிரதேசத்திலும் மின் தடைப்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# பொல்கஹாவலை மேம்பாலம் 17ஆம் திகதி பொதுமக்களிடம்

கொழும்பு, ஜன.14

பொல்கஹாவலையில் அமைக்கப்பட்டுவரும் மேம்பாலம் எதிர்வரும் 17 ஆம் திகதி பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதாகப் பெருந்தெருக்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

பெருந்தெருக்கள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டு மக்களிடம் ஒப்படைக்கப்படும் மூன்றாவது மேம்பாலம் இதுவென அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ரயில் போக்குவரத்துக் காரணமாக ஒரு நாளைக்கு 4 மணித்தியாலங்கள் பொல்கஹாவலை பிரதான பாதை மூடப்படுவதால் பெரிய வாகன நெரிசல் ஏற்படுவதற்குத் தீர்வாக இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இராஜகிரிய மேம்பாலம் மற்றும் கனேமுல்லை மேம்பாலம் என்பன கடந்த வாரம் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகத் தரக் கூடைப்பந்தாட்டத் திடல் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் திறப்பு

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட திடலை வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சரும் ஆளும் கட்சி உறுப்பினருமான தம்பிராசா குருகுலராஜா நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் சென் .ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் நிதியுதவியுடன் இந்தக் கூடைப்பந்தாட்டத் திடல் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டது.

கூடைப்பந்தாட்டத்திடல் திறந்த வைக்கும் நிகழ்வு மருத்துவர் கோபிசங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராசா, விளையாட்டுக்கள் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் சிறந்தவை. ஆரோக்கியமான விளையாட்டாகக் கூடைப்பந்தாட்டம் விளங்குகின்றது என்று கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை பெண் அதிபரை மண்டியிட வைக்கவில்லை

## ஊவா முதலமைச்சர் மறுப்பு

பதுளையில் உள்ள தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபரை முழந்தாளிட வைத்து மன்னிப்புக் கேட்க வைத்ததாக, தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர தச நாயக்க நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் –

இந்து மதத்தைச் சேர்ந்த அந்தப் பாடசாலைஅதிபர்ஏனையமதங்களைச்சேர்ந்த மாணவர்களைப் பாகுபாடாக நடத்துகிறார் என முறைப்பாடுகள் வந்தன.

எனவே அவரை எனது அதிகாரபூர்வ வதிவிடத்துக்குஅழைத்து,மாகாணக்கல்வி அமைச்சின்செயலர்,கல்விப்பணிப்பாளர் மற்றும் முறைப்பாடு செய்த பெற்றோர் முன்னிலையில் விசாரித்தேன்.

சமூக நல்லிணக்கத்தைக் குழப்பக் கூடும் என்பதால், அதிபர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று மாத்திரம் கேட்டுக்கொண்டேன். நட்புரீதியானகலந்துரையாடலுக்குப் பின்னர், பிரச்சினையைச்சுமுகமாகத்தீர்த்துக்கொண்டோம்.

எனினும், ஜே.வி.பி. மாகாணசபை உறுப்பினர்சமந்தவைத்தியரத்ன, எனது பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில், அரசியல்உள்நோக்கத்துடன் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார். அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பேன். –என்றார்.

அதேவேளை, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரான ஆர்.பவானியும், ஊவா முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

இரண்டுபெற்றோர்கள்செய்தமுறைப்பாடுகள் தொடர்பான விசாரணைக்காக, தாம் முதலமைச்சரை அவரது அதிகாரபூர்வ வதிவிடத்தில் சந்தித்தாகவும், நட்பு ரீதியாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொய்யான பரப்புரைகள் மூலம் அரசியல்வாதிகள் மலிவான அரசியல் இலாபம் தேட முனைகின்றனர் எனவும் பாடசாலைஅதிபர்பவானிகூறியுள்ளார்.

# மைத்திரிபால மீது அரசியல் கோபம்

## ஹரின் பெர்னாண்டோ சாடல்

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்குக் கொண்டு வந்த ஜனாதிபதி செய்யும் வேலைகளால் தனக்கு அரசியல் கோபம் ஏற்பட்டுள்ளது என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனக்குத் தற்போது அரசியல்ரீதியானகோபம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் பதவிக்குக் கொண்டு வந்தவர் விதம்விதமான கருத்துக்களை வெளியிட்டுவருகின்றார். இந்தப் பேச்சு எனக்கு பிடிக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேனவைநாங்களேஜனாதிபதிப் பதவிக்கு கொண்டு வந்தோம். அடிகளை வாங்கிக் கொண்டு அனைத்துப் பிரதேசங்களுக்கும் சென்று நாங்களே தேர்தல் பணியாற்றினோம்.

இதனால்,பிணைமுறிப் பத்திரக் கதைகளைக் கூறி, திருடர்களை பிடித்தோம் என்று கூறுகிறார். நாங்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்த ஜனாதிபதியும்நாங்கள்கொண்டு வந்த நல்லாட்சியுமே திருடர்களைப் பிடித்தது. –என்றார். (ஐ)

## யாழ். நகர உணவகங்கள், ஹோட்டல்களிலுள்ள கழிவுகளை இனித் தரம்பிரித்து வழங்குங்கள்

### வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ். மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம்உணவகங்கள், உணவு விடுதிகள் என்பவற்றிலுள்ள உணவுக் கழிவுகள் மற்றும் கழிவு 'லஞ்சீற்கள்' பொலித்தீன் பைகள் என்பவற்றைப் பெற்றுச் செல்வதற்கு வருகை தரும் போது, தங்கள் உணவகங்கள், உணவு விடுதிகளில் உள்ள இத்தகைய கழிவுப் பொருள்களில் தரம் பிரித்து வழங்கும் படி யாழ். மாநகர சபையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தரம் பிரிக்காது வைக்கப்படும் கழிவுகள், சுகாதாரத் தொழிலாளர் களால் அகற்றப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு கழிவுகள் அகற்றப்படாது விடின் தங்கள் உணவகங்கள், உணவு விடுதிகளில் கழிவுகள் தேங்கி பெரும் சுகாதாரப் பிரச்சினை ஏற்பட்டு தங்களது வியாபாரநடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படும்.

எனவே இத்தகைய பிரச்சினைகளைநிவர்த்தி செய்து, சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு கழிவுகளைத் தரம் பிரித்து உரிய முறையில் வழங்க வர்த்தகர்களை அறிவுத்தும் படி யாழ். மாநகர சபை ஆணையாளர் வணிகர் கழகத்திற்கு அறிவித்துள்ளார். எனவே இதனை வர்த்தகர்கள் கவனத்தில் எடுத்துச் செயற்படுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது. (இ)

## சாயி நிலையத்தில் மகர சங்கராந்தி பெருவிழா இன்று

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி சத்திய சாயி பாபா நிலையத்தில் தைப்பொங்கல் தினமான இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மகரசங்கராந்திப் பெருவிழா இடம்பெறும். பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும். தைப் பொங்கல் நிகழ்வுகளைத் தொடர்ந்து ஆண்டுப் பொதுக்கூட்டம், வேத பாராயணம், பஜனை ஆகியன இடம்பெறும்.

ஆர்வலர் அனைவரையும் இந்நிகழ்வுக்கு சாயி நிலையத்தினர் அழைத்துள்ளனர். (இ)

## பெண்ணொருவர் வெட்டிக் கொலை

மொறட்டுவை – ராவத்தாவத்தைப் பிரதேசத்தில் கத்தியால் வெட்டி பெண்ணொருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார்தெரிவித்தனர்.

44வயதானபெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. எனினும் கொலை யைச் செய்தவர் யார் என்பது கண்டறியப் படவில்லை.

மொறட்டுவைப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 2000 மெற்றிக் தொன் உரம் இலங்கைக்கு வருகின்றது

2000 மெற்றிக் தொன் உரம் அடங்கிய கப்பல் ஒன்று நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு வரவுள்ளது என்று அறிய முடிகிறது.

உரத்தட்டுப்பாடு ஏற்படாத வகையில் விவசா–யிகளுக்கு வழங்குவதற்காக அந்த உரம் இறக்குமதிசெய்யப்படவுள்ளது. எந்த நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்பது தொடர்பாகத் தகவல் வெளியாகவில்லை.

இதேவேளை, சிறுபோகத்துக்குத் தேவையான அளவு உரம் களஞ்சியப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நோட்டீஸ்கள், சுவரொட்டிகள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன. அவர் படுபிஸி.

நாடாளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள் என்றால் விளம்பரங்கள் மூலம் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக் காட்சி நிறுவனங்கள் பெரும் அளவில் சுருட்டிக் கொள்ள முடியும். ஆனால் இது வட்டார மட்டத்தில் நடக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பதால் அவை காய்கின்றன.

அச்சகங்களுக்குத்தான் இதனால் பெரும் வரப்பிரசாதம்.

தாராளமான வேட்பாளர்கள். பல கட்சிகள் களத்தில் . ஒவ்வொரு வேட்பாளரும் ஆளாளுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் நோட்டீஸ்கள், இரண்டொரு வகையில் ஐந்நூறு, ஆயிரம் போஸ்டர்கள் என்று அடிப்பதால் எல்லா அச்சகங்களும் ஒரே பிஸி.

அத்தகைய மும்முரத்துக்கு மத்தியில்தான் இந்தத் தகவலை அந்த அச்சக முதலாளி சொன்னார்.

*"நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பல டசின் வேட்பாளர்களின் துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்களை இதுவரை அச்சிட்டுக் கொடுத்துவிட்டேன். இன்னும் ஒரு தொகை அச்சிடக் காத்திருக்கின்றன.*

*"ஈ.பி.டி.பியினரின் நோட்டீஸ்களில் தலைவர் டக்ளஸின் படம் போட்டு அச்சுக்குத் தருவார்கள். அது போல, ஐ.தே.க. பிரசுரங்களில் பிரதமர் ரணில், அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் படங்கள் காணப்படும். சு.க. தரப்பினரின் பிரசுரங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கஜன் எம்.பி. ஆகியோரின் படங்கள் இருக்கும்.*

*"உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவோர் சுரேஷ் பிறேமச் சந்திரனினதும், சைக்கிள் சின்னத்தில் களமிறங்கியுள்ளோர் கஜேந்திரகுமாரினதும் படங்களைப் போட்டே பிரசுரங்களை அச்சிடுகின்றனர்.*

*"ஆனால், வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுபவர்கள் யாவருமே சம்பந்தன், சுமந்திரன், மாவை, செல்வம், சித்தார்த்தன் போன்றோரின் படங்களைப் போடாமல் தங்கள் படங்களை மட்டுமே போட்டுத்தான் அச்சிடுகின்றனர்.*

*"சம்பந்தன், மாவை போன்றோரின் படங்களைச் சேர்த்துக் கொள்ளவா என்று கேட்டால் 'ஐயோ! வேண்டாம்! – என்று கூறி மறுத்துவிடுகின்றார்கள்.*

*"இடைக்கால அறிக்கை தொடர்பில் மக்களுக்கு இருக்கும் ஐயுறவு தங்களுக்கு எதிராகத் திரும்பிவிடும் என்று கருதியே அந்த வேட்பாளர்கள் இப்படி நடந்து கொள்கின்றார்கள் போலும்"*

–இவ்வாறு அரசியல் ஞானம் ஓரளவு கொண்டுள்ள அந்த அச்சக முதலாளி கூறினார்.

மூத்த தலைவர்களை அழைத்துப் பகிரங்கப் பிரசாரக் கூட்டம் போடும் ஏற்பாடுகளைச் செய்வதிலும், கூட்டமைப்பு வேட்பாளர்கள் இன்னும் ஆர்வம் காட்டத் தொடங்கவில்லை.

சுமந்திரன் தரப்பினர் நாளை மறுதினம் நல்லூர் முத்திரைச் சந்தியில், சம்பந்தன் ஐயாவையும் அழைத்து, யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து வருகின்றனர். எனினும் அன்றைய தினம் திருகோணமலையில் – தமது சொந்த இடத்தில் – பிரசார வேலைகளைப் பார்ப்பதற்காக அங்கு சம்பந்தன் செல்கின்றார், அவர் அன்றைய தினம் யாழ்ப்பாணம் வரமாட்டார் என சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் இப்போது பத்திரிகையில் வெளியாகுவதால் இதனால் ஏற்பட்ட பின்னடைவைச் சமாளிப்பதற்காக சம்பந் தன் ஐயா, மாவை போன்றோ ரின் படங்களையும் சேர்த்து பிரசுரங்களை வெளியிடுமாறு கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு இனி உத்தரவுகள் பறக்கலாம்.

எது, எப்படியென்றாலும் அதனால், அச்சகங்களுக்குக் கொண்டாட்டம்தான். இன்னும் நூறு, இருநூறு ரக பிரசுரங்கள் அச்சு ஓடருக்கு வந்தால் அவர்களுக்கு லாபம்தானே...!

இந்த விடயம் இப்போது அச்சில் வெளியாவதை அடுத்து, தலைவர்கள் மீதான மக்கள் அதிருப்தி என்று ஒன்று இல்லவே இல்லை எனக் காட்டுவதற்காக, அவர்களை மேடையேற்றி ஒரு சில பிரசாரக்கூட்டங்களையாவது ஆங்காங்கே நடத்திக் காட்டும் எத்தனத்திலும் மார்ட்டின் வீதித் தரப்பு மும்முரமாக இறங்கும் என எதிர்பார்க்கலாம்.

-மின்னல்-


அன்பர்கள், நண்பர்கள், நல்ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல் வாழ்த்துக்கள்!



திருமண பட்டுப் புடைவைகளின் 30 வருட கால பாரம்பரியமான நிறுவனம்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்



இல. 41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

021 222 2063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தைப்பொங்கல் தீர்மானம் யாது?

இன்று பொங்கல் திருநாள்.

அவனியின் நாயகன் ஆதவனைப் போற்றித் துதிக்கும் நாள். காலைக்கதிர் பரப்பி, பூமியைச் சோலைப் பசுமையாக்கும் கதிரவனைத் தமிழர் ஏற்றி வணங்கும் நாள்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். இயற்கையின் சூட்சுமத்தை - நுணுக்கத்தை - அவர்கள் உணர்வோடு அறிந்துகொண்டதால் எழுந்ததே இந்தப் பொங்கல் பண்டிகை.

அகில நாயகனான ஆதவனே பூமிப்பந்தை இயக்குபவன். அவனே உலகுக்கு உயிரூட்டுபவன். அவனின்றி அசையாது அவனி என்பது நாமறிந்ததுதான்.

காலங்கள் மாறுவதும், பருவநிலைகள் ஏற்படுவதும், இரவு பகல் நேர்வதும் கூட அவனால்தான்.

உயிரின் மூலமும், அந்த உயிர்ப்பின் இயக்கமும் கூட அவனிலிருந்து வந்தவைதான் என்பது விஞ்ஞான உண்மை.

அந்த உண்மையை உணர்ந்ததால் எழுந்ததே பொங்கல் பண்டிகை.

கதிரவன் தனது கதிர்கள் மூலம் பூமிப் பந்தெங்கும் சக்தியை வாரி இறைக்கின்றான். இது சதா காலமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஓர் இயக்கம்.

இப்படி இறைக்கப்படும் சக்தியைப் பூமிப் பந்தில் பதிப்பவை தாவரங்கள். உணவுச் சங்கிலியின் தோற்றுவாய் அங்குதான் நிகழ்கின்றது.

இப்படித் தாவரங்கள் மூலம் பதிக்கப்படும் சக்தியே மனிதன் உட்பட சகல ஜீவராசிகளுக்கும் உணவூட்டும் போசனையாக மாறுகின்றது.

சூரியன் தனது காலைக்கதிர் மூலம் தாவர வர்க்கங்களின் ஊடாகப் பதிக்கும் சக்தியே விளைச்சலாக நமது மானுட இனத்துக்குக் கிட்டுகின்றது.

அவ்வாறு விளைச்சல் கிட்டும் முதல் தினத்தில் அதற்குக் காரணனாக அமைந்த சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தமிழன் முன்னெடுக்கும் பண்டிகையே பொங்கல்.

தமிழேருழவன் தன் வயலில் கிடைத்த முதல் விளைச்சலை சூரியனுக்கு நன்றி தெரிவிக்கப் பொங்கலிட்டு, படையலிட்டு வணங்கினான். ஆதவனைத் துதிக்கும் அத்திருநாளே பொங்கல்.

அதுவே தமிழர் தம் வருடத்தின் முதல் நாள் என்பர்.

நம் பூமிப் பந்து தன்னைத் தானே சுற்றியபடி சூரியனையும் சுற்றி வருகின்றது. அந்தச் சுற்றலில் ஒரு புதிய அத்தியாயம் மீளப் பிறப்பதைச் சுட்டுவதே தைப்பொங்கல்.

பூமி தன்னைத் தானே சுற்றுவதால் பகல் - இரவு நேர்கிறது. சூரியனைச் சுற்றுவதால் காலநிலை மாற்றங்கள், பருவகாலங்கள் நேருகின்றன.

அந்தச் சுற்றலினால் புதிய அத்தியாயம் மீளப் பிறக்கின்றமையைத் தைப்பொங்கல் திருநாள் சுட்டி நிற்கின்றது.

தனு ராசியில் இருந்து சூரியன் மகரராசிக்குப் பிரவேசிக்கும் இத்தினத்தைத்தான் மகரசங்கராந்தி எனவும், மகரத் திருநாளாகவும், தமிழர் பண்டிகையாகவும் கொண்டாடுகிறோம்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பர். நம்பிக்கையூட்டும் வாசகம் இது.

ஆனால், இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அப்படி நம்பிக்கை கொள்ளும் நிலைமை இல்லை என்பதுதான் யதார்த்தமாக உள்ளது.

சுமார் எழுபது வருட உரிமைப் போராட்டத்தின் பின்னர், மிக மோசமான போரழிவுகளையும், பேரழிவுகளையும் எதிர்கொண்ட பின்னரும், நட்டாற்றில் தவிக்கின்றது எங்கள் இனம்.

ஆயுத வலிமையை அடியோடு இழந்து, சொற்ப அரசியல் பலத்தோடு தள்ளாடும் அவலநிலைமை நமக்கு.

சர்வதேசத்தின் மேலோட்டமான ஆதரவு, தென்னிலங்கைத் தலைமைகளின் நிச்சயமற்ற தாராளம் என்ற பலவீனமான தூண்களில் தெளிவற்ற நிலையில் தொங்குகின்றது தமிழர்களின் எதிர்காலம்.

நமக்கு ஆதரவாகக் குரலெழுப்பும் என நாம் நம்பியிருந்த சர்வதேசத் தரப்புகள், அதில் ஈடுபாடின்றி இருக்கின்றமை போல நிலைமை தோன்றுகின்றது.

அதேபோன்று, தமக்குள் ஒன்றுபட்டு நின்று தமிழருக்கு ஏதோ நியாயம் செய்யப் போகின்றவை போல காட்டிக் கொண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன் ஒன்று திரண்ட தென்னிலங்கைத் தரப்புகள், இப்போது தமக்குள் முட்டி, மோதி, பிளவுபட்டு, பிரிந்து நிற்கும் நிலைமையில் உள்ளன.

ஆக, எமக்குச் சார்பாக இருந்தவை என நாம் கருதிய மேற்படி இரண்டு தூண்களுமே நம்மைக் கைவிடும் சூழல் வந்துவிட்டது என்பதை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

இனி என்ன செய்யப் போகின்றோம் என்பதுதான் இன்றைய கேள்வி.

தைப்பிறப்போடு, வழி பிறக்கச் செய்வதற்கு நாம் கைக்கொள்ளப் போகும் மார்க்கம் யாது? நாம் செய்யப்போகும் தைப்பொங்கல் பிரதிக்ஞை யாது? பயனற்றுப் போயிருக்கும் இந்த நிலைப்பாட்டில் இருந்து நமது இனத்தை விடுவித்து, அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு நாம் நாட வேண்டிய மார்க்கம் எது?

இதைத் தீர்மானிக்க வேண்டிய முக்கிய சந்தியில் இப்போது நாம் வந்து நிற்கின்றோம்.

# யாராவது சவால் விடுத்தால் ஐ.தே.க. தனியரசு அமைக்கும்


கூறுகின்றார் அஜித் பெரேரா

எந்தவொரு கட்சியாவது சவால் விடுப்பதாயின், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கத் தாம் தயாராக உள்ளோம் எனப் பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறி னார்.

கூட்டு அரசைப் புறக்கணிப்பதாயின் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தனி அரசை அமைக்கத் தயாராக உள்ளோம் எனவும் அவர் கூறினார். (ஐ)

# உள்ளூராட்சித் தேர்தலுடன் அமைச்சரவையில் மாற்றம்?



உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் அமைச்சரவை மாற்றம் ஒன்றை முன்னெடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

எதிர்வரும் 17 ஆம் திகதி மத்திய வங்கி முறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் அரசியல் நிகழ்வுகளை அவதானித்து இந்த மாற்றத்தை முன்னெடுக்க உள்ளன என அந்த வட்டாரங்கள் கூறி உள்ளன.

தேர்தலின் முடிவுகளையும் இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது ஜனாதிபதி அவதானத்தில் எடுத்துக்கொள்வார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## இணுவில் அபிராமி சி.க.கூ. சங்கத்தின் தைப்பொங்கல் விழா

இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம் நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயிலடி அறிவாலயத்தில் இணுவில் அபிராமி சி.க.கூ. சங்கத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெற உள்ளது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக இலங்கை சி.க.கூ.ச. சம்மேளனத் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனியா கலந்துகொள்வார். விருந்தினர்களாக சம்மேளன பொதுமுகாமையாளர் லியனகே நவீந்திரா லியனாராச்சி, சணச காப்புறுதி இயக்குநர் சபை உறுப்பினர் சீ.இராஜரட்ணம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், யாழ். மாவட்ட சி.க.கூ. சங்கங்களின் சமாசத் தலைவர் வி.கே.அருந்தவநாதன், பேராசிரியர் க.தேவராசா, யாழ். சணச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் த.சபேசன் உட்பட மேலும் சிலர் கலந்துகொள்ள உள்ளனர்.

சிறப்புப் பொங்கல் பட்டிமன்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

காலையில் நடைபெறும் பொங்கல் நிகழ்வுகளில் இலங்கை சம்மேளனத்தின் தலைவரான கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனியாவும் நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பிப்பார்கள். அனைத்துப் பொதுமக்களையும் விழாவில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (இ)

விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்:

# டெங்குக் களத்தரிசிப்பு ஜன. 17, 18 இல் நாவாந்துறை, வண்ணார்பண்ணையில்

யாழ்ப்பாணம்,ஜன.14

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

அதன்படி, 17ஆம் திகதி நாவாந்துறை ஜே/85, ஜே/87 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் 18 ஆம் திகதி வண்ணார் பண்ணை ஜே/100, ஜே/102 ஆகியகிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்குக் களத்தரிசிப்பு நடைபெறும் என்றும் அன்றைய தினங்களில் வீடுகளில் மக்கள் தங்கியிருந்து களத்தரிசிப்புக்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரது செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி, டெங்குத் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கும் முகமாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபட முடியும். இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கித் தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்கள் என்பவற்றின் சுற்றுச் சூழலைத் துப்புரவாகப் பேணுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்குச் சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் ஆகியன மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என்றுள்ளது. (இ)

### நாளை

15.01.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம்: மூலம் மா. 3.17 வரை
திதி: சதுர்த்தசி பி.இ. 6.19 வரை
சுபநேரம்: 12.34 – 2.04 வரை
இராகுகாலம்: 8.04 – 9.34 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தைத்திருநாள் சிறப்பு மலர்



மண்டைதீவு மகிழ்நன்
கை.பேரின்பநாயகம்

# இந்து சமய பாரம்பரியத்தில் தைப்பொங்கல் விழா

இந்து சமய விழாக்களில் தைப்பொங்கல் விழா மிகவும் சிறப்பானதாகும். இந்த விழா உழவர் விழா என்றும், தைத் திங்கள் தைவிழா, தைத் திருநாள் என்றும், தைத் திருநாள் பொங்கல் என்றும் வழங்கப்படுவது வழமை.


வாழ்வோடும், தொழிலோடும் சமயச் சடங்குகளோடும் இணைந்ததே தைப் பொங்கல் விழா. இந்துக்களின் சமூக மயமாக்குதல் சடங்கென்பதும் பொருந்தும். உறவோடும் அயலோடும் சமயத்தோடும் இணைந்து போவதை அடிநாதமாகக் கொண்ட விழா. இணங்கிப் போதலே வேதங்களதும் விளக்கமுமாகும். இறைவனுடனும் இயற்கையுடனும் உறவோடும் உரித்தோடும் இணக்கத்தையும் நெருக்கத்தையும் கொண்டது.

இயற்கையை வணங்குவதே இந்துக்களின் ஆன்மீகம். வேதகால இந்துக்கள் நதிகளதும், மலைகளதும் அழகிலும், சலசலப்பிலும் மௌனத்திலும் இறைவனைக் கண்டனர்.

விருந்தோம்பலை ஆராதிப்பது தைப்பொங்கல் உறவோடும் நட்போடும் மட்டுமன்றி, கோவில்களிலும் சந்நிதானங்களிலும் சக்தி வழிபாட்டு மையங்களிலும் பொங்கல் செய்து ஆன்மாவையும் குளிர்த்தி பண்ணுவதே உயர்ந்த சைவ சித்தாந்தமாகும்.

இறைவன், தேவன், மனிதன் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு உயிரினங்கள் அனைத்தோடும் உறவைப் பேணிக் கருணையுடன் அன்னமிடும் இந்து சமய ஒப்புரவு நோக்கத்தினதும் கருணை வடிவத்தன்மையினதும் அடையாளமும் சாயலுமாகத் தெரிவதே பொங்கலும் அது தொடர்பான சடங்குகளுமாகும்.

பொங்கல் தினத்தின் அடுத்த நாள் பட்டிப்பொங்கல் தினமாகும். மனிதனது தானிய விளைச்சலுக்கு அடித்தளமான பசு, எருது போன்ற கால் நடைகளைக் கடவுளாகப் பாவித்துப் பொங்கிப் படைப்பது, வேறு எந்த உலக நிறுவனங்களிலும்



சமயத்திலும் இல்லாத ஒன்றாகும். உழவுக் கருவிகளுக்கும் படையலிடுவது இந்துக்களின் பண்பியல்பில் ஒன்றாகும்.

மனிதர்களின் வாழ்வின் தோற்றத்துக்கும் நிலைப்புக்கும் வளர்ச்சிக்கும் காரணமான சூரியதேவனை சைவ சமயத்தவர்கள் (இந்துக்கள்) கடவுளாக வழிபட்டனர். பயிர் வளர்ச்சிக்கும், விளைச்சலுக்கும் தேவையான சூரிய ஒளி, மழை போன்ற அனைத்துக்கும் காரணமாவதால் சூரிய தேவனை முழுமுதல் கடவுளாக வழிபட்டனர்.

சிந்து கங்கை நதி நாகரிக காலத்தில் சூரிய வழிபாடும் சிவ வழிபாடும் வேத காலத்தில் பெரு வழக்குப் பெற்றிருந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சக்தி வழிபாடும், முருக வழிபாடும், விநாயக வழிபாடும், திருமால் வணக்கமும் வழக்கில் இருந்தன.

இவை முறையே சௌரம், சைவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், வைணவம் எனப் பெயர் பெற்றன. இவை சண்மதங்கள் (சண் ஆறு) எனப்பட்டன. அறுவகை சமயத்தின் தொகுப்பே இந்து மதம் என்ற பெரும் 'சாகரம்'.

புராதன நாகரிகங்களில் சூரிய வழிபாடு பிரதானமனதாகும். எகிப்திய நாகரிகத்தில் 'அமான்ரா' எனவும் சுமேரிய நாகரிகத்தில் பிரதான தெய்வமாகவும் கொள்ளப்பட்டதுடன் மெக்ஸிக்கோவில் மாயா நாகரிகத்தில் அவர்களின் பிரமிட்டுக்களின் தெய்வமாகவும் சூரியனை வழிபட்டனர்.

புவியினது அச்சு சாய்வின் அடிப்படையில் சூரியனதும் பருவகால நகர்வை இந்துக்கள் அறிந்திருந்தனர். கடகத்தில் இருந்து வடக்கே மகரத்தை நோக்கி நகரும் காலமாதலால் இதை 'சூரிய சங்கிராந்தி' என இந்துக்கள் அழைத்தனர்.

இந்தக் காலம் அறுவடைக் காலமாகும். அறுவடையின் மகத்துவத்தைத் தந்த சூரிய தேவனை வணங்கி பொங்கலிடுதலே தைத் திருநாளாகும். தைப்பொங்கல் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் 15ஆம் திகதிக்கு முன், பின்னர் சூரிய சங்கிராந்தி நிகழும். பெரும்பாலும் ஜனவரி 14 ஆம் திகதியின் தமிழ் தை மாதப் பிறப்புக் கொண்டாடப்படும்.

இது ஒரு பெரும் திருவிழா இந்துக்களதும், சைவர்களதும், கலாசார விழாவாகவும், இந்துக்கள் வாழும் நாடுகளிலும் பிரதேசங்களிலும் அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது. சைவமும் தமிழும் இரண்டறக் கலந்த திருவிழா இது.

இந்த நன்னாளில் சூரிய உதயத்தில் பகலவனின் இளங் காலைப்பொழுதில் தாமரை மலர்களின் நிறத்தில் தங்கமும் பொன்னும் வைரமும் பவளமும் புஸ்பராகமும் கலந்த ஏழ் வண்ணத்தில் தோன்றும் அழகில் இறைவனைக் காணலாம். தை மாதத்தைத் தைமகள் என்பவர் பெரியோர், கலை மகளாக (சரஸ்வதி) மலைமகளாக சமுத்திர தேவியாக (இலக்குமி) உருவகிக்கப்படுவதுண்டு.

காலை எழுந்து நீராடி சூரிய உதய நாடியில் பொங்கல் சரிவு ஏற்படும் வண்ணம் பொங்கலிட்டு வழிபடுவர். இல்லங்கள் தோறும், சிவாலயங்கள் தோறும், சக்திபீடங்கள் தோறும் மற்றும் ஆகம விதிக்கு அப்பாற்பட்ட சிறு தெய்வங்கள் கோவில்கள் தோறும் வைரவர், வீரபத்திரர், ஆஞ்சநேயர், குளத்தடி மரத்தடிப் பிள்ளையார், வயற்கரை அண்ணமார், நாகதம்பிரான் போன்ற சகல சந்நிதிகளிலும், மகர தோரணங்கள் இட்டுப் பொங்கல் மேடையில் கோலமிட்டு (அரிசி மாவால்) புதுப்பானை சட்டி (மண்) எடுத்த புதிய மண் அடுப்புக்கள் செய்து பசும் சாணத்தால் மெழுகி, மாவிலை, தென்னோலை தோரணம் கட்டி, கமுகு வாழை, மாவிலை மற்றும் கரும்பு, இஞ்சி இலைகள் வெட்டி:

காய்ந்த தென்னம்பாளையின் பூம் பகுதிநீக்கி, தீ மூட்டி, பால், தேன், நெய் இட்டு பொங்கலிட்டு பொங்கல் சரிந்ததும் புதிய கதிரில் இருந்து பெற்ற புதிய பச்சை நெல் அரிசி சர்க்கரை மற்றும் பொங்கல் திரவியங்கள் இட்டு, மா,பலா, வாழை, விளா மற்றும் கனி வகைகள் படைத்து " பொங்கலோ பொங்கல்" என பொங்கி இறக்கி சாந்து (சந்தனம்) குங்குமம், திருநீறு தரித்து, தேவார திருவாசகம் பாராயணம் பண்ணி, படையலிட்டு, சுற் றம் சூழ, சூரிய தேவனை வணங்கி வாழ்த்துவதும் கலந்து புசிப்பதும் இறைவழிபாடு மாக இந்துப் பொங்கல் நிறைவுறும்.

பசுவையும் எருவையும் வழிபடும் பொங்கலாக அடுத்த நாள் பட்டிப்பொங்கல் நடைபெறும். மை இட்டுப் பொட்டிற்று மண் சட்டிப் பொங்கல், மணிகட்டிப் பொங்கல் பழம் ஊட்டி மகிழும் திருநாளாக பட்டிப்பொங் கல் அமையும்.

இந்த நாளில் மார்கழி மாதத்தின் பிள்ளையார் வணக்க இறுதி நாளாக அமைவதால் பிள்ளையார் பொங்கலும் இடம்பெறும். இதுதான் இந்தியாவில் பெரும் வழக்காகும்.

"மாதங்களில் நான் மார்கழி"
என்றான் மாதவன் கீதையில்..."
'ஓம் சூரியாய நமக'

> "இது ஒரு பெரும் திருவிழா இந்துக்களதும், சைவர்களதும், கலாசார விழாவாகவும், இந்துக்கள் வாழும் நாடுகளிலும் பிரதேசங்களிலும் அடையாளப்படுத்தப் பட்டு வருகிறது. சைவமும் தமிழும் இரண்டறக் கலந்த திருவிழா இது."

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS



அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
THE SASIKA DRIVING SCHOOL TSL
sasika Learners
sasika driving School@gmail.com.
தலைமைக் காரியாலயம்:
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE- 077 722 6247
021 2217678, 0776140361
வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)
25.01.2018 வரை பதிவு செய்பவர்களுக்கு மட்டும் விசேட கட்டணக் கழிவு வழங்கப்படும்.
மற்றுமொரு கிளை
இல - 821 C, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம் (ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்)
021 222 8004
கிளை நிறுவனங்கள்:
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
0703013012
கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்
021 224 3393
0703013014
சங்கானை
ஓட்டக்கரை வீதி, சங்கானை
021 225 1664
0703013016
★ விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
★ எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
★ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைதீவு மகிழ்நன்
கை.பேரின்பநாயகம்



# இந்து சமய பாரம்பரியத்தில் தைப்பொங்கல் விழா

இந்து சமய விழாக்களில் தைப்பொங்கல் விழா மிகவும் சிறப்பானதாகும். இந்த விழா உழவர் விழா என்றும், தைத் திங்கள் தைவிழா, தைத் திருநாள் என்றும், தைத் திருநாள் பொங்கல் என்றும் வழங்கப்படுவது வழமை.

வாழ்வோடும், தொழிலோடும் சமயச் சடங்குகளோடும் இணைந்ததே தைப்பொங்கல் விழா. இந்துக்களின் சமூக மயமாக்குதல் சடங்கென்பதும் பொருந்தும். உறவோடும் அயலோடும் சமயத்தோடும் இணைந்து போவதை அடி நாதமாகக் கொண்ட விழா. இணங்கிப்போதலே வேதங்களதும் விளக்கமுமாகும். இறைவனுடனும் இயற்கையுடனும் உறவோடும் உரித்தோடும் இணக்கத்தையும் நெருக்கத்தையும் கொண்டது.

இயற்கையை விழுத்துவதே இந்துக்களின் ஆன்மீகம். வேதகால இந்துக்கள் நதிகளதும், மலைகளதும் அழகிலும், சலசலப்பிலும் மௌனத்திலும் இறைவனைக் கண்டனர்.

விருந்தோம்பலை ஆராதிப்பது தைப்பொங்கல் உறவோடும் நட்போடும் மட்டுமன்றி, கோவில்களிலும் சந்நிதானங்களிலும் சக்தி வழிபாட்டு மையங்களிலும் பொங்கல் செய்து ஆன்மாவையும் குளிர்த்தி பண்ணுவதே உயர்ந்த சைவ சித்தாந்தமாகும்.

இறைவன், தேவன், மனிதன் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு உயிரினங்கள் அனைத்தோடும் உறவைப் பேணிக் கருணையுடன் அன்னமிடும் இந்து சமய ஒப்புரவு நோக்கத்தினதும் கருணை வடிவத்தன்மையினதும் அடையாளமும் சாயலுமாகத் தெரிவதே பொங்கலும் அது தொடர்பான சடங்குகளுமாகும்.

பொங்கல் தினத்தின் அடுத்த நாள் பட்டிப்பொங்கல் தினமாகும். மனிதனது தானிய விளைச்சலுக்கு அடித்தளமான பசு, எருது போன்ற கால் நடைகளைக் கடவுளாகப் பாவித்துப் பொங்கிப் படைப்



பது, வேறு எந்த உலக நிறுவனங்களிலும் சமயத்திலும் இல்லாத ஒன்றாகும். உழவுக் கருவிகளுக்கும் படையலிடுவது இந்துக்களின் பண்பியலில் ஒன்றாகும்.

மனிதர்களின் வாழ்வின் தோற்றத்துக்கும் நிலைப்புக்கும் வளர்ச்சிக்கும் காரணமான சூரியதேவனை சைவ சமயத்தவர்கள் (இந்துக்கள்) கடவுளாக வழிபட்டனர். பயிர் வளர்ச்சிக்கும், விளைச்சலுக்கும் தேவையான சூரிய ஒளி, மழை போன்ற அனைத்துக்கும் காரணமாவதால் சூரிய தேவனை முழுமுதல் கடவுளாக வழிபட்டனர்.

சிந்து கங்கை நதி நாகரிக காலத்தில் சூரிய வழிபாடும் சிவ வழிபாடும் வேதகாலத்தில் பெரு வழக்குப் பெற்றிருந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சக்தி வழிபாடும், முருக வழிபாடும், விநாயக வழிபாடும், திருமால் வணக்கமும் வழக்கில் இருந்தன.

இவை முறையே சௌரம், சைவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், வைணவம் எனப் பெயர் பெற்றன. இவை சண்மதங்கள் (சண் ஆறு) எனப்பட்டன. அறுவகை சமயத்தின் தொகுப்பே இந்து மதம் என்ற பெரும் 'சாகரம்'.

புராதன நாகரிகங்களில் சூரிய வழிபாடு பிரதானமானதாகும். எகிப்திய நாகரிகத் தில் 'அமான்ரா' எனவும் சுமேரிய நாகரிகத்தில் பிரதான தெய்வமாகவும் கொள்ளப்பட்டதுடன் மெக்ஸிக் கோவில் மாயா நாகரிகத்தில் அவர்களின் பிரமிட்டுக்களின் தெய்வமாகவும் சூரியனை வழிபட்டனர்.

புவியினது அச்சு சாய்வின் அடிப்படையில் சூரியனதும் பருவ கால நகர்வை இந்துக்கள் அறிந்திருந்தனர். கடகத்தில் இருந்து வடக்கே மகரத்தை நோக்கி நகரும் காலமாதலால் இதை 'சூரிய சங்கிராந்தி' என இந்துக்கள் அழைத்தனர்.

இந்தக் காலம் அறுவடைக் காலமாகும். அறுவடையின் மகத்துவத்தைத் தந்த சூரிய தேவனை வணங்கி பொங்கலிடுதலே தைத் திருநாளாகும். தைப்பொங்கல் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் 15ஆம் திகதிக்கு முன், பின்னர் சூரிய சங்கிராந்தி நிகழும். பெரும்பாலும் ஜனவரி 14ஆம் திகதியின் தமிழ் தை மாதப் பிறப்புக் கொண்டாடப்படும்.

இது ஒரு பெரும் திருவிழா இந்துக்களதும், சைவர்களதும், கலாசார விழாவாகவும், இந்துக்கள் வாழும் நாடுகளிலும் பிரதேசங்களிலும் அடையாளப்படுத்தப் பட்டு வருகிறது. சைவமும் தமிழும் இரண்டறக் கலந்த திருவிழா இது.

இந்த நன்னாளில் சூரிய உதயத்தில் பகலவனின் இளங் காலைப்பொழுதில் தாமரை மலர்களின் நிறத்தில் தங்கமும் பொன்னும் வைரமும் பவளமும் புஸ்பராகமும் கலந்த ஏழ் வண்ணத்தில் தோன்றும் அழகில் இறைவனைக் காணலாம். தை மாதத்தைத் தைமகள் என்பவர் பெரியோர், கலை மகளாக (சரஸ்வதி) மலைமகளாக சமுத்திர தேவியாக ( இலக்குமி ) உருவகிக்கப்படுவதுண்டு.

காலை எழுந்து நீராடி சூரிய உதய நாடியில் பொங்கல் சரிவு ஏற்படும் வண்ணம் பொங்கலிட்டு வழிபடுவர். இல்லங்கள் தோறும், சிவாலயங்கள் தோறும், சக்திபீடங்கள் தோறும் மற்றும் ஆகம விதிக்கு அப்பாற்பட்ட சிறு தெய்வங்கள் கோவில்கள் தோறும் வைரவர், வீரபத்திரர், ஆஞ்சநேயர், குளத்தடி மரத்தடிப் பிள்ளையார், வயற்கரை அண்ணமார், நாகதம்பிரான் போன்ற சகல சந்நிதிகளிலும், மகர தோரணங்கள் இட்டுப் பொங்கல் மேடையில் கோலமிட்டு (அரிசி மாவால்) புதுப்பானை சட்டி (மண்) எடுத்த புதிய மண் அடுப்புக்கள் செய்து பசும் சாணத்தால் மெழுகி, மாவிலை, தென்னோலை தோரணம் கட்டி, கமுகு வாழை, மாவிலை மற்றும் கரும்பு, இஞ்சி இலைகள் வெட்டி:

காய்ந்த தென்னம்பாளையின் பூம் பகுதிநீக்கி, தீ மூட்டி, பால், தேன், நெய் இட்டு பொங்கலிட்டு பொங்கல் சரிந்ததும் புதிய கதிரில் இருந்து பெற்ற புதிய பச்சை நெல் அரிசி சர்க்கரை மற்றும் பொங்கல் திரவியங்கள் இட்டு, மா,பலா, வாழை, விளா மற்றும் கனி வகைகள் படைத்து "பொங்கலோ பொங்கல்" என பொங்கி இறக்கி சாந்து (சந்தனம்) குங்குமம், திருநீறு தரித்து, தேவார திருவாசகம் பாராயணம் பண்ணி, படையலிட்டு, சுற்றம் சூழ, சூரிய தேவனை வணங்கி வாழ்த்துவதும் கலந்து புசிப்பதும் இறைவழிபாடுமாக இந்துப் பொங்கல் நிறைவுறும்.

பசுவையும் எருவையும் வழிபடும் பொங்கலாக அடுத்த நாள் பட்டிப்பொங்கல் நடைபெறும்.

மை இட்டுப் பொட்டிற்று மண் சட்டி பொங்கல், மணிகட்டிப் பொங்கல் பழம் ஊட்டி மகிழும் திருநாளாக பட்டிப்பொங்கல் அமையும்.

> "இது ஒரு பெரும் திருவிழா இந்துக்களதும், சைவர்களதும், கலாசார விழாவாகவும், இந்துக்கள் வாழும் நாடுகளிலும் பிரதேசங்களிலும் அடையாளப்படுத்தப் பட்டு வருகிறது. சைவமும் தமிழும் இரண்டறக் கலந்த திருவிழா இது."

இந்த நாளில் மார்கழி மாதத்தின் பிள்ளையார் வணக்க இறுதி நாளாக அமைவதால் பிள்ளையார் பொங்கலும் இடம்பெறும். இதுதான் இந்தியாவில் பெரும் வழக்காகும்.

"மாதங்களில் நான் மார்கழி"
என்றான் மாதவன் கீதையில்..."
'ஓம் சூரியாய நமக'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தைத்திருநாள் சிறப்பு மலர்



## அருளாசிச் செய்தி



இன்று தைப்பொங்கல் திருநாள். இது தமிழ் மக்களின் பெருநாள். “தைபிறந்தால் வழி பிறக்கும்” என்பார்கள். ஆதலால் இன்றைய தைத் திருநாள் சைவ சமயிகளுடைய வாழ்க்கையிலே இருளகற்றி, ஒளியேற்றி மங்கல நல்வாழ்க்கையை நல்க வேண் டும் என்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தனுடைய திருப்பாதங்களை வணங்கி உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.

நெல்வயலிலே நெல்மணிகள் உருவாவதற்கு கதிர் பரப்பி உதவிய சூரிய பகவானுக்கு புதுப்பானை யிலே புத்தரிசிப் பொங்கல் பொங்கி அதிலே பால், தேன், நெய், கஜு, முந்திரி வற்றல், ஏலரிசி, சர்க்கரை, கற்கண்டு எல்லாம் கலந்து இனிப்பான பொங்க லைப் பொங்கிப் படைத்து வழிபாடியற்றும் நல்ல நாளிலே ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் சுகமே வாழ்தல் வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

இன்றைய பொங்கல் திருநாள் முதலாக அனைத்து மக்களுமே சந்தோஷமாகவும் சமாதானமாகவும் மங்களகரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிய வேண்டு மென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

“என்றும் வேண்டும் இன்ப அன்பு”

**ஆதீன குருமுதல்வர்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப் பாணம்.

## நல்லதொரு வாழ்வு மலரட்டும்




தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள். இறையருளால் அனைவரதும் வாழ்வும் சுபீட்சமாக அமைவுறப் பிரார்த்திக்கின்றேன். உழவர் திருநாளாம் தைப் பொங்கல் எமது இனத்தின் தலைசிறந்த கலாசார திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கமைவாக இவ்வாக்கு உண்மையாகட்டும். எமது வாழ்விற்கு விடிவு ஏற்படமாட்டாதா என ஏங்கும் எமது மக்களுக்குத் தைப்பொங்கல் வழி காட்டட்டும். எமது மக்களுக்கு நல்லதொரு வாழ்வு உதயமாகட்டும். நீண்ட நெடிய எமது வரலாற்றில் எமக்காக, எமது கலை கலாசார விடிவிற்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள் ஏராளம். அவர்களது ஆத்மா எமது மக்களின் விடுதலைக்காக இத்திருநாளில் ஆசீர்வதிக்கட்டும்.

துன்பங்கள் விலகி மகிழ்ச்சி பொங்க இறையருளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள்**
குரு முதல்வர்,
வீணாகான குருபீடம்.

## பொங்கும் மங்களம் எங்கும் பரவட்டும்!



இன்று தைப் பொங்கல் நன்னாள். இது தமிழர்களின் பொன்னான நன்னாளாகும். இந்தத் தைப்பொங்கலைஉண்ணஉண்ண இனிப்பாக இருப்பது போல, எங்கள் வாழ்க்கையும் இனி இன்று முதல் மகிழ்ச்சியினாலும் மங்களகரத்தாலும் நிறைந்து நலமுடன் திகழவேண்டு மென்று ஆசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

நெல் வயலிலே நெற்கதிர் உருவாவதற்கு சூரிய பகவான் தனது ஒளிக் கதிர்களை வீசி உதவி செய்தார். ஆகவே அப்பேர்பட்ட காரியத்தை அழகுறச் செய்த அருணனுக்கு நன்றி கூறி வாழ்த்தி மகிழ்வதோடு, “பொங்கும் மங்களம் எங்கும் தங்கட்டும்” என்று ஆசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாள் என்று வரும் என்று காத்திருக்கின்ற கன்னியரும் காளையரும் நினைத்தது நிறைவேறி நல்வாழ்க்கை வாழ வழி பிறக்க வேண்டும் என்று வண்ணை வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் பத்ம மலர்ப் பாதம் பணிந்து ஆசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

“உலகம் யாவும் நன்மையே பெருகிச் சிறப்பு மலரட்டும்”

**சிவஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக்குருக்கள்**
பிரதம குரு,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்.

## ஆனந்தம் பொங்கட்டும்



உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது. இந்த மூன்று பண்புகளும் உங்களிடம் நிறைந்திருந்தால் அதுவே ஆனந்தப் பொங்கல்.

தைத்திங்களில் தொடங்கியிருக்கும் இந்த உத்த ராயண காலத்தைப் பயன்படுத்தி விலை மதிக்க முடியாத உண்மை, அன்பு, நேர்மை என்னும் முத்துக்களைப் பெறுங்கள். இந்த உயர் முத்துக்கள் ஏற்கனவே உங்களிடம் இருக்கின்ற அறியாமை இருளால் அவை மறைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இருளைப் போக்க மிகச் சிறப்பான திசைக்கு கதிரவன் வந்து விட்டான். இதைத்தான் உத்தராயண காலம் என்று சொல்கிறோம்.

ஆன்மீக பலத்தால் நாம் உலகிற்கே வழிகாட்ட இந்தப் பொங்கல் திருநாளில் சூளுரைப்போம். அமைதி அன்பு ஆகிய முறைகளின் மூலமாக இந்தப் பணிகள் நடைபெற வேண்டும். நமது தேசத்தின் முதுகெலும்பு அன்பு என்னும் வஜ்ஜிரத்தால் ஆக்கப்பட்டுள்ளது.

நாம் அன்பு எனும் அடித்தளத்தால் உருவாக்கப்பட்டிருக்கின்றோம். அதில் தான் உண்மையான ஆனந்தம் அடங்கியிருக்கிறது என்பதை சரித்திரங்கள் புக முடியாத காலத்திற்கு முன்பே நாம் இந்த உண்மையை உலகத்திற்குப் பிரகடனப்படுத்தி இருக்கிறோம். இப்போதும் அதையே பிரகடனப்படுத்து கிறோம். அன்புதான் ஆனந்தம், அன்புதான் கடவுள் அன்புதான் எல்லாம் இந்தப் பொங்கல் திரு நாளில் அன்பு பொங்கட்டும் ஆனந்தம் நிறையட்டும் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல் ஆசிகள் உரித்தாகட்டும்.

“இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க”
சர்வேஜனகா சுகினோ பவந்து

**சிவஸ்ரீ. சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர்**
(இந்து மதகுருபீடாதிபதி) பிரதம குரு, வல்லை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

## நல்ல எண்ணங்கள் பொங்கட்டும்!




இல்லங்களிலும் உள்ளங்க ளிலும் பொது மையங்களிலும் இன்புற்று வாழும் உள்ளங்கள் ஒன்றுகூடித் தைமகளை வர வேற்று ஒற்றுமையின் அடை யாளமாக பொங்கிப் பகிரும் மகழ்ச்சி விழா தரணி எங்கும் மகிழ்வூட்டி குதூகலிக்கும் நன்னாளில் யாவர்க்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற முன்னோர் வாக்கு விவசாயியின் விளைச்சல்களை அறுவடையைச் சுவைக்கும் நன்றிப் பெருவிழா, மகிழ்வுடன் தமிழர் தன் வாழ்வில் நன்மை தரும் நல் விழாவாகத் தைப்பொங்கல் தமிழர் விழாவாக மலரும் நன்னாளை கொண்டாடும் மனங்களில் ஆன்மீக, பண்பாட்டு பற்றுதல் வலுப்பெற்று பகிர்ந்துண்ணும் விருந்தோம்பல் உளச்சமூக அன்புறவின் அடையாளமாக உறவுகளுக்கு நம்பிக்கை ஊட்டும் நன்நாளாக மலர்கிறது.

நல் எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள் தூர நோக்கை அடையும்.திடசங்கர்ப்பத்துடன் எல்லோர் மனங்களும் புதிதாய் புதிதுபுதிதாய் நட்புக்கள் நல் உறவுகள் அயலவரின் அன்பைப் பலமாக்கி சுவைக்கும் நன்னாளாக முன்நடந்தவைகள் எமது அனுபவமாக ஏற்று இனி நடப்பவை எதிர்கால நன்மைக்காக எனும் நல்எண்ணத்துடன் நாமும் சமூக முன்னேற்றத்தின் பங்காளர் எனும் மனநிலையோடு ஒன்றிணைந்து புதிய பொங்கலை புதுப் பொலிவுடன் இன்முகத்துடன் அன்பைப் பகிர்ந்து பொங்கல் நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வோம்.

நல் எண்ண பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**செ. யோசப்பாலா, செயலாளர்**
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்



## ஈழத்தமிழரின் விடிவுக்கு மன்றாடுவோம்



தைத்திங்கள் முதல்நாள் தைப்பொங்கல் திருநாள். உலகம் முழுவதும் வாழும் இந்து மக்கள் இயற்கைத் தெய்வமாகிய சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து நன்றி சொல்லும் நன்னாள். கண்கண்ட தெய்வமாகிய கதிரவன் காலமெல்லாம் நமக்கு உதவி வருபவன். வருடத்தில் ஒருநாள் விடிவுதரும் சூரியபகவானுக்கு பால்பொங்கல் செய்து எம் நன்றிப் பண்பாட்டை தெரிவிப்பது ஓர் உன்னத கடமையாகும்.

ஆதிச் சமயமாகிய சைவம் இயற்கைக்கு மதிப்பளித்து இறைவழிபாட்டில் நன்றிக்கு முக்கியத்துவம் கொடுத்தது. உணவை படைத்து உண்ணும் பண்பாடு வேறு சமயத்தவரிடம் இல்லை.கடவுள் தந்தவற்றை கடவுளுக்கு காணிக்கையாக்கி பகிர்ந்து உண்ணும் பண்பாட்டை எம் முன்னோர்கள் வழக்கப் படுத்தினர்.தைப்பொங்கல் ஒரு சமயவிழா. இத்திருநாள் உழுது பயிர்செய்யும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி சொல்லும் பெருநாள்.‘பாடுபட்டு உழைப்பவர்க்கு இந்தப் பாரிடம் சொந்தம் ஐயா’ என்று கவிமணி பாடிய வரிகள் மிகவும் அர்த்தம் உள்ளவை.

சேற்றுக்குள்ளே நின்று உழைத்து எமக்கு சோறினை உண்ணவைப்பவன் உழவன். அவனை உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றியவர்கள் சைவத்தமிழர்கள். இப் பாரம்பரிய பண்பாட்டை பேணிப் பாதுகாத்த எம் மூதாதையர்கள் என்றும் மறக்கமுடியாதவர்கள். எத்தனை நாகரிகங்கள் எம்மைச் சூழ்ந்த போதிலும் எம் மூதாதையர்கள் எவ்வளவு தூரம் எங்கள் பண்பாட்டை விட்டுக் கொடுக்காமல் காத்து எமது சந்ததிக்கு கைமாறு செய்தார்கள் என்பதை இன்றைய தலைமுறை நன்கு உணரவேண்டும்.

பொங்கல் திருநாளில் நாம் வாழும் இல்லங்கள் தோறும் வாயிலில் பொங்கிப் படைப்போம். எம்மைக் காத்தருளுமாறு இயற்கைத் தெய்வத்தை அனைவரும் பிரார்த்திப்போம். பெற்றோர் எம்மைப் பேணி வளர்த்தவர்கள் மூத்தோர் திருவடிகளை வணங்கி நல்லாசி பெறுவோம். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரது அன்பையும் வாழ்த்தையும் பெற்று அவர்களையும் வாழ்த்தி வணங்கி உறவை வளர்ப்போம்.

நோயாளர்கள், உறவை இழந்து தவிப்பவர்கள், ஏழ்மையில் அல்லல்படுகின்றவர்கள் அனைவரையும் இந் நாளில் அரவணைத்து ஆறுதல் செய்வோம். எங்கள் அகத்தில் இருக்கும் அழுக்குகளைப் போக்கி புனிதமாக வாழ்வதற்கு வெளிச்சம் தரும் கடவுளிடம் அனைவரும் வேண்டுதல் செய்வோம். சிறைக்கூடங்களிலும் வைத்தியசாலைகளிலும் காத்திருக்கும் அன்பு உள்ளங்களுக்காக பிரார்த்தனை செய்வோம். எங்கும் ஏழைகள் இல்லாத உலகைக் காண இறையருள் கைகூட வேண்டும் என இந்நாளில் பிரார்த்திப்போம். ஈழத் தமிழர்களுக்கு இறையருளினால் நல்லதொரு விடிவு கிடைக்க மன்றாடுவோம். தைப்பொங்கல் திருநாள்குறித்து அனைவருக்கும் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்.**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

## பொங்கல் வாழ்த்து



பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்றும், தமிழர் எத்தகைய இன்னல் வரினும் தமது சுயத்தை இழக்காது வாழ வேண்டும் என்றும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானை இப் பொங்கல் நாளில் ஒரு கணம் தியானித்து வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உயரிய விழுமியங்களையும் கலை கலாசாரங்களையும் கொண்ட எமது மொழி அந்நியர் ஆட் சியில் இருந்து இன்றுவரை சோதனைக்குள்ளேயே ஆழ்ந்து கிடக்கின்றது.

இந்த இருளில் இருந்து வெளியே வருவதற்கு நாமனைவரும் வேறுபாடுகளை மறந்து ஒரே நோக்கோடு பயணிப்போமாக.

**சி. சக்திகிரீவன் (செயலாளர்),**
இந்துசமயப் பேரவை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தைத்திருநாள் சிறப்பு மலர்



## பொங்கல் விழா தமிழ் மக்கள் அனைவருக்கும் நன்றி உணர்வை தரும் விழா ஆகட்டும்!



2018ஆவது ஆண்டு பொங்கல் விழா தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் கொண்டாடப்படும் வேளை இலங்கையிலும் புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் பொங்கல் விழாவை நன்றியோடு கொண்டாடும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இனிய பொங்கல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல்விழா நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக் கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

நன்றி கூறும் பண்பு அனைத்து மனிதருக்கும் மிகவும் தேவையான ஒன்று. நம்மைப் படைத்த இறைவன் – நம்மோடு வாழும் அயலவர் – நம்மை காக்கும் இயற்கை ஆகிய மூவர்க்கும் நாம் என்றுமே நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். இறைவன் நம்மைப் படைத்து பாதுகாத்து வருகிறார். அன்றாடம் வழிநடத்தி வருகிறார். அயலவர்கள் நம்மோடு அன்பையும் நட்பையும் பேணிவருகிறார்கள். இணைந்து வாழத்துணை புரிகிறார்கள்.

இயற்கை நமக்குத் தேவையானவற்றைத் தந்து உதவுகிறது. என்ன செய்தாலும் நம்மைத் தாங்கி வருகிறது. இந்த மூன்று நிலையினரை நோக்கியும் நம் உள்ளம் என்றுமே நன்றியால் பொங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

அநேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்துவிடுகிறோம். இது அவர்கள் பணி – இது அவர்கள் கடமை – இதற்காக பணம் செலுத்தப்படுகின்றமையால் அவர்கள் இதைச் செய்யவேண்டும் என்கின்ற மனப்பாங்கே நம்மில் மேலோங்கி இருக்கிறது. நன்றி என்ற வார்த்தையை இனிவருங்காலத்தில் அதிகம் பாவிக்கத் தொடங்குவோம். பொதுப்பணியை செய்வோருக்கும் என்றும் நன்றி சொல்வோம். இது அவர்கள் இன்னும் அதிக அர்ப்பணிப்புடன் செயலாற்ற உதவும். அனைவரும் இவர்களின் உதவியையும் மதிப்பையும் பெற இது வழி வகுக்கும்.

தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பொதுநலனில் அக்கறை கொண்டோர் யார் – தமிழ் மக்களின் நீதியோடு கூடிய நிரந்தர தீர்விற்காக உழைக்கக் கூடியோர் யார் என்பதை இனங்காணவேண்டும். முகங்களுக்கல்ல கொள்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

ஊரவர் உறவுகள் என்ற உணர்வு எல்லைகளைத் தாண்டி உண்மையாக திறமையுடையோரையும் இளையோர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகிறோம். அரசியல்வாதிகளும் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் – கொள்கை சுயலாபங்கள் –கட்சி நலன்கள் – கருத்து வேறுபாடுகள் போன்ற அனைத்தையும் கடந்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்த சுபீட்சமான எதிர்காலத்திற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென தமிழ் மக்கள் அனைவர் போராலும் சம்மந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள விடுக்கிறோம்.

இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
யாழ் ஆயர்



## தை பிறப்புடன் தமிழர் வாழ்வும் விடியட்டும்!



தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை வாசகத்தின் வழியே 2018 தை பிறப்புடன் தமிழர் வாழ்வும் விடிய வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தை உலகத் தமிழர் உள்ளமெங்கும் விதைத்து தமிழ்ப் புத்தாண்டை வருக வருக என வரவேற்பதோடு அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை கொள்கிறேன்.

விடைபெற்றுச் செல்லும் ஆண்டோடு தமிழர்களாகிய நாம் அனுபவித்து வரும் துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இழப்புகள், ஏமாற்றங்கள் என யாவும் எம்மை விட்டகன்று புலர்கின்ற புதிய ஆண்டில், சுதந்திரமான, சுபீட்சமான நல்வாழ்வு மலரட்டும் என்ற எதிர்பார்ப்புடனும் நற்சிந்தனையுடனும் அடியெடுத்து வைப்போம்.

விடுதலை என்ற இலட்சியத்தை நாம் இலகுவாகத் தேர்ந்து எடுக்கவில்லை. வரலாறு தான் அதை எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது. சுதந்திரம் வேண்டுவதைத் தவிர வேறு எதையும் வரலாறு எமக்கு விட்டு வைக்கவில்லை என்ற தேசியத் தலைவரின் சிந்தனை வழியே எமது மண்ணினதும் மக்களினதும் விடிவிற்காய் உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு சாத்வீகமான முறையில் தொடர்ந்தும் போராடத்தை முன்னெடுப்போம் என இன்றைய நாளில் உறுதியேற்போம்.

**வடக்கு மகளிர் விவகார அமைச்சர்
அனந்தி சசிதரன்**

## வன்முறையகலப் பொங்குவோம்!

ஆட்டம் காணும் குடும்ப வன்முறைகள்
அகல வேண்டியே பொங்குவோம்;
சும்மா சும்மா பழகியே சுமக்கும்
தொந்தரவு வேண்டாமென்று பொங்குவோம்;
சூதும் வாதும் போதையும் இனிமேல்
தொலைந்து போகவே பொங்குவோம்;
எங்கும் தொழில் பெறப் பொங்குவோம்;
நம்மால் முடியுமென்று நம் இளைஞர்கள் வென்றிட
நாற்றிசையும் வாழ்த்தி பொங்கிடுவோம்;
நாளை இந்நாட்டை ஆளப் பிறந்தவர்கள்
நம் இளைஞர்கள் எனப் பொங்கிடுவோம்;



கே.எஸ்.சிவஞானராஜா

## பொங்கல் வழிபாடும்.. விரத விதிமுறையும்..



பொங்கல் திருநாள், பழங்காலத்தில் சூரிய விழா என்றே கொண்டாடப்பட்டதாக கூறப்படுகிறது. அன்றைய தினம் சூரிய பகவானுக்கு விரதம் இருந்து பொங்கல் இட்டு, வழிபாடு செய்வார்கள்.

பொங்கல் திருநாளான தை மாதத்தின் முதல் நாளில்தான், சூரியன் மகர ராசிக்குள் பிரவேசிப்பார். இதனால்தான் பொங்கல் திருநாளை, மகரசங்கராந்தி என்றும் அழைப்பதுண்டு. மார்கழி மாதம் வரை தெற்கு திசையில் பயணித்து வந்த சூரியன், தை மாதம் முதல் வடக்கு திசையை நோக்கி நகர்வார். இந்த காலத்தை உத்திராயண புண்ணிய காலம் என்பார்கள். சுப காரியங்கள் செய்வதற்கு ஏற்ற காலமாக உத்திராயண காலம் உள்ளது. இது தேவர்களின் பகல் பொழுதாகும்.

பொங்கலிடுவதிலும் சில விரத விதிமுறைகள், வரைமுறைகள் இருக்கின்றன. பொங்கல் பண்டிகையின் போது பெண்கள் சூரியன் உதிப்பதற்கு 5 நாழிகைக்கு முன்பு எழுந்து நீராடிவிட்டு, வீட்டு முற்றத்தில் நீர் தெளித்து கோலமிட வேண்டும். வீட்டின் முற்றத்தில் ஒரு பகுதியை பசு சாணத்தால் மெழுகி, கோலமிட்டு, காவி பூச வேண்டும்.

அரக்கு நிறம் துர்க்கா தேவிக் குரியது. துன்பங்கள் விலகி மங்கல வாழ்வும், இன்பமும் நிலைக்க காவி பூசப்படுகிறது. அந்த பகுதியை மாவிலை, வாழை, கரும்பு மற்றும் மலர்களால் அலங்கரித்து, பிள்ளையாரை பிடித்து வைக்க வேண்டும். பின்னர் குத்து விளக்கேற்றி, பூரண கும்பம் வைத்து வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலிய மங்கல பொருகளையும் படைக்க வேண்டும்.

விநாயகரை முதலில் மனதில் நினைத்து, இஷ்டதெய்வங்களை பிரார்த்தனை செய்ய வேண்டும். ஒரு புதுப்பானையை எடுத்து அதன் வாய்ப்புறத்தில் மஞ்சள் இலை, மாவிலை கட்ட வேண்டும். பானையின் மேல்புறத்தில் திருநீறை குழைத்து, 3 இடங்களில் பூசி, சந்தனம், குங்குமத்தால் திலகமிடவேண்டும்.

பானைக்குள் பசும்பாலும், நீரும் விட்டு நிரப்பி தூபதீபம் காட்டி, கற்பூர தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கி பற்ற வைக்க வேண்டும். பின்னர் கணவரும், மனைவியும் சூரியனை வணங்கி, இஷ்டதெய்வங்களை பிரார்த்தனை செய்து பானையை பக்குவமாக, தம் கைகளால் பற்றிப் பிடித்து தூக்கி அடுப்பில் வைக்க வேண்டும். பானையில் பால் பொங்கி வரும் போது பொங்கலோ, பொங்கல் என்று உரத்தக் குரல் எழுப்பிக் கொண்டே பச்சரிசியை இருகைகளாலும் அள்ளி சூரியபகவானை வணங்கியபடி பானையின் வாய்விளிம்பினை 3 முறை சுற்றி பானையில் இடவேண்டும்.

பொங்கிய பொங்கலை 3 தலை வாழை இலையில் இட்டு படைத்து பழங்கள், கரும்பு, முதலியவற்றைக் கொண்டு அர்ச்சித்து, தூபதீபம் காட்டி சூரியபகவானை வணங்கி வழிபாடு செய்ய வேண்டும். தீபாராதனை காட்டும் போது குல தெய்வத்தையும், மூதாதையர்களையும் பிரார்த்தனை செய்யவேண்டும். பின்னர் அனைவருக்கும் பொங்கலை வழங்க வேண்டும். மாலையில் அருகில் உள்ள கோவிலுக்குச் சென்று இறைவனுக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்ய வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தைத்திருநாள் சிறப்பு மலர்



## ஜனாதிபதி மைத்திரி வாழ்த்துச் செய்தி



உலக வாழ் தமிழ் மக்களால் இயற்கைக்கு தமது நன்றியைப் பறைசாற்றும் வகையில் அனுஷ்டிக்கப்படும் தைத்திருநாளை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மானிட சமூகத்தினை நாகரிகத்தை நோக்கிப்பயணிக்க வைப்பதில் உழவுத் தொழிலே முக்கிய காரணியாக அமைந்தது. நவீன கைத்தொழில் மயமாக்கத்தினதும் தொழில்நுட்ப வளர்ச்சியினதும் ஈர்ப்பினால் கிராமவாசிகள் விவசாயத்தைக் கைவிட்டு, நகரங்களை நோக்கிப் படையெடுக்கும் நிலையிலும் பண்டைய பாரம்பரியங்களுடன் கொண்டாடப்படும் இத்தகைய பண்டிகைகள் மனிதனின் கலாசாரம், பண்பாடு, மனிதநேயம், ஒற்றுமை, பகிர்ந்துண்ணல் மற்றும் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் போன்ற விழுமியப் பண்புகளை சமூகத்தில் பேண உதவுவதுடன் அவற்றை எதிர்கால தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக அமைகின்றன.

அத்தோடு உழவுக்குப் பெருமை சேர்க்கும் தைத் திருநாளானது, உணவு உற்பத்தியைப் பெருக்கி, அதில் தன்னிறைவைப் பெறவேண்டும் என்ற அரசாங்கத்தின் முயற்சிக்கும் வலுச் சேர்ப்பதாகவே அமைகிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் கொண்டாடப்படும் தைத்திருநாள் அனைவரது வாழ்க்கையிலும் வளம், நலம், செழிப்பு, மகிழ்ச்சி உள்ளிட்ட எல்லா நலன்களும் பொங்கச்செய்ய வேண்டும் என்ற பிரார்த்தனையுடன், தைத்திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது மனங்கனிந்த இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**மைத்திரிபால சிறிசேன**
**இலங்கை ஜனாதிபதி.**



## சுயாட்சியுடன் கூடிய தீர்வு கிடைத்திட பிரார்த்திப்போம்



இந்துமாகடலின் முத்தென விளங்கும் இலங்கைத் திருநாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கும் புலம்பெயர்ந்து உலகெங்கும் பரந்துவாழும் எம் உறவுகளுக்கும் தைப்பொங்கல் இனியநல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்வெய்துகின்றேன்.

இன்று,தமிழ்கூறும் நல்லுலகம்எங்கும்தமிழர்திருநாள்,உழவர் பெருநாள் எனப் பெருமைப்படும் தைத்திருநாள் உவகையுடன் கொண்டாடப்படுகின்றது.

இப்பூவுலகில் பருவகாலங்கள் மாறிமாறிவருகின்றன. அத்தகைய மாற்றங்களுக்கு சூரியபகவானே காரணியாகின்றார். அந்தவகையில் மாறிவரும் மாரிகாலத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின்போதுவிதைக்கப்படுகின்ற பயிர் வகைகள் வளர்ந்து, முற்றி தைமாத ஆரம்பத்தில் அறுவடைக்குத் தயாராகின்றன.எனவே, எமது பாவனைக்கான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யஉதவிடும் சூரியபகவானுக்கு நன்றி பாராட்டும் திருநாளாகவே தைப்பொங்கல் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

முற்றத்தில் கோலமிட்டு, பூரணகும்பம் வைத்து,புதிதாகத் தயார் செய்தஅடுப்பில் புதுப்பானை வைத்து, புதிதாக அறுவடை செய்த நெல்மணிகளில் பிரித்தெடுத்த அரிசியைக் கொண்டு பாற்பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்குப் படைத்திடும் திருநாளாக இப்பொங்கல் பெருநாள்அமைகின்றது.

தைமாதம் பிறக்கின்றது என்றாலே மக்கள் மனங்களில் பெரும் எதிர்பார்ப்புக்களும் துளிர்விடத் தொடங்கி விடுவதுண்டு. எமது மக்களது மனங்களில் நீண்ட கால எதிர்பார்ப்பாக இருப்பது, தேசியப் பிரச்சினைக்கான தீர்வேயாகும். அந்தவகையில், நீண்டகாலமாகப் புரையோடிய புண்ணாகக் கருதப்படுகின்ற எமதுதேசியப் பிரச்சினைக்கு, புதிய அரசமைப்பினூடாகத் தீர்வைக் காண்பதற்கான முன் முயற்சிகள் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு எமது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய பல அம்சங்களை உள்ளடக்கியதான அரசமைப்புக்கான இடைக்காலஅறிக்கைமுன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில், தாமதமின்றி அதற்கான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மேலும் சிறந்த சிபார்சுகளையும் உள்ளடக்கி,அனைத்து மக்களதும் இறையாண்மையை மதிக்கக்கூடியதாகவும், அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கூடியதாகவும்,நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமானசுயாட்சியுடன் கூடிய ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதன் மூலம் இதய சுத்தியுடனான புரிந்துணர்வையும் இன நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு வழியேற்படவேண்டுமென இந் நன்னாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எனவே,சாந்தி, சமாதானத்துடன் கூடிய சௌபாக்கிய மிக்க நாடாக இந்நாடுசிறந்தோங்க,பிறக்கும் தைத் திங்கள் வழிகோலிட எல்லாம் வல்லஇறையருளை இறைஞ்சுவதுடன்,எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**இரா.சம்பந்தன்,நா.உ.,**
எதிர்க்கட்சித்தலைவர், இலங்கை நாடாளுமன்றம்.

## தமிழ் நிலத்தை ஆள்வோம் என்ற நம்பிக்கையுடன் பொங்கி மகிழ்வோம்!



ஆண்டுதோறும்வையமெல்லாம் தைத்திருநாள் விழா பாரம்பரியமாக கொண்டாட்டங்களுடன் நிகழும் காலமாகும். மத மாச்சரியுங்களைக் கடந்து மக்கள் இப் பொங்கல் திருநாளை கொண்டாடுகின்றனர்.

தமிழ் மக்கள் வாழ்விலும், நெல் வேளாண்மை செய்தோரும் பயனுறுவோரும் வீடுகளிலும், திருக்கோவில்களிலும், வாழும் இடங்களிலும் காலையிலெழுந்து புத்தாடை கட்டி, புத்தரிசி எடுத்து புதுப்பானையில் பசும்பாலும், வெல்லமுமிட்டு பொங்கலோ பொங்கலென்று பொங்கி சூரியனுக்கு நன்றியுடன் படைத்து வணங்கி விழாவினை தொடங்கிப் பொங்கல் பகிர்ந்து உண்ணும் பழக்க வழக்கம் தமிழர் வாழ்வியலாகி வருகின்றது. திருக்கோவில்களுக்கும் சென்று வழிபடுவர்.

சூரியன் வெய்யிலும், பகலாய் வெளிச்சமும், வேளா வேளையில் மழையும், நெல் விளைச்சலும் மனித குலம் உயிர் வாழப் பிரதிபலனில்லாது வாரி வழங்குவதால் நெஞ்சில் பொங்கும் நன்றியெனும் பண்பும், தமிழர் உலக நாகரிகத்தில் உயர்ந்து எடுக்கும் விழா பொங்கல் திருநாள் என்போம்.

மாதங்களில் மார்கழி மேல், தையில் வேளாண் அறுவடை அதனால் பொருட் செல்வம் எதிர்காலத்தை வென்றிட இதயத்தில் பொங்கிவரும் புது நம்பிக்கை, வாழ்வில் ஒளி தை பிறந்தால் வழி பிறக்கும் என்று மக்கள் உயிர் வாழ்வியலை நிலைநாட்டி வரும் காலமே பொங்கல் காலமாகும்.

அடுத்த நாள் ‘பட்டிப் பொங்கல்’, பால் தரும், செல்வந்தரும் மாடு வேளாண் நிலத்தை உழுது பண்படுத்தும். தமிழ் மக்கள் நன்றியுடன் பாராட்டும் மாட்டுச் செல்வத் திருநாளாய்க் கொண்டாடும் வளம் நிறை தமிழர் செல்வத்திருநாளாகும்.

மக்கள் வாழ்வியலில், துன்ப துயரங்கள் இயல்பான பொழுதும் தைபிறந்தால் வழிபிறக்கும் என்று நம்பிக்கை வளருவதும், வாழ்வில் பொங்கல் வருவதும் பண்டைக்கால முதல் இன்று வரை கொண்டாடி வருவது தமிழர் வாழ்வியலின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையிலும் 50 ஆண்டுகளுக்கும் மேலாய் விடுதலைப் போரில் இழந்து போன உயிர்களும், அழிந்து போன எம் தேசமும் கொடுத்திருக்கின்ற விலையும் அர்ப்பணமும் தை பிறந்து விட்டது விடுதலை வாழ்வு மலரும் எனக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புது நம்பிக்கை மீது திடசங்கற்பங் கொண்டு வாழ்ந்திட இத் தைப்பொங்கல் திருநாளிலும் பொங்கி மகிழ்வோம். தமிழர் பாரம்பரியத்தைப் பண்பாடுகளை இழந்து போவோமாயின் தமிழர்அடையாங்களையும் தனித்துவ நாகரிகத்தையும் வரலாற்றில் இழந்து விடுவோம்.

இஸ்ரேலிய மக்கள் நாடின்றி வாழ்வின்றி போராடிய காலத்தில் அத்தேசத்தின் தந்தை பென் கூரியன் தலைமையில் ஆண்டு தோறும் புத்தாண்டில் ஒன்று கூடி, ’அடுத்த ஆண்டு சுதந்திர தேசத்தில் வாழ்வோம்’ எனப் பிரகடனஞ் செய்யும் நம்பிக்கை தான் இந்நாளில் இஸ்ரேல் நாட்டில் ஆளும் மக்களாய் புதிய உலகின் வழிகாட்டிகளாய் உயர்ந்த நாகரிகத்தைப் படைத்திருக்கின்றனர். அது போன்று நம் தமிழ்; மக்களும் எழுவோம், வாழ்வோம் தமிழ் நிலத்தில் ஆள்வோம் என்ற நம்பிக்கையுடன் தைத்திங்களில் பொங்கி மகிழ்வோம்.

**மாவை. சோ.சேனாதிராசா,நா.உ.**
தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

## இருள் அகன்று எங்கும் நிரந்தர ஒளி பிறக்கட்டும்!



எமது மக்கள் கதிரவனுக்கு நன்றிக் கடன் செலுத்தும் ஓர் உன்னத தினமே தைப்பொங்கல் திருநாளாகும். இத் தைப்பொங்கல் திருநாளில் மக்களாகிய உங்களது மனங்கள் தோறும், நீடித்த நிம்மதியை தருகின்ற நிரந்தர மகிழ்ச்சியும் பொங்கி வரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்த உறுதியான நம்பிக்கையோடு நாம் அனைவரும் பிறந்துள்ள தைப் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியோடு வரவேற்போம்.

நீங்கள் நினைத்தவைகள் யாவும் நிறைவேறவில்லை என்ற ஏமாற்றங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

நான் என்றும் உங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருப்பவன். உங்கள் கனவுகள். ஏக்கங்கள், தேவைகள் எவைகள் என்பது எனக்கு நன்றாக தெரியும். வீடற்ற மக்கள் வீதியில் நிற்கிறீர்கள். நிலமிழந்த மக்களும் காணாமற்போன உறவுகளை இழந்து நின் மதியை தொலைத்த மக்களும் நீதி கேட்டு தெருக்களில் நிற்கிறீர்கள்.

சிறைகளில் வாடும் உங்கள் உறவுகளை எண்ணி நீங்கள் ஏக்கத்துடன் வாழ்த்து கொண்டிருக்கிறீர்கள். வேலையற்ற பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள் யாவரும் நிரந்தர வேலை வாய்ப்பின்றி துயரப்படுகின்றீர்கள். எமது வரலாற்று வாழ்விடங்கள் யாவும் அபிவிருத்தியின்றி விட்ட குறையில் வீழ்ந்து கிடக்கின்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அது போல் இம்முறை பிறந்து வரும் தைப்பொங்கல் திருநாளோடு உங்கள் வாழ்வில் புதியதொரு மாற்றத்தை நீங்களாகவே உருவாக்கவல்லவாய்ப்பொன்றும் உங்களை தேடி வருகின்றது.

வீணையைப்பற்றிப்பிடித்து நம்பிக்கையுடன் மீட்டுங்கள். அது உங்களது எதிர்காலத்தை நிச்சயம் ஒளிபெறச் செய்யும். மாற்றங்களை உருவாக்க முடியாத தொன்று தொட்டு பழைய அரசியல் வழிபாடுகளை முழுமையாக கைவிட்டு எழுந்து வாருங்கள்.


இந்த உறுதியும், நம்பிக்கையும், உங்களுக்கான உண்மையுள்ள வழிகாட்டலுமே எமது வரலாற்று வாழ்விடங்களில் மாற்றங்களை உருவாக்கும்.இருள் அகன்று எங்கும் நிரந்த ஒளி தோன்றட்டும். அனைத்து மக்களின் மனங்களிலும் மகிழ்ச்சி பொங்கி வழியட்டும்! அனைவருக்கும் தைப் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.

**[illegible] எம்.பி.**
**[illegible] கட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் துயர் நீங்க தைமகளே வருக!



தைப்பொங்கல் விழா உலகமெங்கும் தமிழர் வாழும் பிரதேசங்களில் இன்று மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.

பழையன கழிந்து புதியன புகுதல் எனும் பாரம்பரிய முறைகளின்படி "தை மகளை" வரவேற்பதில் தமிழ் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார்கள். தமிழ் மக்கள் வாழ்வோடிணைந்த பண்டிகைகளாகப் பலவற்றை ஆண்டு முழுவதும் நாம் கொண்டாடி வருகிறோம். தமிழர் பாரம்பரியங்களை வலியுறுத்தும் வகையிலும், அர்த்தமுள்ளதாகவும் இந்தப் பண்டிகை அமைகின்றன.

தமிழர் திருநாள் எனச் சிறப்பாக அழைக்கப்படும் பண்டிகை தைப் பொங்கல் ஆகும். சூரிய வழிபாடு, உழவுத் தொழிலைப் போற்றுதல் செல்வம் தரும் மாடு களுக்கு நன்றி செய்தல், கலாசாரம் பேணல் பல காரணங்களோடு பின்னிப்பிணைந்த இத் தைப்பொங்கல் திருநாள். மனதில் உவகை பொங்கினால் வாழ்வும் இனியதாய் அமையும் என்பதைக் காட்டுவதே தைப் பொங்கல்.

மக்கள் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானது உணவு. உணவுக்கு ஆதாரமான உழவுத் தொழிலே தமிழரின் பிரதான தொழிலாகும். உழவு சிறக்க வேண்டுமானால் மழை, வெயில் முதலான இயற்கையின் கொடைகள் வேண்டும்.

இவற்றுக்கு ஆதாரம் சூரியன். ஆகவே, தை முதல் நாளை சூரிய வழிபாட்டுக்காய் நியமித்து அவனுக்கு நன்றி தெரிவித்து பொங்கிப் படைத்து வழிபடும் வளக்கத்தை தமிழர்கள் ஏற்படுத்தினார்கள். உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் உழவர்கள் தம் உழவுத் தொழிலுக்கு உதவும் மாடுகளுக்கும் நன்றி பாராட்டும் தினமே தைப் பொங்கல் திருநாளாகும்.

தைப்பொங்கல் நாளன்று வீட்டிலுள்ள அனைவரும் அதிகாலையிலேயே எழுந்து விடுவர். சூரிய பகவான் கிழக்குத் திசையில் உதிக்க முன்னரே வீட்டு முற்றத்தில் பொங்கல் செய்வதற்கான கருமங்களை ஆரம்பித்து விடுவர். பானையில் உள்ள பொங்கல் பொங்கி மேலெழும் காட்சியை கண்டு வீட்டிலுள்ளோர் அனைவரும் கண்டு பரவசிப்பர். "பொங்கலோ பொங்கல்" என மகிழ்வோடு வாய்விட்டுக் கூவியபடி சூரியனையும், குல தெய்வங்களையும் பக்தியோடு வழிபட்டு பொங்கலை நிவேதிப்பர்.

படையல், நிவேதனம் முடிவடைந்த பின்னர் குடும்பத்தாருடனும், உறவினர்களுடனும் பொங்கல் பிரசாதத்தை உண்டு மகிழ்வர். பொங்காத உறவினர்கள் வீடுகளுக்குப் பொங்கலை கொண்டு சென்று மகிழ்வோடு கொடுத்து மகிழ்ச்சியில் பங்கேற்பது தமிழர் பாரம்பரியங்களில் அன்றும், இன்றும் நடைபெறுகிறது.

தைப்பொங்கல் நாள் முழுதும். வீடுகளிலே புனிதமும், ஆசாரமும், ஆனந்தமும் இருக்கும். மாலையிலே எல்லோரும் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று சிறப்பான வழிபாடுகளில் ஈடுபடுவர்.

இன்றைய தைப்பொங்கல் திருநாளில் பழையனகழிந்து, புதியன புகுந்து எல்லோருடைய வாழ்விலும் சுபீட்சமும், முன்னேற்ற மும் கிடைக்க எல்லாம் வல்ல சூரிய பகவானை வணங்கி அவனருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

**– கந்தையா கனகசபை**
**சண்டிலிப்பாய்.**

## சூரிய தரிசனம் செய்ய சிறந்த நேரம்


பொங்கல் தினத்தன்று மறக்காமல் சூரிய வழிபாடு செய்ய வேண்டும். தினமும் காலையில் எந்த நேரத்தில் சூரிய தரிசனம் செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

**சூரிய தரிசன செய்ய சிறந்த நேரம்:**

காலை சூரிய உதயம் முதல் 8 மணி வரையிலும் சூரியனை வெறுங் கண்ணால் தரிசிக்கலாம்.

மார்பளவு தண்ணீரில், ஏரி, குளம், ஆறுகளில் நின்றுகொண்டு இருகைகூப்பி சூரியனைப் பார்த்து வெறுங்கண்ணால் தரிசிக்க வேண்டும். குறைந்தது 30 நிமிடங்கள் செய்ய வேண்டும். தரிசிக்கும்போது காயத்ரி, அஷ்டோத்ரம் சொல்லிக் கொண்டே தரிசித்து வணங்க வேண்டும்.

இதனால் உடலிலும், மனதிலும் எண்ணற்ற ஏற்றமான மாற்றங்கள் நிகழ்வதை கண்கூடாக உணரலாம்.




புதிய பிரிவு
14-01-2018
ஆரம்பம்
சலுகைக் கட்டணத்தில்

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!!!

UGC University Grants Commission APPROVED CERTIFICATES

பட்டதாரியாகும் உங்கள் கனவை நிறைவேற்ற விண்ணப்பித்துவிட்டீர்களா?

B.Sc. in Computer Science
B.Sc. in Comp. Sci. (Top Up)
M.Sc. in Computer Science
B. Ed.
M. Ed.
D. Ed.
B. Sc. in Physical Education & Sports
B. Sc. in Civil Eng.
B. F. A. (Music / Dance)
B. F. A. - Top Up (Music / Dance)
M. F. A. (Music / Dance)
M.Phil (Music / Dance)
Ph.D (Music / Dance)
Ph.D

தொடர்புகளுக்கு:....
NORTH LANKA IIT
Top Floor, Peoples Bank Building, Stanley Road, Jaffna
Phone: 0767504535 | 0214927088


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 66

## புலிகளின் மாத்தையாவை சந்தித்தோம்

### அனுபவம் தந்த பாடம்

அக்காலத்திலேயே பொன். சுந்தரலிங்கத்தின் எதிர்ப்பும் தொடங்கிவிட்டது. எமது நிகழ்வில் பாடச் சம்மதித்த, மூத்த கலைஞரான நாகேஸ்வரி பிரமானந்தா அவர்கள், சுந்தரலிங்கத்தின் தூண்டுதலால் நிகழ்வில் பாடாது விட்டார். நிறைவுநாள் நிகழ்ச்சியில், என்.கே.பத்மநாதன், இராதாகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து வழங்கிய கெஞ்சிற் கச்சேரியன்று கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆட்களை வெளியே பிடித்துத் தள்ளி, வாசற்கதவைப் பூட்ட வேண்டி வந்தது. விழாக்காண வந்தோரை அங்ஙனம் செய்ய வேண்டிவந்ததால், பெரிதும் வருத்தமுற்றோம். இதன் பின்னர் சிலகாலம் மெல்ல மெல்ல எமக்கு இறங்குமுகம் ஏற்பட்டது. தேடி வந்த ரசிகர்களைத் துரத்திய குற்றத்தாற்றான், அவ்விறங்குமுகம் ஏற்பட்டதோ என, பின்னர் கலங்கினேன். அதை ஒரு பாடமாகக் கொண்டு, கம்பன் விழாவிற்கு வரும் இரசிகர்களோடு, மிக மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை, கழக உறுப்பினர்களுக்குப் பின்னர் கட்டளையாக இட்டிருந்தேன். இந்நிகழ்விற்தான் மிருதங்க வித்துவான்களான க.கண்ணதாசன், எஸ்.துரைராஜா, வேல்மாறன், வயலின் வித்துவான்களான எஸ்.கேசவமூர்த்தி, பா.கண்ணன், இரா.சிவராமன், பாக்கியலக்சுமி நடராஜா ஆகியோர் கழக மேடையில் முதன்முதலாய் ஏறினர்.

★ ★ ★

### என்.கே. பத்மநாதன் மணிவிழா (14.10.1991)

எங்கள் காலத்தில் நாதஸ்வரத் துறையில் முதன்மை பெற்றிருந்தவர் என்.கே.பத்மநாதன் அவர்கள் . அவரும் எம்மேல் பெரிய அன்பு கொண்டிருந்தார். அக்காலத்தில் நல்லூர் திருவிழாவிற்கு அவர்தான் வாசிப்பார். திருவிழாக் காலங்களில் எங்கள் கோட்டத்திற்கு வந்து, நான் சுட்டுப்போடப்போட தோசை சாப்பிடுவார். எங்கள் நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்து வாசிப்பார். இவருக்கு அரசாங்கம் கலாசூரி விருது வழங்கிய போது, என் குருநாதர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் கழகம் பாராட்டு விழாவொன்றை நடத்தியது. தவில் வித்துவான் சின்னராசாவிற்கு முன்னரே, எங்களோடு பழகத் தொடங்கியவர் இவர். ஆனால், அவரளவு மனவிரிவு இல்லாதவர்கான மூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரருக்கு நாம் விழா எடுத்தபோது, பொன். சுந்தரலிங்கத்தின் தூண்டுதலால் தனக்கு நாம் விழா எடுக்கவில்லை எனச் சற்று மனம் கசந்திருந்தார். நாம் முன்பு அவருக்கு விழா எடுத்தது அவரின் ஞாபகத்தில் இருக்கவில்லை. இக்காலத்தில் அவர் அறுபது வயதினை அடைய, பத்மநாதனின் மணிவிழாவினை நடத்த பொன்.சுந்தரலிங்கம் முயன்றார். அப்போது சுந்தரலிங்கத்திற்கு எம்மோடு உட்பகை மட்டுமே இருந்தது. இசைத்துறையையும் நாம் கையேற்று விடுவோமோ? எனும் பயம்தான், அவரது பகையின் காரணமாயிருந்தது. ஆரம்ப காலத்தில் எங்கள் முயற்சிகளுக்குப் பொன். சுந்தரலிங்கம் நிறைய கைகொடுத்துதவினார். அவரது மோட்டார் சைக்கிள் , ஒலிபெருக்கி என, அனைத்தையும் இலவசமாய் தந்துதவுவார். பத்மநாதனுக்கு மணிவிழா எடுக்க அவர் ஆயத்தம் செய்தபோது, எனக்கு அம்மை நோய் கண்டிருந்தது. ஆனாலும், அந்நிலையிலேயே அனைவரையும் அழைத்து வந்து, கோட்டத்தில் கூட்டம் நடத்தி, அம்மணிவிழாச் சபைக்கு என்னைத் தலைவராக்கினார். மூன்று நாள்கள் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற அவ்விழாவில், நிகழ்ச்சிகளை அமைக்கும் பொறுப்பினைக் கழகம் ஏற்றது. நிதிப் பொறுப்புக்களைச் சுந்தரலிங்கம் பார்த்துக்கொண்டார். விழாவில் எங்களது பட்டிமண்டபம், இசை நாடகம், கச்சேரி எனப் பல நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. விழா சிறப்புற்றது.

★ ★ ★

### இரண்டாவது இசை ஆராதனை(12.01.1992)

இவ்விழா எமது கம்பன் கோட்ட மேல் மண்டபத்தில், 1992 ஜனவரி 12 ஆம் திகதி காலையும் மாலையும் நடைபெற்றது. இவ்விழாவிற்தான் 'இசைப் பேரறிஞர்' எனும் விருதினை, முதன்முதலாக வழங்கத் தொடங்கினோம். ஓரிரு மாதங்களின் முன்னர் தான், நாதஸ்வர வித்துவான் என்.கே. பத்மநாதன் அவர்களின், மணிவிழா நடந்து முடிந்திருந்தது. அவரை விட வயதில் மூத்தவரான, நாதஸ்வர வித்துவான் சாவகச்சேரி திரு.எம்.பஞ்சாபிகேஷன் அவர்களுக்கு, இசைப் பேரறிஞர் விருதை வழங்குவதென முடிவு செய்தோம். யாழ். பல்கலைக் கழகத்தின் அப்போதைய துணை வேந்தர், பேராசிரியர் அ.துரைராஜா அவ்விருதினை வழங்கினார். கௌரவிப்புரையைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நிகழ்த்தினார். இம்முறையும் சங்கீத வித்துவான்களின் இசை ஆராதனையும், நாதஸ்வர, தவில் வித்துவான்களின் கச்சேரியும் காலை நடைபெற்றன.

மாலையில் நாதஸ்வரக் கச்சேரியும், கே.ஆர். நடராஜா, எஸ். கணபதிப்பிள்ளை, ஐ.வேலாயுதப்பிள்ளை, எல்.திலகநாயகம் போல், பொன்.சுந்தரலிங்கம், என்.வி.எம். நவரட்ணம், எஸ்.இராமநாதன் ஆகியோரது கச்சேரிகளும் நடைபெற்றன. பஞ்சாபிகேஷனுக்குப் பொன்னாடை, பொற்பதக்கம், மலர்முடி ஆகியவை, சூட்டிக் கௌரவித்தோம். இவ்விழா முடிந்ததும், எமது வழக்கத்தின்படி விழாவில் கலந்துகொண்டோர்க்கு, நன்றிக் கடிதங்கள் அனுப்பினோம். எங்களுக்கு எதிராய் இச்சந்தர்ப்பத்தை, சுந்தரலிங்கம் திறம்படப் பயன்படுத்தினார். ''நல்லூரில் உங்களுக்கு விழா எடுக்காமல், சாவகச்சேரி பஞ்சாபிகேஷனுக்கு வேண்டுமென்றே விழா எடுத்தார்கள்'' எனவும், ''அந்த விழாவிற்கு நன்றிக் கடிதம் போட்டவன்கள், உங்கட விழாவிற்கு இன்னும் நன்றிக் கடிதங்கள் போடவில்லை'' எனவும், பத்மநாதனைத் தூண்டிவிட்டார். பத்மநாதனும் அவரது பேச்சுக்கு எடுபட்டு, எங்களோடு முரண்படத் தொடங்கினார். ஆனாலும் வெளிப்பட எங்களோடு பகைக்கவில்லை. இவ்விழாவிற்கு வாழ்த்துச்சொல்லி பிரபாகரனிடமிருந்தும் கடிதம் வந்தது.

★ ★ ★

(தொடரும்...)



இரண்டாவது தியாகராஜ இசையரங்கு (ஓக. 24 – செப். 09.1991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

14.01.2018 – 20.01.2018

**சந்திராஷ்டம நாள்** – அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் முதலாம், 2 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமை திரயோதசித் திதி பி.இ. 2.31 மணிவரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: கேட்டை பகல் 1.14 மணிவரை. பின்னர் மூலம். மரணயோகம் பகல் 1.14 மணிவரை. பின்னர் சுபயோகம். இன்று தைப்பொங்கல், பிரதோஷ விரதம்.

**ராகுகாலம்** - மாலை 4.39 மணிமுதல் 6.06 மணிவரை

**சுபநேரம்** - பகல் 9.36 மணிமுதல் 11.06 மணிவரை

**திவசம் செய்ய வேண்டிய திதி**- தை மாத தேய்பிறை திரயோதசி.

**பிறந்தநட்சத்திர வழிபாடு** - கேட்டை.

## மேஷம்:

ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரத்தில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் ஏற்படும்.

நண்பர்கள், உறவினர்களின் சகாயம் கிட்டும். தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். விவசாயத்தில் பயிர்கள் செழிப்படைந்து நல்ல வருமானத்தைத் தரும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். திருமணமாகாதோருக்கு அதற்கான வாய்ப்பு வந்து சேரும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும்.

## ரிஷபம்:

அனுகூலமான வாரம். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். உறவினர்கள், நண்பர்களின் உதவி ஒத்தாசை கிடைக்கும். வேலையற்றோருக்கு திறமைக்குத் தகுந்த வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று உயர்கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைக்கும். திருமணமாகாதோருக்கு அதற்கான வாய்ப்பு வந்து சேரும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கௌரவப்பதவிகள் வந்து சேரும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும்.

## மிதுனம்:

யோசனையான வாரம். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். எதிர்பாராத பணவிரயங்கள் உண்டாகும்.

செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திணற வேண்டிய நிலை ஏற்படலாம். வியாபாரிகள் சில சிரமங்களை எதிர் நோக்க வேண்டி வரும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் அதிகரிக்கும். உறவினர்களின் வருகையால் செலவு அதிகமாவது கவலை தரும். முக்கியமான முடிவுகளை நிதானித்து எடுப்பது நல்லது. கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

## கடகம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பொறுப்புக்களும், அலைச்சலும் அதிகரிக்கும். சக உத்தியோகத்தர்களின் உதவிகள் குறையும். வெளிநாட்டு உறவினர் வரவால் களிப்பும், செலவுகளும் அதிகரிக்கும். வீட்டைத் திருத்தி அமைக்கக்கூடிய நிலை ஏற்படும். வாகனச் செலவுகளும் காணப்படும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தூரப் பயணங்களைத் தள்ளிப்போடுவது நல்லது.

## சிம்மம்:

இனிமையான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் இனிய சூழல் நிலவும். உறவினர்கள், நண்பர்கள் ஒத்து நடப்பார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். நீண்ட கால நண்பர் ஒருவரைச் சந்தித்து மகிழும் பாக்கியம் கிட்டும்.

பெண்களுக்கு திருமண காரியங்கள் கனிந்து வரும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்றுசேரும் வாய்ப்பு உண்டாகும். சகோதர வழியால் எதிர்பாராத நன்மை கிட்டும். புதிய வேலை வாய்ப்புகள் சிலருக்கு கிடைக்கும்.

## கன்னி:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு மேம்படும். குடும்பத்தில் பெண்களுக்கு புதிய வஸ்திரங்கள் ஆடை, ஆபரணங்கள் சேர்க்கையால் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். செய்யும் தொழில் மேன்மை உண்டாகும். உத்தியோக உயர்வுகள் தடையின்றிக் கிடைக்கும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். மாணவர்களின் திறமைகள் பளிச்சிடும். தொழிலாளருக்கு தொடர்ந்து தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். அரச வழியால் ஆதாயம் பெற வாய்ப்பு உண்டாகும்.

## துலாம்:

அலைச்சல் மிகுந்த நாள். தொழில் விஷயமாய் நிறைய அலைய வேண்டி வரும். சிலர் படித்த கையோடு வேலை தேடி அலைவார்கள். இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள். மாணவர்கள் தம் வகுப்புநேர ஆசிரியரைத் தேடித் திரிவார்கள். சிலர் வெளிநாடு செல்லும் எண்ணத்தில் முகவர்களின் உதவியை நாடுவார்கள். சிலர் கொடுத்த கடனை மீளப்பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். சிலர் உடல்நலக்கோளாறினால் மருத்துவ உதவியை நாடுவார்கள்.

## விருச்சிகம்:

நன்மையான வாரம். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்ப ஒற்றுமை மகிழ்ச்சி தரும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத பதவி உயர்வு ஏற்படும். தொழிற்பிரிவினர் முன்னேற்றம் அடைவார்கள்.

குடும்பத்துடன் சிலர் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வார்கள். அரச வழியால் நன்மை உண்டாகும். மாணவர் கல்வியில் உயர்வடைவார்கள். வியாபாரத்தில் வளர்ச்சி நிலை காணப்படும். கொடுக்கல், வாங்கலில் இணக்கம் காணப்படும்.

## தனுசு:

சமபலன்கள் உள்ள வாரம். பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். குடும்பத்தில் ஓரளவு நல்லிணக்கம் காணப்படும். கடன் கொடுக்கல், வாங்கலில் தொல்லைகள் ஏற்படுமாதலால் பண விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

உத்தியோகத்தர் சிலருக்கு விருப்பமில்லாத இடமாற்றம் கிடைக்கும். சிலருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு சீரடையும். பதவி உயர்வு கிடைக்கத் தாமதமாகும். தொழிற்பிரிவினரின் வளர்ச்சி தடைப்படக்கூடும். தூரப் பிரயாணங்களை தவிர்ப்பது நல்லது.

## மகரம்:

உயர்வான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் நல்லமுன்னேற்றத்தைத் தரும். விவசாயிகள் வங்கிகளின் உதவியால் கமச்செய்கையை விரிவுபடுத்துவார்கள். சகோதர உறவு வலுப்படும். பிரிந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். வெளியூர்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் சொந்த ஊர் திரும்புவார்கள். நீண்டகாலக் கனவுகள் நனவாகும். திருமணத் தடை விலகும். விரோதிகள் ஓடி ஒளிவார்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும்.

## கும்பம்:

கவலையான வாரம். தனவரவு குறையும். உடல்நிலை பாதிப்புற்று மருத்துவச் செலவுகள் உண்டாகும். புதியமுதலீடு செய்வதில் முன்னெச்சரிக்கை தேவை. செய்தொழிலில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

சிலருக்கு செய்யும் தொழிலை இழக்க வேண்டி வரலாம். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் தடை உண்டாகும். நண்பர்கள், உறவினர்களால் வீண் தொல்லைகள் உண்டாகும்.

## மீனம்:

விருத்தியான வாரம். பொருளாதாரம் விருத்தி அடையும். குடும்பத்தில் இணக்கமான போக்குக் காணப்படும். இது நாள்வரை தீராத நோயால் அவதிப்பட்டவர்கள் நோய் நீங்கி ஆரோக்கியமடைவார்கள். வியாபாரம் நன்கு அபிவிருத்தி அடையும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் அனுசரணையால் உயர்வுகளைப் பெறுவார்கள். கடன்கள் தீரும். கொடுத்த பணம் வசூலாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு வட்டமான வீதியில் ஒரே இடத்திலிருந்து மதுரா ஒரு திசையில் ஓட மீராவும், மாதுவும் எதிர்த் திசையில் ஓடுகிறார்கள். மதுரா பாதிவட்டம் ஓடுவதற்கு முன்னரே மாதுவைச் சந்திக்கின்றாள். மதுரா பாதிவட்டத்தைக் கடந்த பின்னர் மீராவைச் சந்திக்கிறாள். இதன்படி 8ம், 9ம் வினாக்களிற்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

08. மிக மந்தமாக ஓடுபவர்
1) மதுரா 2) மீரா 3) மாது

09. மிக வேகமாக ஓடுபவன்
1) மதுரா 2) மீரா 3) மாது

10. பெட்டி ஒன்றில் மாம்பழம், தோடம்பழம், கொய்யாப்பழம் என்பன இருந்தன. மாம்பழத்திலும் பார்க்க கொய்யாப்பழம் 2 மடங்கு இருந்தன. கொய்யாப்பழத்திலும் 3 மடங்கு தோடம்பழம் இருந்தன. எல்லாமாக பெட்டியினுள் 36 பழங்கள் இருந்தன. கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது?
1) 8 2) 12 3) 10

11. 
முதலில் தரப்பட்ட பொருட்களின் நிறைகளை அவதானித்து அதன் கீழே தரப்பட்ட நிறைகளின் அவதானிப்புக்களில் எது சரியானது ஆகும்?
1)  2)  3) 


12. தசாப்தம் என்பது 10 வருடங்களைக் கொண்ட காலமாகும். 1909வது வருடம் 20ம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்திற்கு உரியதாகும். அதன் பிரகாரம் எமக்கு சுதந்திரம் கிடைத்த வருடம் உரித்தாவது
1) 20ஆம் நூற்றாண்டின் நான்காவது தசாப்தத்திற்கு உரியது.
2) 20ஆம் நூற்றாண்டின் ஐந்தாம் தசாப்தத்திற்கு உரியது.
3) 20ஆம் நூற்றாண்டின் ஆறாம் தசாப்தத்திற்கு உரியது.

13. தகவலுக்கேற்ப வினாக்குரிய விடையைத் தெரிவு செய்க.
A யிலும் C, 3 cm உயரம் கூடியவன்.
C ஐ விட D, 4 cm உயரம் குறைந்தவன்.
B ஐ விட D, 2 cm உயரம் குறைந்தவன்.
- உயரம் குறைந்து செல்லும் ஒழுங்கில் அமைந்துள்ள விடை
1) BCAD 2) CBAD 3) DABC

14. சுரேன் தனது 10வது பிறந்தநாளை இரண்டு வருடங்களிற்கு முன்னர் கொண்டாடினான். அப்போது சுதாவின் வயது 4 வருடங்கள் ஆகும். இதன் அடிப்படையில் கூறக்கூடிய சரியான கூற்று எது?
1) இப்போது சுரேசின் வயது சுதாவின் வயதிலும் இரண்டு மடங்கு ஆகும்.
2) இப்போது சுதாவின் வயது சுரேசின் வயதிலும் இரண்டு மடங்கு ஆகும்.
3) இன்னும் ஐந்து வருடங்களில் சுதாவின் வயது பத்து வருடங்கள்.

15. ராஜன் நகர வீதியின் அரைமைல் தூரம் நடந்து செல்வதற்குள் பெரும்பாலானோர் அவனைக் கண்டு காலை வணக்கம் கூறி அளவளாவி விட்டுச் சென்றார்கள்.
1) ராஜன் ஒரு பைத்தியக்காரன் 2) ராஜன் ஒரு பண்டிதன் 3) ராஜன் ஒரு சமூகசேவகன்


16. அருகே பற்சில்லுத் தொகுதி தரப்பட்டுள்ளது. A ஆனது ஒரு தடவை சுழலும் போது, B ஆனது 12 தடவைகள் சுழலும், B நான்கு தடவைகள் சுழலும் போது C ஆனது 1 தடவை சுழலும் எனின், A ஆனது 6 தடவைகள் சுழலும் போது C எத்தனை தடவைகள் சுழலும்?





1) 18
2) 24
3) 12






11. 

இங்கு C தொடக்கம் D வரையுள்ள நீளத்தை மில்லி மீற்றரில் காட்டுக.
.......................... மில்லிமீற்றர்

12. பின்வரும் நெய்யரியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்குச் சமன்?

சதுரங்கள் ..............................................

13. ஒரு பாத்திரத்தில் 3ℓ 750mℓ குளிர்பானம் உள்ளது. அக்குளிர்பானம் மூன்று சம போத்தல்களில் நிரப்பப்பட்டது. ஒரு போத்தலில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது?
................................. மில்லிலீற்றர்

14. 

இவ்வுரு மூன்று பக்கங்களும் சமனான முக்கோணி. இதன் சுற்றளவு 27m ஆகும் எனின் AB, AC, BC ஆகியவற்றின் நீளம் எத்தனை மீற்றர்?
AB= AC= BC= [15x2=30]

**16. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.**




1. கிளைகள் மூலம் பரம்பலடையாத தாவரம்
1) பாகல் 2) போகன்விலா 3) பசளி

2. காற்றின் மூலம் பரம்பலடையும் தாவரம்
1) மாமரம் 2) பொன்னொச்சி 3) மருது

3. இலங்கைக்கேயுரிய விலங்கு
1) தீக்கோழி 2) யானை 3) தேவாங்கு

4. இரவில் உலாவித்திரியாத விலங்கு
1) எலி 2) பாம்பு 3) பசு

5. மிளகாய்ப் பூவின் நிறம்
1) மஞ்சள் 2) சிவப்பு 3) வெள்ளை


6. மேசன் தொழிலாளி பயன்படுத்தாத உபகரணம் எது?
1)  2)  3)  4) 

7. நற்காரியங்களுக்குச் செல்லும்போது நீர்ப்பாத்திரத்தில் வெள்ளைப் பூக்களைப் போட்டு எடுத்துச் செல்லும் சம்பிரதாயம் உடையவர்கள்
1) தமிழர் 2) சிங்களவர் 3) பறங்கியர் 4) முஸ்லிம்கள்

8. பின்வரும் கூற்றுக்களில் நீர் மாசடைதலுடன் தொடர்பற்ற கூற்று
1) தொழிற்சாலைக்கழிவுகள் கலத்தல் 2) மனிதக் கழிவுகள் கலத்தல்
3) குளோரின் இட்டுப் பாதுகாத்தல் 4) தோட்டத்திற்கு விசிறும் கிருமிநாசினிகள் கலத்தல்

9. கத்தரி, மிளகாய், வெண்டி, தக்காளி இவற்றைத் தாக்கும் பூச்சி
1) நத்தை 2) வெட்டுக்கிளி 3) மீலிமூட்டைப்பூச்சி 4) அந்து

10. இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
1) ஆதர் சி.கிளார்க் 2) ஆர்.டி. சேனநாயக்கா
3) C.W.W. கன்னங்கரா 4) கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி

11. 

தரப்பட்ட படத்தில் வீதிச்சமிக்ஞை விளக்குத் தரப்பட்டிருக்கிறது. இதனை ஒளிரச்செய்வதற்கு சுற்றுப் பூரணப்படுத்தப்பட வேண்டும். படத்தில் A யினால் குறிக்கப்பட்டுள்ள ஓட்டுக்களை ஒட்டப் பயன்படுத்தப்பட்ட பொருள்
1) இறப்பர் 2) கடதாசி
3) துணி 4) ஈயம்

12. உடல் வளர்ச்சியை பேணும் உணவுக்கூறு
1) மாப்பொருள் 2) புரதம் 3) இலிப்பிட்டு 4) கனியுப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மஞ்சள் நிறமான மரக்கறிகளில் உள்ள உயிர்ச்சத்து
1) உயிர்ச்சத்து B 2) உயிர்ச்சத்து C 3) உயிர்ச்சத்து A 4) உயிர்ச்சத்து D

14. நாம் வீட்டில் பயன்படுத்தும் பாறாங்கத்தியானது துருப்பிடித்துள்ளது, கைப்பிடி உக்கிவிட்டது. கையில் படுமானால் காயம் ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே இதற்கு நாம் செய்யவேண்டியது
1) அதனை எறிந்து விட வேண்டும் 2) கைப்பிடியிட்டு கூர்மையாக்கிப் பாவிக்கவேண்டும்
3) புதியதை வாங்கி உபயோகப்படுத்துதல் 4) பாவித்தபின் அதனை கைவிடவேண்டும்


15. நெல்லிலிருந்து பதரை நீக்குவதற்குப் பின்பற்றிய பழைய முறை
1) நெல்லைப் பொறுக்கி எடுத்தல் 2) காற்றில் நெல்லைத் தூற்றுதல்
3) வெயிலில் காயவிடுதல் 4) நீரில் நனைய விட்டு எடுத்தல்

16. தோட்டத்திற்கு வரும் பூச்சிகளை உணவாகக் கொள்ளும் பிராணிகள்
1) கிளி, குயில் 2) ஆடு, நாய் 3) ஓணான், தவளை 4) முயல், பூனை

17. அவித்த வித்துக்கள் பயன்படுவது
1) பொதிசெய்ய 2) புதிய தாவரங்களை உண்டாக்க
3) உணவாக 4) களஞ்சியப்படுத்த

18. **ISO** இக்குறியீடு பொதி செய்யப்பட்ட பொருட்களில் இடப்பட்டிருப்பதன் விளக்கமானது பின்வருவனவற்றில்
1) விற்பனைக்குத் தடை செய்யப்பட்ட பொருள் என்பது
2) சர்வதேச ரீதியில் நுகர்வதற்குப் பொருத்தமானது என்பது
3) அதியுயர் விலை கூடியது என்பது
4) விலை குறைவான பொருள் என்பது

19. பின்வரும் குறியீடுகளில் வீதி முன்னால் ஒடுங்குகிறது எனும் கருத்தை உணர்த்தும் குறியீடு



20. இலங்கை மின்சார சபை எனும் கருத்தை உணர்த்தும் குறியீடு பின்வருவனவற்றில் எது?



21. கொல்லன் கம்மாலையில் தீ மூட்ட உதவுவது
1) காஸ் அடுப்பு 2) புகை துருத்தி 3) அடுப்பு 4) மின்சாரம்

22. கடவுச்சீட்டு வழங்குதல், அஞ்சல் அட்டை பெறல், தேசிய அடையாள அட்டை வழங்குதல் இவற்றினை வழங்கும் சேவை நிறுவனங்களின் ஒழுங்கு
1) பிரதேசசபை, போக்குவரத்து அமைச்சு, பிரதேச செயலகம்
2) குடிவரவுகுடியகல்வுத் திணைக்களம், அஞ்சல் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம்
3) பிரதேச செயலகம், பிரதேசசபை, ஆட்பதிவுத் திணைக்களம்
4) ஆட்பதிவுத் திணைக்களம், பிரதேசசபை, அஞ்சல் திணைக்களம்

23. வயல்வெளிகளையும், மலைகளையும் குறித்துக்காட்டப் பொருத்தமான நிறங்கள்
1) நீலம், பச்சை 2) பச்சை, மஞ்சள் 3) பச்சை கடும்கபிலம் 4) நீலம், கபிலம்

24. ஜின் கங்கை கடலுடன் கலக்குமிடம்
1) யாழ்ப்பாணம் 2) காலி 3) சிலாபம் 4) கொழும்பு

25. இலங்கையில் கட்டுப் பாற்தொழிற்சாலை அமைந்துள்ள இடம்
1) அம்பேவல 2) பொலநறுவை 3) வெலிசறை 4) அம்பாறை

26. மாலையில் செவ்வானம் தோன்றுதலும், அதிகாலையில் பனிபெய்தலும் பின்வருவனவற்றில் எதன் அறிகுறிகளாகும்?
1) தொடர்ச்சியான மழை 2) வரட்சி 3) சுனாமி 4) புயற்காற்று

27. தரமான தேயிலை, தரமற்ற தேயிலை இரண்டையும் நீரில் இட்டுப் பரிசோதிக்கும் போது நீரில் தோன்றும் நிறங்கள் முறையே
1) கபிலம், இளமஞ்சள் 2) இளமஞ்சள், கபிலம் 3) மஞ்சள், சிவப்பு 4) இளமஞ்சள், சிவப்பு

28. கடுகுபல் மலரின் நிறம்
1) மஞ்சள் 2) சிவப்பு 3) வெள்ளை 4) ஊதா

29. பழத்தின் வெளியே விதை காணப்படும் தாவரம்
1) றம்புட்டான் 2) மரமுந்திரி 3) வாழை 4) மாதுளை

30. இரவு வானில் சந்திரன் தோன்றாத நாள் அழைக்கப்படுவது
1) பௌர்ணமி 2) பூரணை 3) அமாவாசை 4) தேய்பிறை [30x1=30]



# கல்விக் கதிர் வெளியீடு


## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 4

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி I நேரம்- 45 நிமிடம்

- **ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. முதலில் தரப்பட்டுள்ள மூன்று உருக்களிற்கும் பொருத்தமான உருவைத் தரப்பட்டுள்ள விடைகளுள் தெரிவு செய்க.




02. ஒரே கூட்டத்திற்கு மட்டும் உரித்துடைய உருக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.



03. பின்வரும் பாடல் வரிகளுடன் நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.
ஓடே என் வீடு
ஓடுவதில் நான் கடைசி
இரவே என் விருப்பு
இரைக்காகத் தாவரத்தை விரும்பிடுவேன்



04. பாலூட்டியும் நான் ஆவேன்
பழங்களும் காய்களும் பறித்துண்பேன்
மனிதனும் என் வழித்தோன்றல்
மரத்தில் தாவிடும் இனமாவேன்




05. எண்கோலத்தில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



1) 120 2) 160 3) 80

06.



1) 56 2) 52 3) 48

07. நிரு காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது அவனுடைய நிழல் அவனுடைய வலக்கைப் பக்கம் விழுவதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் அவன் பயணம் செய்த திசை எது?
1) வடக்கு 2) தெற்கு 3) கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜெ' மரண விசாரணை ஆணையத்தில் அப்பலோ தாக்கல் செய்தது என்ன?



சென்னை,ஜன.14

முன்னாள்முதல்வர்ஜெயலலிதா மரண விசாரணை அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு சந்தேகங்களைப் போக்கி உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்காக, ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக சந்தேகம் எழுப்பியவர்கள், குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள், ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்தஅப்பலோமருத்துவமனை நிர்வாகம், வைத்தியர்கள் என அனைத்துத் தரப்பினரிடமும் நீதிபதி ஆறுமுகசாமி விசாரித்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்து வருகிறார்.

அவ்வகையில், ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை தொடர்பான ஆவணங்களை விசாரணை ஆணையத்தில் தாக்கல் செய்யவேண்டும் என சென்னை அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகத்திற்கு நீதிபதி ஆறுமுகசாமி உத்தரவிட்டிருந்தார். ஆனால், அப்பல்லோ மருத்துவமனை இதனைச் சமர்ப்பிக்காமல் காலம் தாழ்த்தி வந்தது. இதையடுத்து, ஆவணங்களை ஜனவரி 12ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என விசாரணை ஆணையம் கெடுவிதித்தது.

அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் சார்பில் நேற்று விசாரணை ஆணையகத்தில் 2 பெட்டிகளில் கொண்டு வரப்பட்ட ஆவணங்களை நீதிபதி ஆறுமுகசாமியிடம் ஒப்படைக்கபட்டன. 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22 இல் ஜெயலிதா சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டமை முதல் அதே ஆண்டு டிசெம்பர் 5 வரை ஜெயலலிதாமரணம்அடைந்தமை வரையிலான மருத்துவ ஆவணங்கள் ஆணையகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நகல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு, மூல ஆவணங்களை ஆணையம் திருப்பித் தந்துவிட்டதுஎனஅப்பலோமருத்துவமனை நிர்வாகம் தகவல் அளித்துள்ளது. (ப)

## இனி விதைப்பது நற்பயிராகட்டும் கமலஹாசன் பொங்கல் வாழ்த்து



சென்னை,ஜன.14

உழவர் திருநாளாம் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, நடிகர் கமலஹாசன் அவரது டுவிட்டர் பக்கத்தில் பொங்கல் வாழ்த்து தெரிவித்திருக்கிறார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகைக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும். சினிமா பிரபலங்களும் வாழ்த்து தெரிவித்து வரும் நிலையில், நடிகர் கமல் அவரது டுவிட்டர் பக்கத்தில் பொங்கல் வாழ்த்து தெரிவித்திருக்கிறார். அவரது டுவிட்டர் வாழ்த்து பின்வருமாறு,

அனைவருக்கும் பொங்கல் நன்னாள் வாழ்த்துக்கள். இனி விதைப்பது நற்பயிராகட்டும். வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர். வாழிய பாரத மணித்திருநாடு' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## மன அழுத்தத்தால் கணைய புற்றுநோய்

**ஆய்வில் புதிய தகவல்**

உணவு பழக்க வழக்கம், மரபணு உள்ளிட்ட பல்வேறுகாரணங்களால் புற்று நோய் ஏற்படுகிறது. தற்போது மன அழுத்தம் காரணமாக கணைய புற்று நோய் உருவாகுவதாக சமீபத்திய ஆய்வு தெரிவிக்கின்றன.

தொடக்கத்தில் எலிகள் மூலம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அது உறுதி செய்த பின் கணையப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெறுபவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் பெரும்பாலானோருக்கு மன அழுத்தத்தால் கணைய புற்று நோய் தாக்கி இருப்பது கண்டறியப்பட்டது. அதிகமானமனஅழுத்தம் காரணமாக நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு ஓமோன்கள் வெளியாகி அதன் மூலம் டி.என்.ஏ மூலக்கூறுகளில்மாற்றம் ஏற்பட்டு கணையத்தில் புற்று நோய் கட்டிகள் ஏற்படுகின்றன என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியா, சீனாவுடன் இணைந்து செயற்படுவது நல்ல விடயம்




வொஷிங்டன்,ஜன.14

இந்தியா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து செயற்படுவது நல்ல விடயம் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது அதிபர் ட்ரம்ப் கூறியதாவது,

இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் இணைந்து செயற்படுவது நல்ல விடயம். கெட்ட விடயம் அல்ல. சக்தி வாய்ந்த இராணுவம், எண்ணெய் வளம் ஆற்றலை அமெரிக்கா பெற்றிருக்கிறது. ஆனால் முந்தய அரசு அத்தகைய இராணுவத்தைக் கொண்டிருக்கவில்லை.

நாங்கள் உலகில் பல நாடுகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். பிற நாடுகளுடனான நட்புறவை நன்றாகப் பாதுகாத்து வருகிறோம் என நினைக்கிறேன். நான் இன்று காலை கூட தென் கொரிய அதிபர் மூனுடன் இரு நாட்டு உறவுகள் தொடர்பாகப் பேசினேன். நிறைய நன்மைகள் நடைபெற இருக்கின்றன. என்ன நடக்க இருக்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

## வைரமுத்துவை மிரட்ட கனவு காணாதீர்கள்

சென்னை,ஜன.14

கவிஞர் வைரமுத்துவை மிரட்டலாம், ஊறு விளைவிக்கலாம் எனக் கனவு கூடக் காண வேண்டாம் என்று வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

நம் உயிரினும் மேலான தமிழ் மொழிக்கு காலத்தால் அழியாத காவியங்களை தந்த படைப்பாளிதான் கவிப்பேரரசர் வைரமுத்து. தேனினும் இனிய பாடல்களைக் கலைத்துறைக்குத் தந்தார்.

அவர் தீட்டிய கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சிகாவியம், மூன்றாம்உலகப் போர் புதினங்கள் தமிழ்க் குலத்தின் பண்டைய பண்பாட்டு நெறி முறைகளையும் இருபதாம் நூற்றாண்டின் தமிழனுடைய வாழ்க்கைப் போராட்டத்தையும் அற்புதமாக சித்திரித்தவையாகும்.

அரை நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக செந்தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் அவர் ஆற்றி வருகிற இலக்கியப் பணி நன்றிக்குரியதாகும். வைரமுத்து தனி மனிதரல்லர் தமிழர்களின் சொத்து.

விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கும் கருத்துத் தொடர்பாக அச்செந்தமிழ்க்



வைகோ ஆவேசம்

கவிஞன் வருத்தம் தெரிவித்துள்ளார். தமிழ் இலக்கியப் பணியாற்றிவரும் நாளேடும் வருத்தம் தெரிவித்துள்ளது. அவரது கருத்தை விமர்சிப்பது, அது தவறு எனக்கூறுவது ஒவ்வொருவர் உரிமையாகும்.

ஆனால், கவிஞர் வைரமுத்துவை கொடூரமான சொற்களால் இழிவுபடுத்தி மிரட்ட முயல்வதும் உயிருக்கே உலை வைப்போம் என்று கூச்சலிடுவதும், நாளேட்டை அச்சுறுத்துவதும் மிகவும் கண்டனத்திற்குரியதாகும்.

தென்பாண்டி மண்டலத்தின் தீரமிகு கவிஞரை மிரட்டலாம் என்றோ அவருக்கு ஊறு விளைவிக்கலாம் என்றோ எவரும் கனவுகூடக் காணவேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

# கவிஞர் வைரமுத்துவுக்கு எதிராக வழக்குப் பதிவு

ஆண்டாள் தொடர்பாக சர்ச்சைக் கருத்துத் தெரி வித்தோம் என கவிஞர் வைரமுத்து மீது பொலிஸில் வழக்குப் பதியப்பட்டுள்ளது.

இந்துக் கடவுள் ஆண்டாள் தொடர்பான சர்ச்சைக் கருத்துத் தெரிவித்த வைரமுத்துக்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், விருதுநகர் மாவட்டம் ராஜபாளை யத்தைச் சேர்ந்த இந்து முன்னணி நகர செயலாளர் சூரி வடக்கு பொலிஸ் நிலையத்தில் வைரமுத்து மீது வழக்குப்பதிவு செய்துள்ளார்.

அதில், கடந்த 7ஆம் திகதி ராஜபாளையத்தில் நடந்த ஒரு விழாவில் பங்கேற்று பேசிய கவிஞர் வைரமுத்து, இந்து கடவுளான ஆண்டாள் தொடர் பான சர்ச்சையான கருத்துக்களை தெரிவித்துள்ளார். இதனால் பக்தர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

ஆண்டாளை அவமதிப்பு செய்தது தொடர்பாக அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில் இன்ஸ்பெக்டர் [illegible] விசாரணை நடத்தி, கவிஞர் வைரமுத்து மீது அவமதிப்பு வழக்குப்பதிவு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலந்தில் மூன்று அரசர்கள் பேரணி

மூன்று அரசர்களின் நினைவாக போலந்து நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணிகளில் 12 இலட்சம் மக்கள் கலந்துகொண்டனர். ஜேர்மனி ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்து விடுதலை பெற்று 1918ஆம் ஆண்டு போலந்து நாடு குடியரசாக நிறுவப்பட்டதன் முதல் நூற்றாண்டை சிறப் பிக்கும் வண்ணம் இப்பேரணி இவ்வாண்டு போலந்து நாட்டின் 660 நகரங்களிலும் சிற்றூர்களிலும் நடைபெற்றது.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## செபிக்காத மேய்ப்பர் மக்களுக்காக இல்லை

மேய்ப்பரின் அதிகாரம் இறைவனுக்கும் மக்களுக்கும் நெருக்கமாக இருப்பதிலிருந்து வருகின்றது. உணர்வு, அருகாமை, சீரான வாழ்வு ஆகியவை மேய்ப்பரின் மூன்று பண்புகள். இயேசுவின் போதனை மக்கள் மனங்களில் வியப்பை உருவாக்கியது. இயேசு அதிகாரம் கொண்டிருந்தார். அவர் மக்களின் பிரச்சனைகள், துன்பங்கள் மற்றும் பாவங்களைப் புரிந்துகொண்டவராக அவர்களுக்கு மிக நெருக்கமாக இருந்தார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# புனித யோசவ்வாஸ் ஆண்டு நினைவு தினம் சில்லாலை சின்ன உறோமையில் நிகழ்வு







இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் ஆண்டைச் சிறப்பாக நிறைவு செய்யும் விசேட நிகழ்வு 31 ஜனவரி 2017 அன்று சில்லாலையில் அமைந்துள்ள யாழ் மறைமாவட்ட புனித யோசவ்வாஸ் அடிகளார் யாத்திரைத் தலத்தில் யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நிறைவுபெற்றது. முன்னதாக இலங்கையின் அப்போஸ் தலர் புனித யோசவ்வாஸ் ஆண்டினை நிறைவு செய்யும் மறை மாவட்ட யாத்திரை நிகழ்வுகளில் கலந்து புனிதருக்காக இறைவனுக்கு நன்றி கூறவும் அவருடைய பரிந்துரையை மன்றாடவும் அன்போடு அழைப்பு விடுத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய போது யோசவ்வாஸ் முனீந்திரர் என அழைக்கப் பட்ட இவர் இலங்கை முழுவதிலும் பணி யாற்றி இலங்கையின் அப்போஸ்தலர் என அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். மூன்றாம் உலக நாடு ஒன்றில் ஒறற்ரொறி யன் துறவறசபையை நிறுவி திருச்சபையை உருவாக்கிய ஐரோப் பியரல்லாத முதல்வர் இவர் ஆவார். இவரின் ஒறற்ரொறியன் துறவற சபையானது காலனித்துவ காலத்தில் ஐரோப்பியர் யாருமல்லாத முழுமையான சுதேச சபையாகும். இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பணியாற்றிய இவர், திருவிவிலியத்தைத் தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் மொழி பெயர்த்தவர் என்பது விசேட முக்கியத்துவத்துடன் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

இலங்கையின் கலாசார பண்பாட்டை மதித்து, பண்பாட்டு மயமாக்கலை மேற்கொண்டு - இன மொழி வேறுபாடுகளைக் கடந்து, இலங்கை மக்கள் சத்தியவேத விசுவாசத்தில் வளர வேண்டும் என்பதில் கவனம் கொண்டு பணியாற்றியவர் என்பது இவரின் பணிக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். சில்லாலை கதிரை மாதா ஆலய வளாகத்தில் யோசவ்வாஸ் அடிகளாரின் திருச் சுரூபத்தை மறைந்த சில்லலைப் பங்குத் தந்தையாக இருந்த ம. இ. பயஸ் அடிகளார் தமிழ்ப்பண்பாட்டு முறையில் அமைத்திருக்கிறார் என் பது குறிப்பிடத்தக்கது.

## உண்மையின் எண்ணங்கள்





இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் ஆண்டினை நிறைவு செய்யும் நிகழ்வு 31 ஜனவரி 2017 அன்று சில்லாலையில் புனித யோசவ்வாஸ் அடிகளாருக்கு அமைக்கப்படும் யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலத்தில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நிறைவு பெற்றது என் பது சிறப்பு செய்தியாகும். புனித யோசவ்வாஸ் ஆண்டு பற்றிய செய்திகளை 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி நிறையவே தந்து கொண்டே வந்திருக்கிறது. புனித யோசவ்வாஸ் அடிகளார் தனது 59 வருட உலக வாழ்வில் 35 வருட குருத்துவப்பணியை புரிந்துள்ளார். அதில் 24 ஆண்டுகள் இலங்கை மண்ணில் பணியாற்றியுள்ளார். அதிலும் மூன்று ஆண்டுகள் (1687 -1711) தமது இருப்பிடத்தை சில்லாலையில் அமைத்துக்கொண்டார் எனச் சரித்திரச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

தமது கிறிஸ்தவ முன்மாதிரியான வாழ்வால் சின்ன உறோம் எனப் புகழ் பெற்றிருந்த இவ்வூர் மக்கள் யோசவ்வாஸ் முனீந்திரருக்கு புகலிடம் கொடுத்து, பாதுகாத்து பராமரித்தமையால் இன்றும் வரலாற்றில் பேசப்படுகிறார்கள். இவர்களின் இந்தப் பணிக்கு கௌரவம் கொடுப்பது போல் புனித யோசவ் வாஸ் அடிகளாரின் யாழ் மறைமாவட்ட யாத்திரைத் தலம் சில்லாலையில் அமைக்கப்படுகிறது. இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பணியாற்றிய இவர், இலங்கையின் அப்போஸ்தலர் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளார்.

இலங்கையின் முதற் புனிதரான யோசவ் வாஸ் அடிகளார் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தேர்தலிலும் யாப்பு மூலமான அரசியல் தீர்விலும் அருள் வரம் பொழிவாராக.

# மன்னாரின் மூன்று ஆயர்களை கௌரவிக்கும் சிறப்பு நிகழ்வு



மன்னார் மறைமாவட்டத்தின்; மூன்று ஆயர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு 03 ஜனவரி 2018 அன்று மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. மறைமாவட்டதில் பணிகளை அர்ப்பணிப்போடுசெய்த பணி ஓய்வு பெற்ற ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையை வாழ்த்தியும், கடந்தஇரண்டு வருடங்களுக்கு மேலாக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் பணியை மேற்கொண்ட பின்னர் திருமலை மறை மாவட்டத்திற்குத் திருப்பிச் செல்லும் ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகைக்கு நன்றி தெரிவித்தும் மன் னார் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராகப் பணிப் பொறுப்பேற்றுள்ள ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை வரவேற்றும் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாரும் மன்னார் மறைமாவட்ட நிதியாளர் அ.இராஜநாயகம் அடிகளாரும் ஆயரின் செயலர் இ.நீக்லஸ் அடிகளாரும் செயற்படுத்தியிருந்தனர். இலங்கையில் உள்ள 12 கத்தோலிக்க மறைமாவட்டங்களில் மன்னார் மறைமாவட்டம் ஒப்பீட்டளவில் அதிக கத்தோலிக்க மக்களைக் கொண்ட ஒரு மறை மாவட்டமாகும். 43 பங்குகளையும் 73 மறை மாவட்டக் குருக்களையும் ஏனைய துறவற சபைகள் உட்பட 106 குருக்களையும் கொண்டதாக மன்னார் மறைமாவட்டம் இன்று விளங்குகிறது.

போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க சமயத்தைப் பாதுகாப்பதற்காக 700க்கும் மேற்பட்ட கத்தோலிக்க மக்கள் இரத்தம் சிந்திய மண் மன்னார் மண். மரியன்னையின் உலகப்பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றாக எண்ணப்பட வேண்டிய யாத்திரைத்தலம் மன்னார் மறைமாவட்டத்தின் இதயமாகக் கருதப்படும் மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம் என்பதை திருத்தந்தை பிரான்சீஸ் தம் இலங்கைக்கான வருகையின் போது தம் பாதம் பதித்து உலகிற்குக் காட்டினார்.

# தமிழ் மக்களின் உணர்வுகளை நன்கு புரிந்து செயற்படுவேன்

## மன்னார் புதிய ஆயர் தெரிவிப்பு



மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் மன்னார் மறைமாவட்ட புதிய ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து செயற்படுவேன் என ஆயர் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பு 5 ஜனவரி 2018 அன்று மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. முதலில் மன்னார் ஆயர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் கருத்துத் தெரிவிக்கும்போது -

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசவ் ஆண்டகை முன்னெடுத்துச் சென்ற தமிழ்த் தேசியப் பணிகளை புதிய ஆயரும் முன்னெடுக்க வேண்டுமென வேண்டுகிறேன் எனத் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் 3 ஆவது புதிய ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை யாழ்ப்பாணத்தில் பிறந்தும் அவரின் சகோதரக்குரு ஜோ பெர்னாண்டோ அடிகளார் யாழ். மறை மாவட்டத்தில் பணியாற்றியிருந்தும் (1962 - 1980) வடபகுதியைப் பொறுத்தவரை புதிய மன்னார் ஆயர் அதிகம் அறியப்படாத ஒருவராகவே இருந்துள்ளார்.

அவர் பற்றி பலருக்கும் முழுமையான விபரம் தெரியாத நிலையில் அவர் பற்றிய எதிர்பார்ப்பு மிக உயர்வாகவே உள்ளது. மன்னார் மறைமாவட்டத்தின் 3ஆவது ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை 45 ஆண்டுகள் கொழும்பு உயர் மறை மாவட்டத்தில் பணியாற்றி சிங்கள மொழியை மிகச்சிறப்பாகப் பேசவும், சிங்கள அரசுத் தலைவர்கள் பலரை நன்கு அறிந்தவராகவும் இருக்கின்ற நிலையில் தமது பொறுப்பை புதிய ஆயரும் தன்னினத்தின்பால் உவந்து முன்னைய ஆயர்களைப் போல் சிறப்பாக அருள்பணியாற்றுவார் என எதிர்பார்க்கலாம்.

மன்னார் மறைமாவட்ட புதிய ஆயர் கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய காலத்தில் இவரின் நெறிப்படுத்தலிலும் கல்வி அறிவிப்பிலும் உருவாக்கப்பட்ட பல குருக்கள் இன்று மன்னார் மறை மாவட்டத்தில் சீரோடும் சிறப்போடும் பணியாற்றுகின்றனர். இவர்களின் ஒத்துழைப்புடன் மன்னார் மறைமாவட்டத்தை இன்னும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல ஆயரையும் குருக்களையும் இறைமக்களையும் வாழ்த்துகின்றோம். வளர்க மன்னார் மறை மாவட்டம். வாழ்க புதிய ஆயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழிற்சங்க மிரட்டலும் ஆளுமையற்ற நிர்வாகமும்

## ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

சந்தியடியில் ஊர்வம்பளக்க வழக்கமாகக் கூடுவோர் வந்திருந்தனர்.

*''தமிழீழ விடுதலைப் புலிகளை நாங்கள் மறந்தாலும், சுதந்திரக்கட்சிக்காரர் மறக்க விடாயினம் போல இருக்கு''* என்று சிரித்தபடி சொல்லிக் கொண்டே, கச்சான் கடையைத் திறந்தாள் செல்லாச்சி.

*''அவை ஏன் ஞாபகப்படுத்துகினம்?''* என்று கேட்டார் ஏரம்பர்.

அதற்கு ஜீவன், இணையத்தில் உலாவிய ஒளிக்கீற்றொன்றைக் கைபேசியில் காட்டினான்.

அதில் யாழ்ப்பாணத்தில் சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசார நிகழ்வொன்றில் விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடலான 'நித்திரையா தமிழா' என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அதனைப் பார்த்த ரூபன், *''போற போக்கிலை ஜனாதிபதித் தேர்தலுக்கும் இந்தப் பாட்டுகளைப் போட்டுத்தான் வாக்குக் கேட்கப் போகினம் போல இருக்கு. சரி, அந்தக் கட்சியிலை இருக்கிறவையின்றை சொந்தபந்தங்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலை இருந்திருப்பினமாக்கும். அதனாலை அவைக்கும் உரிமை இருக்கு என்று நினைக்கினம். தமிழ்த் தேசியம் கதைக்கிறவை மட்டும் விடுதலைப் புலிகள் மீது விசுவாசமாக இருக்கினமோ? எல்லோருக்கும் வாக்குப் பொறுக்கும் துருப்புச் சீட்டாகத் தானே விடுதலைப் புலிகளின் பெயர் இருக்கு.''* என்றான்.

அப்போது, *''தொழிற்சங்கம் ஏன் தேவையென்று பிறகு சொல்லுறதெண்டு போனமுறை கதையைக் குறையிலை விட்டிட்டுப் போனனாங்கள்''* என்று நினைவுபடுத்தினார் ஏரம்பர்.

அதற்கு *''மறக்கேல்லை ஏரம்பர். அதைப் பற்றிக் கதைப்பம். அதேநேரம் தொழிற்சங்கங்களைப் பற்றிக் கதைச்சாலும் கதைச்சம், ஊர்வம்பு மின்னஞ்சலுக்கு ஊருக்குள்ளை இருக்கிற தொழிற்சங்கங்களைப் பற்றியும் அவற்றில் நடக்கிற செயற்பாடுகளைப் பற்றியும் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அவற்றில் சொல்லப்பட்ட தகவல்கள் எந்தளவுக்கு உண்மையானவை என்று ஆராய்ந்த பிறகுதான் பொதுவெளியில் கதைக்கலாம்.''* என்றார்.

*''அதுகளைப் பற்றிப் பிறகு பார்ப்பம். நீங்கள் அரைகுறையிலை விட்ட கதையைச் சொல்லுங்கோ''* என்றார் ஏரம்பர்.

அவரின் அவசரத்தைப் பார்த்துச் சிரித்தபடியே சொல்லத் தொடங்கினார் வாத்தியார்.

*''யுத்தகாலத்துக் கடன்சுமை நாட்டை இப்போது மூச்சுத்திணற வைக்கிறது. கடன்தந்த உலக வங்கி முதல் வெளிநாடுகள் வரை தனியார்மயமாக்கலை ஊக்குவிப்பனவாகவே இருக்கின்றன. இந்த நிலையில் தொழிற்சங்கச் செயற்பாடுகளால் அரசுத்துறை நிறுவனமொன்று நெருக்கடிகளைச் சந்தித்தால், அதனைத் தனியார்மயமாக்க ஊக்குவிப்பவர்களுக்குப் பெரும் வாய்ப்பாகும். இதனால், சாதாரணமக்கள் – அந்தநிறுவனத்தின் தொழிலாளர்களையும் சேர்த்து – பொதுச்சேவைகளால் பயனடைவது தடைப்பட்டுப் போகும். தனியார்மயமாவது அரசியல்வாதிகளுக்கு இலாபமாகக்கூடும். அவர்களும் அந்த வியாபாரத்தில் குதிப்பார்கள். ஆனால், தொழிலாளரின் நிலை பாதிக்கும். இதனை உணராது அரசியல் கட்சிகளின் பின்னால் நின்று தற்காலிக நலன்களுக்காகப் போராட்டம் நடத்தும் தொழிற்சங்கங்கள் இதனை உணர வேண்டும்''* என்றார் வாத்தியார்.

அப்போது கைபேசியிலிருந்து தலை நிமிர்ந்த ஜீவன், *''பொறுப்பான தொழிற்சங்கம் ஒருபோதும் அந்தத் தொழிலை அழிக்காது என்றும், அந்தத் தொழிலின் வளர்ச்சியே அதன் நோக்கமாக இருக்கும் என்றும் மூத்த தொழிற்சங்கவாதிகள் சொல்கிறார்கள். ஆனால், இங்கு தமது ஆதிக்கம் நிலைநாட்டப்படுவதில் மட்டுமே தொழிற்சங்கங்கள் பலவும் கவனமாக இருக்கின்றன எனத் தெரிகிறது''* என்றான்.

*''நீங்கள் போனமுறை சொன்னதையே சொல்லுறீங்கள். தொழிற்சங்கம் தேவையா இல்லையா என்ற எனது கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லை''* என்று சலித்தார் ஏரம்பர்.

அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக்கொண்டிருந்த பேப்பர் தம்பி, *''எங்கடை நாட்டின் நிறுவனங்களில் நவீன வசதிகள் வந்துவிட்டன. ஆனால், அங்கிருக்கும் மனிதர்கள் பலரும் பழைமைவாதத்திலேயே இன்னமும் உழல்கிறார்கள். அத்தகையவர்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் விடப்பட்டால், ஒடுக்குமுறையும், சர்வாதிகார அடக்குமுறையும், அவமதிப்புகளுமே கிடைக்கும். இந்த அவலநிலையிலிருந்து தொழிலாளர்கள் பாதுகாக்கப்படத் தொழிற்சங்கங்கள் அவசியமானவை. ஒரு வேலைக்கு ஒரே திறமை கொண்ட பலரும் வரிசையில் காத்திருக்கும் எமது நாட்டில், உழைப்புச்சுரண்டலும் துஷ்பிரயோகங்களும் நிகழ அதிகம் வாய்ப்புண்டு. இவற்றிலிருந்து தொழிலாளரைப் பாதுகாக்க தொழிற்சங்கம் அவசியமாகிறது. அதிலும் தனியார் துறைகளில் தொழிற்சங்கங்கள் மிக அவசியமான சூழல் இருக்கிறது. ஆனால், தனியார் துறைகளை விட்டு, அரச துறைகளில் அரசியல்கட்சிகளின் பின்புலத்தில் அல்லது மிரட்டல் போக்குக்கொண்ட தொழிற்சங்கங்கள் இருக்கின்றமைதான் கவலைக்கிடமாகி விட்டது''* என்று சொல்லி முடித்தான்.

*''பிரச்சினையைத் தீர்க்கும் கலந்துரையாடல்களில் ஒருவரையொருவர் தரக்குறைவான வார்த்தைகளால் ஏசி, கேவலப்படுத்துவது வரை இந்த மிரட்டல் சென்றுள்ளமைதான் கவலை தருகிறது. யாழ்ப்பாணச் சமூகத்தால் மதிக்கப்படுகின்ற கல்வி நிறுவனமொன்றில் உயர்நிர்வாகிக்கும் தொழிற்சங்கத்தினருக்கும் இடையே பேச்சு நடந்ததாம். அப்போது தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ஒருவர், நிர்வாகியின் தனிப்பட்ட உடல்நிலையைச் சுட்டிக்காட்டித் தரக்குறைவாக ஏசினாராம். இதனை வீரமாகவும் கெட்டித்தனமாகவும் மெச்சும் நிலை தொழிற்சங்கங்களில் நிலவுவது மாற்றப்படவேண்டும்''* என்றான்.

இதனைக்கேட்ட வாத்தியார், *''இதற்குத் தொழிற்சங்கம் மட்டுமே காரணம் என்றும் சொல்லி விடமுடியாது. நிர்வாக மட்டத்தில் ஆளுமை அற்றவர்கள், அரசியல் செல்வாக்கால் பதவிகளில் அமருகின்றனர். அவர்களால் தமக்குக் கீழ் உள்ளவர்களை கட்டுப் படுத்தவும், திறமையாக நிர்வகிக்கவும் முடியாமல் போகிறது. அதேநேரம் சரி யான தகுதிகள் இல்லாமல் பதவிகளில் இருப்பவர்களை, அவர்களது தரமின்மையைக் காட்டியே மற்றவர்கள் மிரட்டித் தமது காரியத்தை முடித்துக் கொள்கிறார்கள். அசிங்கப்பட்டாலும் பதவிக்கதிரை மட்டுமே முக்கியம் என்று நினைக்கும் நிர்வாகிகளும் தொழிற்சங்கங்கள் தறிகெட்டுப்போகக் காரணமாகின்றனர்''* என்றார்.

*''ஆளுமை என்று சொல்லும்போதுதான் நாடாளுமன்ற உணவகக் கதை ஒன்று ஞாபகம் வருகிறது''* என்று சொல்ல ஆரம்பித்த பேப்பர்தம்பியை இடைமறித்த ஏரம்பர், *''அதென்ன உணவகக் கதை. இது உண்மையில் நடந்ததோ இல்லை கற்பனையோ?''* என்று கேட்டார்.

அதைக்கேட்டுச் சிரித்த வாத்தியார், *''எல்லா நிறுவனங்களிலும் உணவகக் கதைகள் இருக்கும். இவை உண்மையாக நடந்தனவா என்று எவருக்கும் தெரியாது. ஆனால், உண்மை என்றே காலம் காலமாகச் சொல்லப்படும். கதையில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றி பொதுமக்கள் கொண்டுள்ள பிம்பம் இந்தக் கதைகளை நம்பவைக்கிறது. நிறுவன உணவகங்களில்தான் இந்த மாதிரிக் கதைகள் பெரும்பாலும் ஒருவருக்கொருவர் சொல்லிச் சிரிப்பது வழமை.''* என்று சொல்லிவிட்டு, பேப்பர்தம்பியைப் பார்த்து *''நீர் கதையைச் சொல்லும்''* என்றார்.

கைகளைப் பின்னால் ஊன்றிச் சாய்ந்த பேப்பர்தம்பி கதையைச் சொல்லத் தொடங்கினான்.

*''சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் பண்டாரநாயகாவும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர் சேர்.ஜோன் கொத்தலாவலையும் நெருங்கிய நண்பர்கள். இருவருமே நன்கு படித்த, நீண்ட அரசியல் பாரம்பரியமுள்ளவர்கள். கொத்தலாவலை இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருந்தவர். இருவருமே நாட்டின் பிரதமர் பதவி வகித்தவர்கள். கொத்தலாவலையை பண்டாரநாயகா எப்போதும் 'ஜோன்' என்றே அழைப்பது வழக்கம். இதனை பண்டாரநாயகாவின் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவதானித்திருக்கிறார். அவர் நிறுவனமொன்றில் சிற்றூழியராகப் பணியாற்றிவிட்டு, தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியிருந்தாராம். ஒருநாள் நாடாளுமன்றப் படிகளில் கொத்தலாவலை இறங்கி வந்து கொண்டிருந்த போது, புதுமுக உறுப்பினர் கீழிருந்து சென்றிருக்கிறார். வழியில் இருவரும் சந்தித்த போது 'ஹலோ ஜோன்' என்று கை குலுக்கக் கையை நீட்டினாராம் புது உறுப்பினர். அவ்வளவு தான் அடுத்த வினாடியே கொத்தலாவலை விட்டாராம் ஒரு அறை. புது உறுப்பினர் படிகளில் உருண்டாராம். பிறகு எழுந்துபோய் பண்டாரநாயகாவிடம் முறையிட்டிருக்கிறார். அதைக்கேட்ட பண்டாரநாயகா 'நெருங்கிய நண்பனான நான் அழைப்பதுபோல அறிமுகமே இல்லாத நீ அழைத்துவிட்டு, நீ உயிரோடு இருப்பதற்காகச் சந்தோசப்படு.' என்றாராம்.''* என்று சொல்லி முடித்தான் பேப்பர்தம்பி..

*''இன்று உயர் அதிகாரிகளாக இருப்பவர்கள் ஆளுமைமிக்கவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், வகிக்கும் பதவிக்குப் பின்கதவால் வராமல் முழுத்தகுதியுடன் வந்தவர்களாகவும் இருந்தாலேயே, தொழிற்சங்கத்தினரும் முறையாக நடப்பார்கள். அப்படி இல்லாவிட்டால் நிர்வாகிகள்தாமும் அசிங்கப்பட்டு, நிறுவனத்தையும் தரம் தாழ்த்துவார்கள்.''* என்று சொன்னான் ஜீவன்.

இதைக்கேட்ட செல்லாச்சி, *'சனம் முழுக்க யுத்தக் கொடுமையிலை அலைமோத, வலு தெளிவாகத் தங்கடை காரியத்திலை கண்ணாக இருந்தவையிலை பலரும், ஒருமாதிரி உயர் கதிரைகளுக்குப் போயிட்டினம். தகுதியும் திறமையும் உள்ளவர்கள் 'கிடைச்சா நல்லம்; கிடைக்காட்டி சந்தோசம்' என்று தங்கடைபாட்டிலை இருந்திச்சினம். இப்ப உயர் அதிகாரிகள் என்ற இடத்திலை பலரும் வெறும் அதிகார போதையிலை இருக்கிறவைதான் இருக்கினம். அவர்களிடம் உயர்ந்த குணநலன்கள் எதையும் காணுவது கஷ்டமாக இருக்கிறது.''* என்று கவலையுடன் சொன்னாள்.

அதைக் கேட்ட பேப்பர்தம்பி, *''இந்த இடத்திலைதான் அரசியல் கட்சிகள் புகுந்து விளையாடுகின்றன. அரச நிறுவனங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே அரசியல்கட்சிகள் விரும்புகின்றன. தமது ஆதரவாளருக்கு வேலை வாய்ப்பு, பணி ஒப்பந்தம் போன்றவற்றை வழங்கி வாக்குவங்கியைச் சரியாமல் பேண அரசியல் கட்சிகள் விரும்புகின்றன. இதற்காக நிர்வாகத்தில் தமக்குத் தலையாட்டுபவரை அமர்த்தவே கட்சிகள் விரும்புகின்றன. அதைவிட நேர்மையானவர்கள், ஆளுமைமிக்கவர்கள் உயர் பதவிகளுக்கு வந்து விடக்கூடாது என்றும் கவனமாக இருக்கின்றன. அப்படித் தமக்குக் கட்டுப்படாதவர்கள் நிர்வாகத்தில் வந்து விட்டால், அவர்களை இக்கட்டுக்குள் தள்ளி, தமது வழிக்குக் கொண்டுவர தொழிற்சங்கங்களை அரசியல்கட்சிகள் பயன்படுத்துகின்றன. நாங்களும் அரசியலிலும் சரி நிர்வாகத்திலும் சரி 'எவன் வந்தால் என்ன' என்று இருக்கும் மட்டும் நிலைமை இன்னும் மோசமாகுமே தவிர சீராகாது''* என்றான்.

*''இந்தநிலைமை மோசமானால் அரசுத்துறை நிறுவனங்களில் பொதுமக்களை வெறும் ஆட்டுமந்தைக் கூட்டமாக நடத்தும் போக்கு அதிகரிக்கும். ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் வளரும். இதனைத் தடுக்க பொதுமக்கள் இது தொடர்பாக விழிப்படைவது மிகவும் அவசியம்''* என்றான் ரூபன்.

*''கடைசி முடிவாக என்னதான் சொல்கிறீர்கள்?''* என்று குழப்பமாகக் கேட்டார் ஏரம்பர்.

வாத்தியார் எழுந்து நின்று தீர்க்கமாகவும் உறுதியாகவும் *''தொழிலாளர் நலன்களையும், நிறுவனத்தின் வளர்ச்சியையும் ஒன்றாகப் பேணும் தொழிற்சங்க நடவடிக்கைகளே இன்றைய தேவை. ஆனால், தொழிற்சங்கப் போர்வையில் அரசுத்துறையையும், பொதுநிறுவனங்களையும் அதலபாதாளத்தில் தள்ளும் அரசியல் மற்றும் கும்பல் அடாவடிகளை பொதுமக்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும்.''* என்று சொல்லி விட்டு நடக்கத் தொடங்கினார்.

மற்றவர்களும் அவரைத் தொடரவே சந்தியடி அமைதியானது.

கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்திருநாள்! தமிழரின்...



(6 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வீட்டுச்சுவர்களுக்குவெள்ளையடிப்பதும்,வர்ணச்சாயம் தீட்டுவதுமாக அன்றைய நாள் முழுவதும் ஊரே மகிழ்ச் சியில் அமர்க்களப்படும். அந்த நாளைப் போகி நாள் என்று சொல்வார்கள்.

கடந்த வருடத்தைப் போக்குதல், கஷ்டங்களைப் போக்குதல். உறவினர்களுக்கிடையே இருந்த உரசல் களைப் போக்குதல். அகத்திலும் புறத்திலும் உள்ள அழுக் குக்களைப் போக்குதல் என்றெல்லாம் பொருளமைந்தது தான் போகி நாள் போகிப் பண்டிகை!

திருமணமாகித் தனிக்குடும்பம் நடத்தும் தங்கள் பெண்களுக்கும், சகோதரிகளுக்கும் பெற்றோரும், சகோதரர் களும் சீர்வரிசை செய்வதும் அன்றைய நாளில் தான். நெல்லு, அரிசி, குரக்கன், சோளம் முதலிய தானியங்கள், முக்கனிகள், இனிப்புப் பலகாரங்கள், புத்தாடைகள், அலங்காரப் பொருள்கள் என்பவற்றை யெல்லாம்

இல்லறம் நடத்தும் தம் பிள்ளைகளின் வீடுகளுக்கு எடுத்துச்சென்று கொடுத்து மகிழ்வார்கள். இல்லத்தையும், சுற்றுப்புறத்தையும் எல்லோருமாகச் சேர்ந்து துப்புரவு செய்து, புதுப்பொலிவு ஊட்டுவார்கள். அது பொங்கல் பண்டிகைக்கு முதல் நாள். புத்தாண்டுக்கு முதல்நாள். கடக்கும் வருடத்தின் கடைசிநாள். அது தான் போகிநாள்!

தைத் திங்கள் முதல்நாளே தமிழர் நமது புதுவருடப் பெருநாள். தங்கத்தமிழினத்தின் தைப்பொங்கல் திருநாள். எனவே, பொங்கல் திருநாளிலேயே நமக்குப் புதுவருடம் பிறக்கிறது என்பதை, பொங்கல் திருநாளிலேயே நமக்குப் புதுவருடம் பிறக்கிறது என்பதை, பொங்கல் திருநாளே நமது புத்தாண்டு என்பதை, எங்கும் பறைசாற்ற வேண்டும். எப்போதும் அதனைப் பின்பற்ற வேண்டும். தப்பாமல் நம் வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டும்.

வாசலில் கோலமிட்டு, மாவிலை யிலும், மஞ்சள் குருத்தோலையிலும் தோரணங்கட்டி, புத்தரிசி கொண்டு, புதுப்பானையில் பொங்கலிட்டு, தலை வாழையிலையில் பொங்கலும், பழங்களும், கரும்பும் படைத்து, கதிரவனை நோக்கிக் கைகூப்பித்தொழுது நன்றி தெரிவிக்கும் நன்னாளே பொங்கல் திருநாள்.

காலையில் வழிபாடு. பகலில் உறவி னர்களோடு மகிழ்ந்து உறவாடல். உணவு பரிமாறல். உண்டு களைப் பாறல். மாலையில் களியாடல். கலைகள் அரங் கேறல். ஊரே திரண்டு ஒன்றாய் மகிழ்ந்து கொண்டாடல். இதுதான் தமிழரின் தாய கங்களின் தைத்திருநாள். அது வருடத்தில் ஒருநாள். புத்தாண்டின் முதல் நாள். தமிழருக்கு அது பெருநாள்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் நமது தாயகங் களிலே நாம் கொண்டாடி மகிழ்ந்த அந்த நாள்களை நினைவுகூர வேண்டும்.

வாழுகின்ற இடத்தால் வேறுபட்டாலும், வணங்குகின்ற மதத்தால் வேறுபட்டாலும், சார்ந்துள்ள அரசியல் கருத் தால்வேறுபட்டாலும்,தனிப்பட்டகுணத்தால்வெறுபட்டாலும் தமிழர் என்ற இனத்தால் ஒன்றுபடுவோம். தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுவோம். தைமுதல்நாளே புத் தாண்டு என்று உறுதி பூணுவோம். எங்கு வாழ்ந்தாலும் அந்த வழக்கத்தைப் பேணுவோம்.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். கல்வியைத் தொடங்கும்பிள்ளைகளுக்குவழிபிறக்கும்.புதுவகுப்பிற்குச் செல்லும் மாணவர்க்கு வழிபிறக்கும். பல்கலைக்கழகம் செல்லும் இளை யோர்க்கு வழிபிறக்கும். திருமணத்திற் குக் காத்து நிற்கும் காதலர்க்கு வழி பிறக்கும், பிள்ளைப் பாக்கியத்திற்குக் காத்திருக்கும் தம்பதிகளுக்கு வழிபிறக் கும். பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைக்க ஆசைப்படுகின்ற பெற்றோருக்கு வழிபிறக்கும். இவ்வாறு சிறியோர்க்கும், பெரியோர்க்கும் எல்லோர்க்கும் தை பிறந்துவிட்டால் வழிபிறக்கும்.

கடந்த வருடம் அடைந்த துயரெல்லாம் கனவாக மறப் போம்.நடந்த வாழ்வில் மகிழ்ந்ததை எல்லாம் நினைவோடு சுமப்போம். புலர்ந்து வருகின்ற தைமுதல் நாளிலே புத் தூக்கமடைவோம். காலையில் எழுந்து, கதிரவனை வணங்குவோம். புத்தாடை அணிந்து புத்தாண்டை வர வேற்போம். இனிக்கும் பொங்கலிட்டு எல்லோர்க்கும் பகிர்ந்துண்போம். அதுவே பண்டைத் தமிழர் பண்பாடு. அதைக் கடைப்பிடிப்பது நம் கடப்பாடு.

தைத்திருநாள் தமிழரின் திருநாள் தைப்பொங்கல் பண்டிகை தமிழரின் பண்டிகை தைப்பிறப்பே தமிழ்ப் புத்தாண்டின் பிறப்பு தைமுதல்நாளே தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாள். வாழ்க தமிழ் வணக்கம். ★

## தைப்பொங்கல் சிறக்கட்டும்

இன்று தை பிறந்திருக்கிறது. இது தமிழர்களின் திருநாளான தைப் பொங் கல் பெருநாளாகும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி ஆகவே இன்று பிறந்திருக்கும் தை மகள் எல்லோருக்கும் நல்ல மங்களம் நிறைந்த நல்வாழ்வை அருளட்டும். பொங்கும் மங் களம் எங்கும் தங்கி நிறைவான மங்கள நல்லாட்சியே நிலைத்திருக்க இறையருளை நாடிப் பிரார்த்திக்கின் றோம்.

தை மகளே வருக! எங்கள் தமிழ் மகளே வருக" என்று வாழ்த்தியருள வேண்டுகிறோம். இன்றைய தைப் பொங்கலை முறையாகப் பொங்கி இனிக்க இனிக்க அனைவருக்கும் வழங்கி வாழ் நாள் சிறக்க வேண்டுமெ ன்று வாழ்த்து கிறேன்.

"தை பிறந்தால் மகளிர்க்கு வழி பிறக்கும்"

கலாபூஷணம் **இராசையா ஸ்ரீதரன்,**
ஆதீன சமயப்பிரசாகர்



## சூரியனுக்கு நன்றி சொல்வோம்



சூரியப்பொங்கல். இதனை ஏன் சூரியப் பொங்கல் என்றுஅழைக்கிறோம்?

நமக்கும் இந்த பூமிக்கும், சூரியனுக்கும் ஓர் ஆழமான தொடர்பு இருக்கிறது. வருடத் தின் சில நாள்களில் மட்டும் அவற்றிற்கும் நமக்குமான சம் பந்தம் சற்று வித்தியாசமாக நடைபெறுகிறது. மார்கழி மாதத் தில் பூமியின் வடக்கு கோளத் தில் சூரியனின் தாக்கம் சற்றே குறைந்து போகிறது. இதனால், உயிர் சக்தி குறைந்து விடும். விதை சரியாக முளைக்காது. கருத்தரித்தல் கூட செய்யக் கூடாது என்று நம் கலாசாரத்தில் சொல்லி வந்திருக்கிறோம். ஏனெ னில், எந்தவொரு விதையும் இந்தக் கால கட்டத்



தில் முழுமையாக வளராது. காரணம், சூரியனின் சக்தி நமக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை. இதனை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

சோலார் எனர்ஜி என்பது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட தொழில்நுட்பம் என்று தவறாக நினைக்க வேண்டாம். நம் உயிரும் சோலார் எனர்ஜி தான், அல்லவா? இந்த பூமியில் இருக் கும் ஒவ்வோர் உயிரும், செடியும் கொடியும் புழுவும் பூச்சியும் மனிதனும் மாடுக ளும் என அனைத்துமே சோலார் எனர் ஜியால் தான் இயங்குகின்றன. சூரிய சக்திதான் அனைத்து உயிர்களுக்கும் அடிப்படை. மார்கழி மாதத்தில், மிகக் குறைந்த அளவிலேயே நமக்கு சூரிய சக்தி கிடைக்கிறது. மார்கழி மாதம் முடிந்த பின் சூரியனின் பயணம் நம்மை நோக்கி நிகழ்கிறது.

இன்றைய காலத்தில், சூரியன் நம்மை நோக்கி வருகிறது என்று சொன் னவுடன் பயம் தொற்றிக் கொள்கிறது. சென்னையில் இருப்பவர்களுக்கெல் லாம் தண்ணீர் கிடைக்காது என்று பயம். வெயில் கொளுத்தும் என்று பயம். இந்த பாதிப்பு சூரியனால் ஏற்படுவது அல்ல. நம் புத்தியின்மையால் ஏற்பட்ட பாதிப்பு. உட்கார மரநிழல் இல்லை, இதனால், வெப்பம் கூடுகிறது. நம் மைச் சுற்றியிருப்பதை கவனிக்காததால் ஏற்படும் பிரச்சினை இது.

சூரியன் இல்லாமல் நம்மால் வாழ முடியுமா? இதை உணர்ந்ததால் தான் சூரியனுக்காக ஒரு கொண்டாட்டத்தை அமைத் தனர். சில காலம் குறை வானபலன்களை அளித்த சூரியன் மீண்டும் நமக்கு பலன் கொடுக்க வந்து விட்டான் என்ற நன்றி யில் சூரியப் பொங்கல் கொண்டாடினர்.

இந்த சூரியப் பொங்கலுக்குப் பின்வரும் வெயில் காலத்தை நாம் நன்றாக உணர வேண்டும் என் றால், நம் மண் வளமாக இருக்க வேண்டும். மண் வளமாக இருக்க செடி கொடிகள் வேண்டும், மாடு வேண்டும், அதன் சாணம் வேண்டும். மாட் டின் செயல்பாடு நமக்கு வேண்டும்.

சூரியனுடைய சக்தி இல்லாமல் நாம் இங்கு வாழ முடியாது. ஆனால், சூரியன் வந்தால் அழுகைதான். ஏன்? உட்கார நிழல் இல்லாமல் செய்து விட்டோம். மண்ணில் வளம் இல்லை. ஆற்றில் தண்ணீர் இல்லை. கிணற்றிலும் நீர் இல்லை. பூமியை துளைத்து ஆயிரம் அடிக்கு ஆழ்துளை இன்று அழைத்தாலும் நீர் இல்லை. இதற்கு சூரியன் காரணம் அல்ல, நம் புத்தியின்மை தான் காரணம். இதை நாம் சரி செய்ய வேண்டும். அப்போது தான் சூரியப் பொங்கல் கொண்டாடு வதில் அர்த்தம் உள் ளது.

சூரியன் இல்லாமல் பயிர் செய்வது எப்படி? நாம் உயிர் வாழ்வது எப்படி? அதனால், இந்நாளில் அவனுக்கு நம் நன்றியை செலுத்திக் கொள்கிறோம். அவனை வரவேற்கிறோம். மீண்டும் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அவன் திரும்பி வரா விட்டால் இங்கு உயிர் நிகழாது என்பதைப் புரிந்து வைத்துக் கொண்டு அவனை வரவேற்கும் விதமாக சூரியப் பொங்கல் கொண்டாடுகிறோம்.


AFTER O/L ?

O/L இன் பின்னர்?

IDFP - International Degree Foundation Programme

- IDFP முற்று முழுதாக O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பாடநெறி. இப்பாட நெறி கணனி / முகாமைத்துவம் / ஆங்கிலம் / என மூன்றாக வடிவடைக்கப்பட்ட பாடநெறி.
- காலம் 4 மாதம்.
- நேரம் - திங்கள் முதல் சனிவரை 10.00 Am - 3.00 pm வரை

O/L Pending Result → IDFP → WORK AT SRI LANKA OR ABROAD / STUDY IN UK/USA/CANADA

IDFP யின் 4 மாதகாலத்தில் நிறைவுசெய்யும் மாணவர்களுக்கு மேற்படிப்பினை மேற்கொள்வதற்காக UK.USA/Canada போன்ற நாடுகளில் College/Universsity யில் Free Admission எடுத்து தரப்படும்.

வரையறுக்கப்பட்ட அனுமதிகள் முதல் 20 மாணவர்களுக்கு 25% கழிவு

IT: M.S. Office, Hardware Eng, Software Eng, Programming
English: General Eng., Spoken Eng.
Management: Marketing, H.R.M, Accounting

NEW WAY SKY LINE INSTUTUTE
No - 389 1/2, Galle Road, Colombo - 06 (Opp - NDB Bank)
Main Street, Hatton. பதிவுகள் 2018 January 15ல் ஆரம்பம்
Tel : 011 457 5043 / 077 334 7332


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# தலைமுடி வளர்ச்சிக்கு உதவும் கறிவேப்பிலை





தலைமுடி வளர்ச்சிக்கு கறிவேப்பிலை வெகுவாக உதவுகிறது. ஆரோக்கியமான, பிரகாசமான கேசத்தைப் பெறுவதற்கு கறிவேப்பிலை கைகொடுக்கிறது.

தலைமுடியின் ஆரோக்கியம் தொடர்பாக ஆண்களும் பெண்களும் அதிகம் கவலைகொள்கின்றனர். அவர்களுக்கு அருமருந்தாக விளங்குகிறது, கறிவேப்பிலை.

பொதுவாக உணவுகளில் வாசனைக்கும், சுவைக்கும் கறிவேப்பிலை பயன்படுத்தப்படுகிறது. அதேநேரம், அதில் பலவிதமான உடல்நல பயன்களும் அடங்கியிருக்கின்றன.

முக்கியமாக, தலைமுடி வளர்ச்சிக்கு கறிவேப்பிலை வெகுவாக உதவுகிறது. ஆரோக்கியமான, பிரகாசமான கேசத்தைப் பெறுவதற்கு கறிவேப்பிலை கைகொடுக்கிறது.

பாதிப்படைந்துள்ள முடி வேர்களைச் சீர்செய்யும் ரசாயன சிகிச்சைகள், வெப்பமாக்கும் கருவிகள், மாசு போன்ற பல காரணங்களால் முடியின்வேர்கள்பாதிப்படையலாம். இதனால் முடியின் வளர்ச்சி நின்றுகூடப் போகலாம். அப்படி பாதிக்கப்பட்ட தலைமுடி வேர்களைச் சீர் செய்யும் திறனைக் கொண்டுள்ளது கறிவேப்பிலை. அதற்குக் காரணம், இதில் உள்ள ஊட்டச்சத்துகள். இவை முடிக்குத்தேவையான ஊட்டத்தை அளிக்கின்றன.

கறிவேப்பிலை விழுதை நேரடியாக தலைச்சருமத்தில் தடவிக் கொண்டால், வேர்களை அது சீர் செய்யும். மேலும் முடித்தண்டுகளின் வலுவை மீண்டும் பெறச் செய்யும். முடிந்தால் கறிவேப்பிலை விழுதை அப்படியே உண்ணலாம். கேசத்தின் வேர்களை கறிவேப்பிலை வலுவடையச் செய்வதால், முடியின் வளர்ச்சியும் வேகம் பிடிக்கும்.

கறிவேப்பிலையைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றமையால் முடி கொட்டுதல் குறையும். இதில் புரதமும் பீட்டாகரோட்டினும் வழமையாக உள்ளன. இது முடி உதிர்வைக் குறைத்து, அதன் வளர்ச்சியை அதிகரிக்கும். புரதச்சத்துக் குறைபாட்டினால்கூட முடி உதிர்வு ஏற்படலாம். அதனால், கறிவேப்பிலையை சீரான முறையில் எடுத்துக் கொண்டால், முடி வளர்ச்சி அதிகமாகும்.

இவையெல்லாம் தவிர, கறிவேப்பிலை வயிற்றுப்போக்கைத் தடுக்கும், செரிமான அமைப்புக்கு நல்லது. கெட்ட கொலஸ்ட்ரோலை குறைக்கவும் கறிவேப்பிலை உதவுகிறது. இப்படி இதன் பயன்களை கூறிக்கொண்டே போகலாம்.

இனிமேலாவது கறிவேப்பிலையை உணவில் இருந்து எடுத்தெறிந்து விடாமல் பயன்பெறுவோம்.

# கூந்தலுக்கு எண்ணெயை பயன்படுத்துவது எப்படி?



பெண்கள் கூந்தலுக்கு எண்ணெய் தேய்க்கும் போது சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை என்னவென்று விரிவாகப் பார்க்கலாம்.



கூந்தலுக்கு நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் எதுவாக இருந்தாலும், தடவிய பின், 20 நிமிடங்கள் வரை கூந்தலில் தடவி ஊறவிட்டு அலசிவிடுவதே சரி.

நம் முடியின் வேர்ப்பகுதி, மண்டைத்தோலில் எண்ணெய் சுரப்பிகள் இருக்கும். இதை செபாஷியஸ் சுரப்பிகள் (Sebaceous glands) என்று சொல்வோம். இதில் இருந்து சீபம் என்ற எண்ணெய் சுரக்கிறது. ஒரு சிலருக்கு இது அதிகமாகவோ குறைவாகவோ சுரக்கலாம். இது ஒவ்வொருவரின் உடல் நிலையைப் பொறுத்து மாறுபடும்.

எண்ணெய்ப் பசை, வறட்சி என எந்த வகைக் கூந்தலை உடையவராக இருந்தாலும், வெளியில் போகும்போது எண்ணெய்தடவிக்கொண்டுசென்றால், சூழலில் உள்ள தூசு, அழுக்கு, உடல் வெப்பத்தால் சுரக்கும் எண்ணெய் போன்ற அனைத்தும் சேர்ந்து, பொடுகைக்கொண்டு வந்துவிடும். எனவே, வெளியில் செல்பவர்கள் எண்ணெய் தடவிக்கொண்டு செல்லக் கூடாது.

எண்ணெயைக் கூந்தலில் தடவி, 20 நிமிடங்கள் ஊறிய உடனே அலசிவிட வேண்டும். இரவில் தடவி, மறுநாள் குளிப்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

# புகைப்பிடிக்கும் பெண்களுக்கு வரும் ஆபத்துகள்



பெண்கள் புகைப்பிடிப்பதால் நுரையீரல் பாதிப்பு, ரத்த நோய்கள், செல் சிதைவு, புற்று நோய்கள் இன்னும் இன்னும் கொடிய பாதிப்புகள் உண்டாகின்றன.

தற்போது உள்ள காலகட்டத்தில் வெளிநாட்டு மோகத்தால் ஆண்களும், பெண்களும் பல்வேறு தவறான பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். அதில் ஒன்றுதான் பெண்கள் புகைப்பிடிக்கும் பழக்கம். பெண்கள் புகைப்பிடிப்பதால் நுரையீரல் பாதிப்பு, ரத்த நோய்கள், செல் சிதைவு, புற்று நோய்கள் இன்னும் இன்னும் கொடிய பாதிப்புகள் உண்டாகின்றன.

சிகரெட்டிலுள்ள இரசாயனங்கள் விரைவில் செல் முதிர்ச்சியை அதிகப்படுத்துகின்றன. இதனால் சருமம் விரைவிலேயே முதிர்ச்சியடைந்து வயதான தோற்றம் அடைந்துவிடுவது உறுதி.

புகைப் பிடிக்கும் பெண்களுக்குக் காம உணர்வு குறைந்து விடும்.

புகைப்பழக்கம் பல்லோப்பியன் குழாய் நகர்வுகளை மாற்றி விடும். இந்தக் குழாயின் நகர்வு தான், கருமுட்டை கீழிறங்கி கர்ப்பமாக செய்ய வைக்கும். இதனால் புகைப்பழக்கம், பெண்கள் கர்ப்பம் தரிக்கும் வாய்ப்புகளைக் குறைத்து விடும்.

# கர்ப்பகாலத்தில் ஏற்படும் சரும பிரச்சினைகளும் தீர்வுகளும்



கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு முகத்தில் கரும்புள்ளிகள் தோன்றுகின்றமை, முடி உதிர் வது, சருமம் வறண்டு போவது என அழகு சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவது சகஜம்.

தாய்மை என்பது எல்லாப் பெண்களுக்கும் இயற்கையிலேயே அதீத அழகைக் கொடுக்கும் பருவம். அது அகத்திலிருந்து வெளிப்படுகிற அழகு. ஆனாலும், கர்ப்ப காலத்தில் முகம் முழுக்க கரும்புள்ளிகள் தோன்றுகின்றமை, முடி உதிர்வது, சருமம் வறண்டு போவது என புற அழகு சார்ந்த பிரச்சினைகளும்சகஜம். திடீரெனப் பயத்தைக் கிளப்பும் இந்த அழகு பிரச்சினைகளுக்கான காரணங் களும், தீர்வுகளும்

கர்ப்ப காலத்தில் உண்டாகிற ஓமோன் மாற்றங்களால் கொழுப்புக் கட்டிகள், அதிக சீபம் சுரப்பதால் சுரப்பிகள் தூண்டப்பட்டு எண்ணெய் பசையும் அதிகரிப்பதுடன், பருக்கள் வரும். கர்ப்ப காலத்தில் திடீரெனக் கிளம்புகிற பருக்கள், தற்காலிகமானவையே. வந்த வேகத்தில் மறைந்து விடும் என்பதால் கவலை கொள்ளத் தேவையில்லை.

கர்ப்ப காலத்தில் ஓமோன் சுரப்பும் இரத்த ஓட்டமும் அதிகரிப்பதால் வழக்கத்தைவிட கர்ப்பிணிகளின் முகத்தில் அழகு கூடும். அதேநேரம் சருமத்தின் நீர்ச்சத்து குறைவதால் ஒருவித வறட்சி நிலை ஏற்படும். இக்காலங்களில் கூடியவரையில் இரசாயனம் கலந்த எந்த அழகு சாதனங்களையும் உபயோகிப்பதைத் தவிர்ப்பது நல்லது. அத்துடன், சருமத்தின்சொரசொரப்பை நீக்க, பாலாடை தடவுவது போன்ற பாதிப்பில்லாத இயற்கை வழிகளைப் பின்பற்ற லாம்.

கர்ப்ப காலத்தில் மெலனினை தூண்டும் ஓமோன்கள் அதிகமாகச் சுரக்கின்றமையால் நிறமாற்றங்கள் உண்டாகின்றமை இயல்பு. திருஷ்டி பொட்டு மாதிரி ஆங்காங்கே மங்கும் வரும். இந்தப் பிரச்சினையை கர்ப்ப கால முகமூடி என்றுகூட சொல்வதுண்டு. மற்றப் பிரச்சினைகளைப் போலவே இதுவும் பிரசவமா னதும் தானாக மறைந்து விடும். சிலர் இந்த மங்கைப் பார்த்ததும் பயந்து பியூட்டி பார்லர் போய் கெமிக்கல் பீலிங் போன்ற சிகிச்சைகளை செய்வதுண்டு. அவையெல்லாம் மிக ஆபத்தானவை.

கர்ப்ப காலத்தில் பல பெண்களுக்கு இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. அடர்த்தியான கூந்தல் உள்ள பெண்களுக்கு இந்தப் பிரச்சினை வருகிறது. பிரசவமானதும் இந்த ரோமங்கள் உதிர்ந்து விடும் என்பதால் அதைப் பற்றிய பயம் வேண்டாம். ஒருவேளை பிரசவத்துக்குப் பிறகும் அது அப்படியே இருந்தால், சரும மருத்துவர் அல்லது அழகுக் கலை நிபுணரின் ஆலோசனையுடன் பாதுகாப்பான முறையில் ரோமங் களை நீக்கிக் கொள்ளலாம். கர்ப்ப காலத்தில் ரோமங்களை நீக்கும் கிறீம் உபயோகிக்க வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## டுனிடின் 3ஆவது டெஸ்ட்:

# 74 ஓட்டங்களில் சுருண்ட பாகிஸ்தான் அணி 183 ஓட்டங்களில் நியூஸிலாந்து அபார வெற்றி

நியூஸிலாந்துக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 183 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியைத் தழுவியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 ஒருநாள் போட்டியில் முதல் 2 ஆட்டத்தில் நியூஸிலாந்து வெற்றி பெற்று இருந்தது. நியூஸிலாந்து-பாகிஸ்தான் அணிகள் மோதிய 3 ஆவது ஒருநாள் ஆட்டம் டுனிடினில் நேற்று இடம்பெற்றது.

முதலில் விளையாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 257 ஓட்டங்களில் 'ஆட்டமிழந்தது. கப்டன் வில்லியம்சன் 73 ஓட்டங்கள், டெய்லர் 52 ஓட்டங்கள், குப்தில் 45 ஓட்டங்களும் எடுத்தனர். ஹசன் அலி, ரயிஸ் தலா 3 விக்கெட்டும், சதாப்கான் 2 விக்கெட்டும் எடுத்தனர். பின்னர் விளையாடிய பாகிஸ்தான் அணி, நியூஸிலாந்து வீரர்களின் ஆபாரமான பந்துவீச்சால் 74 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் பாகிஸ்தான் அணி 183 ஓட்ட வித்தியாசத்தில் மோசமான தோல்வியைத் தழுவியது. பாகிஸ்தான் அணியின் 4ஆவது குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். அந்த அணி மேற்கிந்தியத்தீவுக்கு இடையிலான போட்டியில் 43 ஓட்டங்களில் (1993) சுருண்டதே குறைந்த பட்ச ஓட்டம் ஆகும்.




பாகிஸ்தான் அணியில் பந்து வீச்சாளரான ரூயிஸ்கான் அதிகபட்சமாக 16 ஓட்டங்கள் எடுத்தார். கப்டன் சர்பிராஸ் தவிர முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்கத்தில் ஆட்டம் இழந்தனர். போலட் 17 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டை வீழ்த்தினார். முன்ரோ, பெர்குசன் தலா 2 விக் கெட் கைப்பற்றினார்கள்.

இந்த வெற்றி மூலம் நியூஸிலாந்து ஒருநாள் தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றி உள்ளது. 4ஆவது போட்டி நாளைமறுதினம் 16ஆம் திகதி ஹமில்டனில் இடம்பெறவுள்ளது.

## செஞ்சூரியன் 3ஆவது டெஸ்ட்:



# தென்னாபிரிக்கா அதிரடி ஆரம்பம்

செஞ்சூரியனில் நடைபெற்று வரும் 2 ஆவது டெஸ்டில் மார்கிராம் அரைசதத்தால் தென்னாபிரிக்கா சிறப்பான தொடக்கத்தை பெற்றுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இலங்கை நேரப்படிநற்று மதியம் 1.30 மணிக்கு செஞ்சூரியனில் ஆரம்பமாகியது. முதலில் தென்னாபிரிக்கா அணி கப்டன் டு பிளிசிஸ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். கேப் டவுன் டெஸ்டில் காயம் அடைந்த டேல் ஸ்டெயினுக்குப் பதிலாக லுங்கி நிகிடி சேர்க்கப்பட்டுள்ளார். 21 வயதாகும் இவருக்கு இதுதான் அறிமுக டெஸ்ட் ஆகும்.

இந்திய அணியில் தவான், விக்கெட் கீப்பர் சகா, வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர்குமார் ஆகியோர் நீக்கப்பட்டு லோகேஷ்ராகுல், பார்தீவ் பட்டேல், இசாந்த் சர்மா ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்ஆப்பிரிக்கா அணியின் டீன் எல்கர், மார்கிராம் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் இந்திய அணியின் பந்து வீச்சை நேர்த்தியாக எதிர்கொண்டனர். லீவ் செய்யக்கூடிய பந்தை லீவ் செய்து அடிக்கக் கூடிய பந்தை அடித்து விளையாடினார்கள். டீன் எல்கர் நிதானமாக விளையாட மார்கிராம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்

சொந்த மைதானத்தில் பந்து எப்படி வரும் என்பதை துல்லியமாக அறிந்த வைத்திருக்கும் மார்கிராம் 81 பந்தில் 9 பவுண்டரியுடன்அரைசதம் அடித்தார். இவரது ஆட்டத்தால் தென்னாபிரிக்கா முதல் நாள் மதிய உணவுஇடைவேளை வரை விக்கெட் இழக்காமல் 27 ஓவரில் 78 ஓட்டங்கள் சேர்த்தது. டீன் எல்கர் 26 ஓட்டங்களுடனும், மார்கிராம் 51 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தேனீர் இடைவேளை முடிந்து மீண்டும் ஆட்டம் தொடங்கியது. தென்ஆப்பிரிக்கா 85ஓட்டங்கள் எடுத்த நிலையில் முதல் விக்கெட்டை இழந்தது. டீன் எல்கர் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்வின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து ஹசிம் அம்லா களம் இறங்கினார்.

தென்ஆப்பிரிக்கா 90 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 26 ஓட்டங்கள் எடுத்திருந்தது.




## கோபா டெல் ரே:

# மெஸ்ஸியின் அபார ஆட்டத்தால் காலிறுதிக்குள் பர்சிலோனா அணி

கோபா டெல் ரே உதைபந்துத் தொடரில் மெஸ்ஸியின் அபார ஆட்டத்தால் 5:0 என செல்டா விகோ அணியை வீழ்த்தி பார்சிலோனா காலிறுதிக்கு முன்னேறியது.

கோபா டெல் ரே' கிண்ணத்துக்கான காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பார்சிலோனா செல்டா விகோ அணியுடன் மோதியது. காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இரண்டு அணிகளும் லெக்-1, லெக்-2 என இரண்டு முறை மோத வேண்டும். செல்டா விகோவிற்கு சொந்தமான மைதானத்தில் நடைபெற்ற முதல் லெக்கில் பார்சிலோனாவிற்கு ஈடுகொடுத்து விளையாடிய செல்டா விகோ 1:1 எனப் போட்டியை சமநிலை செய்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பர்சிலோனாவிற்குச் சொந்தமான மைதானத்தில் லெக்-2 ஆட்டம் நடைபெற்றது. சொந்த மைதானத்தில் பார்சிலோனா அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆட்டத்தின் 13 ஆவது மற்றும் 15ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி அடுத்தடுத்து கோல் அடித்து அசத்தினார்.

28ஆவது நிமிடத்தில் ஜோர்டி அல்பா ஒரு கோலும், 31ஆவது நிமிடத்தில் சுவாரஸ் ஒரு கோலும் அடிக்க பார்சிலோனா முதல் பாதி நேரத்தில் 4:0 என முன்னிலை பெற்றது. 2ஆவது பாதி நேரத்தில் 87ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் இவான் ராகிடிக் ஒரு கோல் அடிக்க பார்சிலோனா 5:0 என வெற்றி பெற்றது. முதல் லெக்-ஐயும் சேர்த்து 6:1 என பார்சிலோனா வெற்றி பெற்றுக் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

# சுரங்க லக்மலுக்கு அடித்த அதிர்ஷ்டம்

இலங்கை டெஸ்ட் அணியின் உப தலைவராக வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மல் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அணியின் தலைவராக தினேஷ் சந்திமல் கடமையாற்றுகின்றார்.

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கே சுரங்க லக்மலை உபதலைவராக இலங்கைக் கிரிக்கெட் தேர்வுக் குழு நியமித்துள்ளது.

தேர்வுக்குழுவின் நியமனத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஒப்புதல் அளித்துள்ளமையுடன்ஏற்கனவே பங்களாதேஷ் அணிக்கெதிராக 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ள இலங்கை குழாமில் இடம்பெற்றுள்ள சுரங்க லக்மல் உட்பட 16 வீரர்களுக்கும் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இம் மாதம் 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி வரை பங்களாதேஷின் சிட்டகொங்கிலும் 2 போட்டி பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி வரை டாக்காவிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளிநாட்டில் இருந்து முக நூல் ஊடாக வழங்கியுள்ள நேரடி ஒளிபரப்பினூடாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்பிருந்த தலைவர்களும், அரசுகளும் முன்னெடுத்தன. எனினும் புலிகளைத்தோற்கடிக்கவோ, அல்லது முடிவுக்கு கொண்டு வரவோ எவராலும் முடிந் திருக்க வில்லை. இவ்வாறான சூழலில், 30 வருடங்களுக்கும் மேலாக இலங் கையில் தொடர்ந்த போரை, அதனை முன்னெடுத்த விடுதலைப் புலிகளை இயக்கத்தை, 3 வருட சிறுகாலப் பகு திக்குள் நாம் முடிவுக்குக் கொண்டு வந் தோம். இத்தகைய வெற்றிக்குக்காரணம், புலிகளுக்கு எதிராக சரியான நடவடிக் கைகளை எடுத்ததோடு சரியான தலை வர்களையும் உருவாக்கியமையே ஆகும்.

போரை நிறைவுக்குக் கொண்டுவந்தது மாத்திரமல்லாமல் அதன் பின் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்றோம் என்பதைக் குறிப்பிட்டுக் கூறியாக வேண்டும். இராணுவத்தின ருக்காகப் பல்வேறு திட்டங்களையும் வகுத்து அவர்களைக் கௌரவப்படுத் தினோம்.

ஆனால் கடந்த காலத்தில் பிரச்சினைக ளுக்கு முகம்கொடுத்து நாட்டைக்கட்டியெ ழுப்பிய நிலை தற்போது காணப்பட வில்லை. தற்போது நாட்டில் பாரிய பொரு ளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது, மக்கள் கடன் சுமையினால் பாதிக்கப்பட்டுள் ளனர். அதற்கு இப்போதுள்ள அரச நிறு வனங்கள் முறையாகச் செயற்படாத மையே காரணம்.

முக்கியமாக நாட்டை அழிவுக்கு பாதைக்குக் கொண்டு சென்ற 30 வரு டத்திற்கும் மேலான போரை நிறைவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினரைக் காட்டிக்கொடுக்கும் வகையில் சர்வதேசத் துக்கு அடி பணியவைக்கும் செயற்பா டுகள் தொடர்கின்றன. இவற்றிற்கு எதி ராகத் தேர்தல் வாக்குகளை நாம் பயன் படுத்த வேண்டும். – என் றார். (ஐ)

## 2021 வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆண்டுவரை அவர் பதவியில் நீடிக்க முடியும் என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர் பாக உயர்நீதிமன்றம் தனது வியாக்கியா னத்தை இன்றைய தினத்துக்கு முனுனர் தெரியவிக்கவுள்ள நிலையில், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், விசேட பணிகள் அமைச்சருமான சரத் அமுனுகம இந்தக் கருத்தை வெளியிட் டுள்ளார்.

கண்டி கலகெதர தொகுதியிலுள்ள தனது ஆதரவாளர்களை சந்திப்பதற்காக அமைச்சர் சரத் அமுனுகம நேற்றுச் சனிக்கிழமை அங்கு சென்றிருந்தார். இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறி னார்.

2015ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேனவின் பதவிக் காலம் 2020 ஆம் ஆண்டிலா அல்லது 2021 ஆம் ஆண்டிலா முடிவடைகிறது என்ற குழப்பநிலைக்கு மத்தியில் உயர்நீதிம ன்றத்தை ஜனாதிபதி நாடியிருக்கிறார்.

உயர்நீதிமன்றம் தனது வியாக்கி யானத்தை ஜனாதிபதிக்கு அறிவிக் கவுள்ள நிலையில், இது தொடர்பாகச் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை அமைச் சர் சரத் அமுனுகம நேற்று வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:

ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு அமைய அரசமைப்பின்படி பதவிக்காலம் 2020ஆம் ஆண்டு வரையா அல்லது 2021ஆம் ஆண்டுவரையா நீடிக்கப்படும் என்ற விவகாரத்தில் உயர்நீதிமன்றத் திலிருந்து தீர்வொன்றை அவர் எதிர்பார்க் கின்றார்.

அதேபோன்று உயர்நீதிமன்றுக்குச் சுயாதீன நிலை உள்ள படியால் அவர்கள் வழங்கும் தீர்ப்புக்குத் தலைசாய்க்கிறார் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார். எனவே இது ஒரு சட்டப் பிரச்சினை. எனி னும் 2021ஆம் ஆண்டுவரை ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியில் இருக்க முடியும் என்று நாங்கள் நினைக்கின்றோம். – என் றார். (ஐ)

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை இலங்கை விடயத்தில் அவர் கடும் போக்கைக் கொண்டிருப்பார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் மார்ச் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இலங்கையின் பொறுப்புக் கூறல் விடயம் மிக முக்கிய மான பேசுபொருளாக எடுத்துக்கொள்ளப் படவுள்ளது. இதன்போது, இலங்கையின் பொறுப்புக் கூறல் பொறிமுறை தாமத மடைந்தால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது தொடர் பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் விசேட அறிக்கை ஒன்றின் மூலம் தெளிவுபடுத்து வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொறுப்புக்கூறும் பொறிமுறை தொடர் பில் இலங்கை அரசு இதுவரை உருப் படியான திட்டங்கள் எதனையும் முன் வைக்கவில்லை. பொறுப்புக் கூறலில் இலங்கை தொடர்ந்தும் அசமந்தப் போக்கையே காட்டி வருகின்றது எனச் சர்வதேச நாடுகள் பலவும் எச்சரிக்கையை தொடர்ச்சியாக வெளியிட்ட வண்ணமுள் ளன.

நல்லாட்சி அரசும் பொறுப்புக் கூறல் விடயத்தில் உண்மைத் தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை எனவும், அதற்கான பொறிமுறையைச் செயற்படுத் துவதற்குத் திட்டம் எதனையும் வகுக்க வில்லை என்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன.

இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமை கள் சபைக்கும் உறுப்பு நாடுகளினால் கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள் ளன. இதனால் இம்முறை இலங்கை விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தயவு தாட்சண்யம் காண் பிக்கமாட்டார் எனத் தெரியவருகின்றது. அவர் வெளியிடும் அறிக்கை மிகக் காரசாரமானதாக அமையும் என்றும் கூறப்படுகின்றது.

ஹுசைனின் இலங்கை தொடர்பான அறிக்கையைத் தொடர்ந்து, இலங்கை அரசு சார்பிலும் அறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளது. இதனை இலங்கை வெளிவிவகார அமைச்சர் முன்வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஜெனீவா பிரேரணையை செயற்படுத்துவதில் உள்ள சவால்கள் தொடர்பில் இலங்கை ஐ.நா.விடம் தெளிவுபடுத்தவுள்ளது எனக் கூறப்பட் டது. (ஐ)

## ஆபத்தான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப்போதைப்பொருளைக்கொண்டு வந்த இந்தியர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையில் வைத்து போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தமிழ்நாட்டில் சிறிய கடை ஒன்றை நடத்தி வரும் 50 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் கடந்த வெள்ளி இரவு 9.45 மணியளவில் சென் னையில் இருந்து வந்த ஶ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

இவரிடம் 220 கிராம் நிறையுடைய மெதெம்பட்டமைன் எனப்படும் வித் தன்மை கொண்ட போதைப்பொருள் கைப்பற்றப் பட்டுள்ளது. அதன் பெறுமதி இலங்கை ரூபாயில் 60 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பிரதான இரவு நேரக் கேளிக்கை விடுதிகளுக்கு வரும் இளைஞர்களுக்காக இது கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தே கம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

## மேல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ராஜபக்ஷ குடும்பப் பிரச்சினையொன் றின் காரணமாக வெளிநாடு சென்றுள் ளார் என இசுறு தேவப்பிரிய ஊடகமொன் றிடம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தார். இது தொடர் பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தப் பொ[illegible] தொடர் பில் குற்றப்பு[illegible] திணைக்களத் திடம் முறைப்பாடு செய்யவுள்ளார் என் றும் நாமல் மேலும் கூறினார். (ஐ)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாலன் (வயது-48) என்பவர், தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைக ளுடன் அபுதாபி வழியாக கடந்த வியாழக் கிழமை மாலை 3.45 மணியளவில் கட்டு நாயக்க விமான நிலையத்தில் வந்தி றங்கினார்.

குடிவரவு அதிகாரிகளால் அவர்களின் கடவுச்சீட்டுகள் சோதனையிடப்பட்டபோது, சுரேஷ்நாத் இரத்தினபாலனின் பெயர் கறுப்புப்பட்டியலில் இருப்பது கண்டறியப் பட்டது.

அவரது குடும்பத்தினர் இலங்கைக்குள் செல்ல அனுமதி அளிக்கப்பட்டபோதும், அவர் கள் அவருடனேயே இருக்க முடிவு செய்துள்ளனர்.

திருப்பி அனுப்பப்படுவதற்காக அவர் கள் விமான நிலைய இடைத்தங்கல் அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்பட்டுள் ளது.

அதேவேளை, இவர்களை நாடு கடத் தும் உத்தரவை ரத்துச் செய்து, இலங் கைக்குள் நுழைவதற்கான அனுமதி யைப் பெற்றுக் கொடுக்க பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என கொழும்பு ஆங்கில நாளிதழ் கூறி யுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ்நாத் இரத்தினபாலன், நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் என்றும், முன்னைய அரசால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்ட புலம்பெயர் தமிழர்களில் ஒருவர் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் குடிவ ரவுக் கட்டுப்பாட்டாள ரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், நாட கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரனுக்கு மின் னஞ்சல் அனுப்பி, அவரது பதிலுக்குக் காத்திருப்பதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 11 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் ளன எனக் கிளிநொச்சி மாவட்டத் தேர் தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல் ராஜ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கும் ஒன்பது அரசியல் கட்சிகளும், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் ஒரு சுயேச்சைக் குழுவும் போட்டியிடுகின்றன.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இன்று வரை 11தேர்தல் விதி முறை மீறல் சம்பவங்களே பதிவாகியுள் ளன. அதில் பிரமந்தனாறுப் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலு வலகத்திற்குள் உள்நுழைந்து தாக்கு வதற்கு முயற்சி செய்த சம்பவமே பெரிய தேர்தல் விதிமுறை மீறல் சம்பவமாக காணப்படுகிறது. – என்றார். (ஐ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தவிதமான நடவ டிக்கைகளையும் எடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டியே இந்த எதிர்ப்பு ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது.

அவர்கள் மேற்கொண்டுவரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட் டம் 324 நாளாகத் தொடரும் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்க ளைக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெய வனிதா தலைமையில் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியமையு டன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பி னர்களின் புகைப்படங்களுக்கு மண் அள்ளிப்போட்டுத்திட்டிய காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவுகள், ஜனாதிபதி யுடனான சந்திப்பில் தங்களுக்குத் துரோ கம் இழைக்கப்பட்டதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதுவரை எங்களுக்கு எந்த ஒரு தீர் வையும் பெற்றுத் தராதவர்கள் ஏன் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டும் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர். (ஐ)

# மரண அறிவித்தல்



மலர்வு 1940 - 09 - 29

உதிர்வு 2018 - 01 - 12

சித்தன்கேணி, கலைநகர்
கலாபூஷணம், சிற்பசிகாமணி

## சீனிவாசகம் செந்தூர்ராசா

(காலைநகர் காங்கேயம்பதி முத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவலர்)

சித்தன்கேணி கலைநகரைப் பிறப்பிடமாக் கொண்ட சீனிவாசகம் செந்தூர்ராசா நேற்று முன்தினம் 2018.01.012 வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் – தையல்முத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் – சரஸ்வதி ஆகியோரின் அன்புமருமகனும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும், குமுதவல்லி, வசந்தவல்லி, விஜயவல்லி, (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மசிவம், இன்பவதனன் (சிற்பச் சக்கரவர்த்தி), சதானந்தராஜா (அமெ ரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நேசமலர், சிறீராஜ மூர்த்தி (ஓய்வூதியர்), வதனரானி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருளானந்த சிவம், சிற்பஞான பண்டிதன் சிவஞானமணி, அமரர் பகரசிங்கம், அமரர் அருமைநாயகம், குகானந்தராசா பரமேஸ்வரி (பிரான்ஸ்), புனிதபுஸ்பம், முத்துச்சிவராசா (பிரான்ஸ்) மகமாரியம்மா, பவளம்மா, அமரர் சச்சிதானந்தன், சிவஞானபோதலிங்கம், கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேந்திரேசன் (ஆய்வு கூட உத்தியோகத்தர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), திலகரேசன் (பிரான்ஸ்), வினிஜா, பேர்சன், அமரர் சஞ்சீவன், சிலக்ஷனா (அமெரிக்கா), சயந்தா (அமெரிக்கா), கேசினி (அமெரிக்கா), லக்சியா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 2018.01.15 திங்கள்கிழமை மு.ப 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கொற்கைத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

கலைநகர்,
சித்தன்கேணி

தகவல்: குடும்பத்தினர்
077 979 0821, 077 904 3660,
077 225 0896

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எந்திரன் 2.0 படமும் அரசியல் பிரவேசமும்

ரஜனியின் எந்திரன் படம் சுமார் 500 கோடி பட்ஜெட்டில் மெகா இயக்குநர் சங்கர் இயக்குகிறார் என்பது அனைவரும் அறிந்த செய்தி. இப்படம் வரும் தீபாவளிக்கு வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இது பாகுபலியின் 1,500 கோடி வசூல் சாதனையை முறியடிக்குமா, அது சாத்தியமா என்பதே இன்றைய இந்திய சினிமாவின் கேள்வி. இதற்கு வலுவான கதைக்களம் தேவையாய் இருப்பினும், வியாபாரம் பெருமளவு இருந்தால் மட்டுமே 1,500 கோடி என்ற இலக்கை முறியடித்து 2,000 கோடி என்ற சாதனையை எட்ட முடியும் என்பதை அறிந்த எந்திரன் படக்குழுவும், பா.ஜ.கவும் சேர்ந்து, திட்டமிட்டு செய்ததுதான் ரஜனி அரசியல் பிரவேசம் என்ற அறிவிப்பு. என்ன அதிர்ச்சியாக உள்ளதா? ஆனால், இதுதான் உண்மை. இதுதான் இலுமிநாட்டி அரசியல் என்பது. நம்மை முட்டாளாக்கி நம்மிடம் கொள்ளையடிக்கும் நூதனத் திட்டம்.

ரஜனி கடந்த 20 வருடங்களாக படத்தில் நடிப்பதற்கு சம்பளம் என்று எதுவும் வாங்குவதில்லை. லாபத்தில் 30 வீதப் பங்கு என்பதே ரஜனி 'டீல்' ஆகும். அதன்படி இத்திட்டம் வெற்றிகரமாக முடிந்தால் ரஜனிக்கு கிடைக்கப்போகும் லாபத்தொகை சுமார் 450 கோடி.

சரி இதனை எப்படி சாத்தியப் படுத்த திட்டமிட்டுள்ளனர்? அங்குதான் இவர்களின் அரசியல் உள்ளது. அண்மையில் ரஜனி அரசியலில் இறங்குகிறார் என அறிவித்தாலும், அதில் மிக சமீபத்தில் அடுத்த 3 மாதங்களில் நடைபெற இருக்கும், உள்ளாட்சி தேர்தலில் போட்டியில்லை, என்று அறிவித்தார். பலத்தைக் காட்ட உள்ளாட்சி தேர்தலை விட பெரிய வாய்ப்பு ஏதும் இருக்காது. ஆனாலும், மக்களுடன் எளிதில் இணைய வாய்ப்புள்ள உள்ளாட்சியைத் தவிர்த்து, ஏன், சட்டமன்ற பொதுத் தேர்தலில் மட்டும் 234 தொகுதிகளிலும் போட்டி என்ற அறிவிப்பு? இதற்கு ஒருங்கிணைக்க கால அவகாசம் தேவை என்று காரணம் சொல்லப்பட்டாலும், ரஜனி நினைத்தால், தமிழகமெங்கும் உள்ள ரசிகர் மன்றங்களை ஒருவாரத்தில் ஒருங்கிணைத்து, கட்சியாக மாற்றி உள்ளாட்சி தேர்தலில் களமிறங்குவதென்ன சாத்தியப்படாத ஒன்றல்ல. நிச்சயம் சாத்தியமே. இருந்தும் ஏன், இந்த தள்ளிப்போடும் அறிவிப்பு? அங்குதான் இருக்கிறது இவர்களின் மாஸ்டர் ப்ளான்.

பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் முன்னர் எந்திரனை வெளியிட்டு லாபம் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில், தான் பொதுத்தேர்தலில் மட்டும் களமிறங்குவது என்ற திட்டம்.

சரி இந்த அரசியல் பிரவேச அறிவிப்பை வைத்து எப்படி லாபம் சம்பாதிப்பார்கள்? ரஜனிக்கு ஊர்தோறும் மன்றங்கள் இருந்தாலும் அதில் பெரும்பாலானவை பதிவு செய்யப்படாமலும்,, பதிவு செய்யப்பட்டாலும் எந்த நடவடிக்கைகளும் இன்றி செயல்படாமலும் இருக்கின்றன. இதனால் எந்திரன் 1, எதிர்பார்த்த அளவிற்கு லாபம் ஈட்டவில்லை. ரஜனியின் முந்தைய கால அரசியல் நுழைவு ஏமாற்றங்கள் இதற்கு காரணமாகச் சொல்லப்படுகின்றன. இந்நிலையில் மன்றங்களை புதுப்பித்து, பதிவு செய்யப்படாதவற்றையும் இணைத்தால் சுமார் 2 லட்சம் மன்றங்கள் வரும் என்று எதிர்பார்க்கின்றனர். எந்திரன் பட வெளியீட்டின்போது இம் மன்றங்கள் மூலமாக நேரடியாக ரசிகர் காட்சிகள் என்ற பெயரில் டிக்கெட் விற்பனை செய்தால், மன்ற நிர்வாகிகள் எவ்வளவு செலவு செய்தேனும் நிச்சயமாக வாங்கியே ஆவர்.

ஒரு மாநகராட்சியில் உள்ள மன்றம் ஒன்றுக்கு சுமார் ஐந்து லட்சம் முதல் கிராமப்புற மன்றங்களுக்கு 50 ஆயிரம் வரை இலக்கு வைத்தால் 2 லட்சம் மன்றங்கள் மூலமாக 2,000 கோடி என்ற இமாலய இலக்கை எளிதில் கடக்கலாம் என்று கணக்குப் போட்டுள்ளனர்.

இதனால் ரஜனிக்கு பாதிப்பு வராதா? ரஜனி ரசிகர்களே அவர்மீது கோபம் கொள்ளமாட்டார்களா என்றால், ரஜனி அரசியலுக்கு வராமல் இருந்தால் தானே கோபம் எல்லாம் வந்து தோற்றாலோ, தோற்ற பின்னர் விலகினாலோ, அவர் மீதான பலியை சுலபமாகக் கடக்கலாம் தானே. ஏனெனில் 1996 இல் இருந்த நிலைபோன்று இப்போது இல்லை என்பதனை ரஜினி உணர்ந்தே உள்ளார். 2004 நாடாளுமன்றத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக உண்ணாவிரதமே நடத்தியும் போட்டியிட்ட 6 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர்.

மேலும், தன்மீதான மோடி ஆதரவாளர் என்ற முத்திரையும், தன்னுடைய இந்துத்துவ அரசியல் கண்ணோட்டமும் அவ்வளவு எளிதில் கடந்துவிடக் கூடியதல்ல என்பதையும் அறிந்தே வைத்துள்ளார். இதனையும் மீறி ரசிகர்கள் வாக்குப் போட்டாலும், மக்களிடம் இது எந்த அளவிற்கு எடுபடும் என்பது கேள்விக்குறி. தோல்வியே என்றாலும் சுமார் 10 முதல் 15% வாக்குகளை ஈர்த்துவிட்டால் போதுமானது என்று காய் நகர்த்துகிறார்.

இதனால் இந்த வாக்குகளை கொண்டு எதிர்காலத்தில் பா.ஜ.கவிற்கு ஆதரவு தெரிவித்து தன் வாக்கு வங்கியை பா.ஜ.கவிற்கு ஆதரவாக மடைமாற்றி ஓய்வு பெறவும் திட்டமிட்டுள்ளார்.

**- ராமகிருஷ்ணன் -**

இதன் காரணமாக, ரஜனி கட்சி ஆரம்பிக்க தேவையான நிதி முழுவதையும் தாங்களே ஏற்றுக்கொள்வதாகவும், இதனை ராமகிருஷ்ண மடம், ஈஷா மையம், சங்கரமடம் போன்றவற்றின் மூலமாக கொடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே எப்படிப் பார்த்தாலும் ரஜனிக்கு நயா பைசா நட்டமின்றி, நானூற்று ஐம்பது கோடி லாபம் (450 கோடி) தரப்போகும் பலே திட்டமே ரஜனி அரசியல் நுழைவு.

## "கட்சி முக்கியம் இல்ல; நல்லவனுக்கு போடு வாக்கு!"

என்ன நடக்குது இங்க...?
ஆருக்கும் அறிஞ்சா தெரிஞ்சா சொல்லுங்கோ!
கோழி பிடிச்ச கள்ளனும்
ஆட்டுக்கிடாய் திருடனும்
சங்கத்தில சுருட்டினவனும்
ஊரில காவாலியா திரிஞ்சவனும்
ஒண்டுக்கும் உதவாதுகளும்
கும்பிட்டபடி நிக்கினம்...!

வெள்ளை வேட்டி
வெள்ளைச்சேட்டு
போட்டால் நல்லவனாகிவிடுவம்
என நினைக்கும் கோமாளிகள்!
கோட்டுப்போட்டுரையும் கட்டி
கும்பிட்டு நிண்டா எண்ட நினைப்பு!
என்ன நடக்குது இங்க...?
ஆருக்கும் அறிஞ்சா தெரிஞ்சா சொல்லுங்கோ!

மதவு கட்டுறதுக்கும்...
குச்சொழுங்கையில் களிமண் போடுறதுக்கும்..
சந்தையில வரி வாங்குவதற்கும்...
பொதுக்கக்கூசு கட்டுறதுக்கும்...
தமிழ்த்தேசியத்துக்கும் என்ன தொடர்பு?
என்ன நடக்குது இங்க...?
ஆருக்கும் அறிஞ்சா தெரிஞ்சா சொல்லுங்கோ!

ஒற்றையாட்சிக்கும்
சமஷ்டிக்கும்
அரசியல் தீர்வுக்கும்
உள்ளூராட்சி சபைக்கும்
என்ன தொடர்பு?

என்ன நடக்குது இங்க...?
ஆருக்கும் அறிஞ்சா தெரிஞ்சா சொல்லுங்கோ!

மானத்தமிழன் எண்டா வாக்குப்போடு
ஈழத்தமிழன் எண்டா வாக்குப்போடு
கூவித்திரியும் விசிலடிச்சான் குஞ்சுகள்!

மானத்தமிழனுக்கும் ஈழத்தமிழனுக்கும்
உள்ளூராட்சி தேர்தலுக்கும்
என்னடா சம்பந்தம்?
என்ன நடக்குது இங்க ?
ஆருக்கும் அறிஞ்சா தெரிஞ்சா சொல்லுங்கோ!

உயிரோடு இருக்கும் போது
எட்டிப்பாக்காத கூட்டம்..
செத்தபிறகு ஓடி வந்து
ஒப்பாரி வைக்கினம்!

என்ன நடக்குது இங்க...?
ஆருக்கும் அறிஞ்சா தெரிஞ்சா சொல்லுங்கோ!

முப்பது வரிசமா போடாத றோட்டு
ஊரெல்லாம் குப்பை
உடைந்த கோயில்கள்
உடைந்த கரும்பலகை
மரநிழலில் சந்தை
உடைஞ்ச மதவு
பனைநிழலில் நிண்டு ஏறும் பயணிகள்
மஞ்சள் நிறத்தில் தண்ணீர்
அவசரத்து அம்புலன்ஸ் வரமுடியாத வீதி
அம்பது கட்டை தள்ளி இருக்கும் ஆசுபத்திரி
அவலங்கள் கொஞ்சமெண்டாலும்
நீங்கவேணும்!
அதற்கு...

நல்லவனைக் கண்டறிந்து
புள்ளடி போடு!
உண்மையா ஊரை நேசிக்கிறவனுக்கும்
நெஞ்சுக்கு நேரா கதைக்கிறவனுக்கும்
நேர்மையா ஒரே இடத்தில
இருக்கிறவனுக்கும்
கவனமா பாத்து வாக்கை போடு!

எந்தக்கட்சியும் முக்கியமில்ல...
எந்தச்சின்னமும் தேவையில்லை...
ஏனெண்டால்;
இது நாடாளுமன்ற தேர்தல் அல்ல
ஊராளும் தேர்தல்.

ஊரில நல்லவன் ஆரெண்டு பாத்து...
அவனவன் கண்ணியத்துக்கே வாக்கு!

அத்தானும் மச்சானும் ஒரு கட்சி
மாமனும் மருமோனும் இன்னொரு கட்சி
மாமியும் மச்சாளும் வேறொரு கட்சி

உனக்கு அவை ஆரெண்டது முக்கியமில்லை
ஊருக்குள்ள அவை ஆரெண்டதே முக்கியம்!

போடும் வாக்கை பாத்துப்போடு!
இல்லையெண்டால்...
நாளைக்கு
தேர்தல் முடிஞ்சதும்...
உன் வீட்டு கோழிகள்
கூட்டோடை ஒரே இரவில்
மொத்தமா காணாமல்ப்போகும்!
கவனம், அனைவரும் கவனம்!

**தமிழ்ப்பொடியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.